# தமிழரசு

சனவரி 16, 1973

40 காசு




# அரசு — மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு — வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

மலர்-3

இதழ்-14

# தமிழரசு

16-1-1973

## முதல்வர் கலைஞர்
அளிக்கும்
## பொங்கல் செய்தி

**5 கவிஞர்கள் படைக்கும் கவிதைப் பொங்கல்**

**வெள்ளம் விளைத்ததோ வேதனை - அரசு விரைந்து உதவியது சாதனை!**

படத்தொகுப்புடன் சிறப்புக் கட்டுரை

மற்றும்

வழக்கமான பகுதிகள்



இந்த
இதழுடன்
இலவச இணைப்பு
நல்வாழ்வு
பொங்கிட...

# முத்தாரம்

சாமி

தழைத்துக் குலுங்கும் தண் மலர்ப் பொழில். ஆங்கு மழைக் கூந்தற்காரி—பேரழகி யொருத்தி அவள் இடைக்குப் பொன் வேய்ந்த துகில் பூண்டு நிற்கின்றாள், அணைக்கும் காதலனை அழைக்கும் கண்கொண்டு! கன்னங்களில் தேன் மொண்டு! கிள்ளை அவள் பெயர். பல், முல்லை; இதழ், சர்க்கரை வில்லை.

அவனே, தமிழழகன். இளவணிகன். பருவமயில் ஆடுதற்கு முகில் கூட்டும் கண்ணுடையான். வளரும் மலைத் தோளுடையான். வளவன் பெயரால்.

அவன், விற்காட்டும் புருவத்தாளை—தற்காத்துத் தற்கொண்டான் பேணுகின்ற கற்புக்கருவத்தாளை—சந்திக்க வருகின்றான்; பந்திக்கு முந்துகின்ற பசிகாரன் வேகத்தில்.

கனிமரங்கள் தலைநாணும்—அவள் எழில் தருவாய் நிற்கின்ற காட்சி கண்டு; வந்து விட்டான் வளவனென்ற சேதி தன்னை அங்கிருக்கும் சருகுகளின் சலசலப்பால் அறிந்து கொண்டாள். ''அத்தான்'' என்பதற்குள் அணைத்துவிட்டான் பின்னிருந்து; கொத்தாக இன்பம்—குலை குலையாய்ச் சுவை மொழிகள்—காதல் அலை முழங்கும் இரு கடல்கள்—பெருவிருந்து—நீண்ட மௌனம். விடியற் பறவைகளின் பண்கேட்டு விழித்தெழுந்தார்.

''நீலவிழி நெருப்பாகச் சிவந்தது அடி என் கண்ணே'' என அவன் கூற, ''ஆமத்தான்! அங்கென்ன வாழ்கிறது?'' எனச் சொல்லி மீண்டும் தழுவுகின்றாள்.

''இனி நாம் இதுபோல் ஆடிப் பாடிட இருபத்துத் திங்கள் ஆகும் பெண்ணே—நாளை மறு நாள் ரோம் நகரம் போகின்றேன் கண்ணே.''

''கட்டழகா! கடலலையில் கட்டுமரம் போலத் தவிப்பதற்கோ பிறந்தேன்? இல்லை—இந்தப் பயணத்தைத் தவிர்ப்பதற்குத் துணிந்தேன்.''

''தடை வேண்டாம்—தணல் வேண்டாம் உன் விழியில். புனல் கடந்து ஒளிமுத்து விற்றால், மடை திறந்த வெள்ளம் போல் பொற்காசு குவியும். தமிழர் வளத்தைத் தரணி அறியும். விடைகொடு பாவாய்—அத்துடன் விருந்தளிக்கும் உன் இதழ்க் கடையை இங்குக் கொடு.''

''முத்துச் சுமை யேற்றிக் கத்து கடல் கீறிச் செல்கையிலே, குத்து விளக்கொன்றை இங்குச் செத்து மடிய விட்டுச் செல்கின்றோம்........ என நினைப்பீரா அத்தான்?''

''நினைக்க மாட்டேன் நேரிழையே........உனை மறந்தன்றோ நினைப்பதற்கு.''

''களவொழுக்கம் புகுந்து விட்டோம்—நாளை மறந்து விட்டால் நில நடுக்கம் என் வாழ்வில் இதை உணர்வீர்.''

''மூச்சு வாங்குவதற்கும், விடுவதற்கும் நினைப்பை வைத்துக் கொள்வதில்லை, என் உயிர் மூச்சே! ஏதேதோ எண்ணாதே. நீயின்றி நானில்லை, நிலவின்றி வானில்லை.''

''விண் மீன்கள் படையெடுத்தால்?''

''புலால் உண்ணேன்.''

''ரோம் நாடு அழகிகள் வாழ் தேன் கூடாமே.''

''அங்கு, நானோர் முடவனாயிருப்பேன். கொம்புத்தேன் தமிழகத்தில் உண்டென்று உன் கொய்யா இதழ் நினைத்து உறங்குவேன். கற்பனையில் உண்ணுவேன்.''

''வெளிநாட்டுக் கனியொன்றைச் சுவைப்போமே யென எண்ணி விட்டால்........?''

''அணிலா நான்? பலகனி சுவைக்கும் பண்பில்லை எனக்கு''

''பரத்தையர் நட்பு, குற்றமில்லையெனக் கொண்டு விட்டால்..........?''

''தமிழர் பண்பு இன்று அஃதேயெனினும் நான் விதிவிலக்கு; வீண் ஐயத்தை நீ விலக்கு.''

பிறகு பேச்சில்லை. இருபது திங்கள் பிரிவுக்கும் சேர்த்தளித்தார்கள் ஒருவருக்கொருவர் இன்பச் சுவையை. பாலைவனப் பயணம் போகும் ஒட்டகம் போல, இருபது திங்கட்கு இன்பத்தை மூட்டை கட்ட இடந்தரவில்லையே இயற்கையென வருந்தி நின்றார். பின் பிரிந்தார், நன்றாக விடிந்து விட்டதால்.

* * *

தென்பாண்டிக் கடல் முத்தை முதுகிற் சுமந்து தமிழகத்து நாவாய் ஒன்று ரோம் நோக்கிப் போகும் காட்சி. அதன் தளத்தினிலே வளவன் நின்று, உளத்தினிலே மூண்டுவிட்ட காதல் தீயால் கிள்ளையை எண்ணிச் சிறு பிள்ளைபோல் அழுதான். ''ஏன் சோகம்?'' என்று ஒரு தேன் குரல் கேட்டுத் திரும்பினான். கிள்ளையினும் கவின் மிக்காள். கீழ்வானத்துச் சூரியன் போல் கன்னங் கொண்டாள். உடலெடுப்பாய்த் தோன்றுகின்ற உடையமைப்பு; காதலுக்கு வாவென்று தூது விடும் கண்ணின் கடை அழைப்பு; விற்புருவம்; அதன் மேலே விண்மீன்கள் போலே ஒளிர்கின்ற புள்ளிக் கூட்டம்; கார் கூந்தல்—கட்டி முடிந்திருக்

கும் காட்சிக்கு இரண்டு நாட்கள்—இருபது ஆட்களுக்குமேல் பிடித்திருக்கும்.

தாமரை மலர் மீது வண்டொன்று அமர்ந்தது போல், அவள் முகம்மீது ஓர் அழகுப் பரு. இன்ப உரு.

யாரென்றான், ரோமென்றாள்; பெயர் கேட்டான். 'லெஜியா, பெருவணிகன் மார்க்கசின் பேத்தி'—தகவல் தந்தாள். காதல் அகவல் பாடும் அவள் விழி கண்டான். புரிந்து கொண்டான், அவள் நெஞ்சம்.

''மயில், மிளகு, முத்துத் தரும் தமிழகம்—எனக்கு மையல் தீர்க்கும் அழகனையும் அளித்தது '' என்றாள். "அவன் யார்?'' அவன் கேட்டான். துணிச்சல்காரி, அவன் தோள் சாய்ந்து '' நீர்தான் '' என்றாள். ''கடல் நீர் கரிக்குமம்மா'' எனக் கேலி பேசி அகன்று விட்டான். "பருகுதற்குத் தேவையில்லை, என் இதயப் படகு மிதப்பதற்குத் தேவை'' யென்றாள். ''பாய் கட்டிப் படகு நீ ..........காற்றடித்த பக்கமெல்லாம் செல்லாதே.....கற்புச் சுக்கானை ஒழுங்காய்ப் பிடி '' யென்றான். ''காற்றும் நீர்.....படகும் நீர்.......பாய்மரமும் நீர் .....சுந்தரத் திருப்பம் தரும் சுக்கானும் நீர்...... இந்த ஓடம் ஊர்கின்ற கடலும் நீர்.............

''கடலும் நீர்தான்.''

''என் கண்களிலும் அது தான்.''

''கவனித்தேன்...... விழி நீரில் என்னை மிதக்க விடாதே—

விடுவித்து விடு தங்கையே என்னை.''

''தங்கை யென்று அழைக்கின்றீர்............?''

''திகைப்பானேன். தமிழகத்தின் பெருமைசார் பண்பு தாயே அது.''

''ஆண்டவன் அளித்த அழகிற்கு நீங்கள் தரும் மதிப்பு இது தானா?''

''ஆண்டவனை அளித்தார்களே, அவர்களையே தமிழகம் மதிப்பதில்லை.''

''அழகைக் கூட அப்படித் தானா?''

''இல்லை........ ரோமானியரைப் போல், தமிழர் அழகிற்கு அடிமை யாவதில்லை, அழகை வியப்போம்—வளர்ப்போம்—மதிப்போம்— இவ்வளவும் எங்கள் நாகரிக இலக்கணத்திலிருந்து சிறிதும் நழுவாமல்.''

''என் ஆசை வெறும் கனவு தானா?''

''வருந்துகிறேன். என்னை முன்பே இன்னொருத்திக்கு ஒப்படைத்து விட்டேன், லெஜியா.''

''யார் அந்தக் கொடுத்து வைத்த கோகிலம்?''

''கிள்ளை அவள் பெயர்.''

''அவள் வாழ்க—இதோ என் அன்பின் அடையாளமாக அவளுக்கு இந்த முத்து மாலையை அணிவிப்பீர்களா?''

''ஆகட்டும்.''

''அவளை நான் மதிக்கிறேன்; அவள் பெரும் பேறு பெற்றவள். கற்புடைய கட்டழகனைப் பெற்ற அந்த நல்லாள் வாழ்ந்திடுக. வளவர் கோமானே.... தங்கள் அன்பு நினைவாக எனக்கு ஏதாவது..........''

''இதோ.......... இதயத் தூய்மையை வெளிப்படுத்தும் பரிசு........ இந்த முத்துக் கணையாழியை அணிந்து கொள். ..........இது தங்கைக்கு அண்ணன் தரும் அணிகலன் ..........''

இருபத்துத் திங்கள் கழிந்தன. ஒரு திங்கள் வான் நீங்கிச் சோலையிலே வந்ததுவோ எனத் தக்க காட்சி; கிள்ளை நிற்கின்றாள், இன்பக் கொல்லையிலே, அத்தானின் அன்புத் தொல்லையிலே அகப்பட்டுக் களிக்க! 'முத்தம் பெறுவதற்கு



முன்பாகக் கரம் ஏனோ கன்னத்தைத் தடவுகிறது? சத்தம் வரும் திக்கெல்லாம் ஏனோ கண் நோக்குத் தாவுகிறது? என்னை மீட்ட வரும் யாழரசன் எங்கே யென்று இதய வீணை ஏனோ தவிக்கிறது? ஏனோ தாபம் தவிக்கிறது? கருகிப் போகும் முன்னாலே பயிர்க்கு மழை போலவே-உருகிச் சாகும் உளிபடாச் சிலை முன்பு ஒளித் தமிழன் வந்துவிட்டான். ''அத்தான்'' என்றாள். இதழ்ப்போர்; முழவின்றி, முன் அறிவிப்பின்றி, முடிவுமின்றித் தொடங்கிற்று; இடையிடையே சொல் முத்து.

'வாணிபம் எவ்வாறெ'ன்றாள். ''மிகவளம்'' என்றான். 'மின் வெட்டுக்காரிகள் யாராவது?.. ..........என இழுத்தாள். ''யாருமில்லை'' யென்று கூறி, ''ஆரம் ஒன்று கொண்டு வந்தேன்; அணிந்து கொள்'' என எடுத்தான்.

''ஏது இது?''

''ரோம் நகர வேலைப்பாடு.. ......தமிழ் நாட்டு முத்து.''

''யார் அளித்தார்?''

''ஒருத்தி தந்தாள் உனக்காக'

''அவள்?''

''என் தங்கை போல .... ரோம் நாட்டுக்காரி.''

''உண்மைதானா?''

''உன் மீது ஆணையாக .... ......ஒளிர்பூங் கொம்பே: உன் கழுத்தை இங்குத் தந்திடு.''

''அத்தான் ........ இந்த முத்துக் கணையாழி கண்டீரோ?''

எனக் கேட்டாள் கிள்ளை. கண்டுவிட்டு வியப்படைந்தான் மணப்பிள்ளை.

''யாரளித்தார் எனக் கேட்பீர்? ஒரு தமிழன்—உயர் தமிழன் தந்தார்.''

''யார் அந்தத் தமிழன்?''

''எனக்கு அண்ணன் போல',

''உண்மையா?''

''ஆமாம் ....... லெஜியாவுக்கு அவர் அண்ணன் ....''

''லெஜியா—நீயே தான் ..?''

''அத்தான் .. ....நானேதான் லெஜியா''

''கிள்ளை . ' முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்பதை மறந்தனையோ? ''

''மறக்கவில்லை ...... விதி விலக்கு எனக்கு மட்டும்.''

சிரித்தான் அவன் ... அவள் கழுத்தில் முத்தாரம் அணிவித்தான். அவள் சிரிப்பு முத்தாரம் தந்தாள். பின்னர் இரவெல்லாம் முத்தாரம் தொடுத்தார் இருவருமே.



## சூரியகாந்தி எண்ணெய்

சூரியகாந்தி எண்ணெய்யில் எளிதில் செரிக்கப் படக் கூடிய உடல் நலத்திற்கு ஏற்ற கொழுப்புச் சத்து உள்ளது. உயிர்ச் சத்து 'ஏ, பி, டி, கே, (vitamin A, B, D, K) ஆகியவை சூரியகாந்தி எண்ணெய்யில் அடங்கியுள்ளன.

சூரிய காந்தி எண்ணெய் இரத்த அழுத்தம் (Blood Pressure), இருதய நோய் (Heart attack) ஆகிய நோய்களினால் அவதியுறுவோர்க்கு மிகவும் ஏற்றதாகும். சூரிய காந்தி எண்ணெய் தமனிகளில் தடிப்பு ஏற்படுவதைத் (Arteriosclerosis) (இரத்த அழுத்தம் ஏற்படுவதற்குரிய மூலகாரணம்) தடுக்கிறது.

சூரிய காந்தி எண்ணெய் நீரிழிவு (Diabetes), இருமல், நுரையீரல் கோளாறு (சுவாசக்கோளாறு), வயிற்றுக் கடுப்பு முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல இயற்கை மருந்தாக அமைகிறது.

சூரிய காந்தி எண்ணெய் நோய் பரப்பும் நுண்ணுயிர்களை (Bacteria) அழிக்க வல்லது. எனவே அன்றாட உணவில் சூரிய காந்தி எண்ணெய்யைப் பயன்படுத்துவது மிகவும் சிறந்தது.

சூரிய காந்தி எண்ணெய் விரைவில் உலரக் கூடிய தாகையால் வார்னிஷ் பெயிண்டு, சோப்பு முதலியன தயாரிக்கவும், மற்றும் கம்பளித் தொழிற்சாலைகளிலும், மரத்தொழிற்சாலைகளிலும் பயன்படுகிறது.





செய்தியே! சித்திரமே!
சுரங்க ரயில் பாதை
சென்னை நகரில் 26 கிலோ மீட்டர் தொலைவுக்கு ரூபாய் 180 கோடி செலவில் சுரங்க ரயில் பாதை அமைக்கும் திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும்படி மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வயல்களில் படிந்துள்ள மண்ணை அகற்றும் செலவு அனைத்தையும் தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது
தமிழ்நாடு அரசு
டில்லி
DELHI
தமிழக அரசு உணவுப்பொருட் கிடங்கு
மத்திய அரசின் இருப்புக்கு 30,000 டன் அரிசி அளிக்கத் தமிழக அரசு இசைந்துள்ளது
சாமி

# உழவர்களுக்குப் பொங்கல் பரிசு



"உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது!" என்ற பழமொழியை உயர் விளைச்சல் ரகங்கள் பொய்யாக்கி விட்டன. அத்தகைய உயர் விளைச்சல் ரகங்களில் அதிக மகசூல் அளிப்பது 'அதிசய நெல்' எனப்படும் ஐ.ஆர். 8 ரகமாகும். அதற்கு அடுத்தபடியாக அதிக மகசூல் கொடுப்பது 'அதிசயக் கிச்சலி' எனப்படும் ஐ. ஆர். 20 ரகமாகும். ஆனால், ஐ. ஆர். 8 ரகத்தைவிட ஐ. ஆர். 20 ரகம் கீழ்க்கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளது.

* கிச்சலி அரிசி போல் ஐ.ஆர். 20. அரிசி சன்னமாக உள்ளது.
* ஐ. ஆர். 20 அரிசி எல்லாராலும் விரும்பி உண்ணப்படுகிறது.
* ஐ.ஆர். 20 ரகம், ஐ.ஆர். ரகத்தைவிடப் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது.
* ஐ. ஆர். 20 நெல்லும், அரிசியும் விற்பனைக் கூடங்களில் அதிக விலைக்கு விற்பனையாகின்றன.

இத்தகைய அருங் குணங்களைப் பெற்றிருப்பதால், இந்த ஆண்டில் டிசம்பர் 15 முதல் மே வரையான நவரைப் பருவத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் 3,07,000 ஏக்கரில் ஐ. ஆர். 20 நெல் ரகத்தைக் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின்கீழ் சாகுபடி செய்யத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை முயன்று வருகிறது. அது போலவே ஐ. ஆர். 8 நெல் ரகத்தையும் மேற்கூறிய 3 மாவட்டங்களிலும் கடும் விரைவு பின்பருவத் திட்டத்தின் கீழ் 2,39,000 ஏக்கரில் பயிரிட வேளாண்மைத் துறை ஆவன செய்து வருகிறது.

மற்ற மாவட்டங்களிலும் தண்ணீர் வசதி உள்ள இடங்களிலெல்லாம் சனவரித்திங்களில் ஐ. ஆர். 8, ஐ. ஆர்.20 நெல் ரகங்களைப் பயிரிட்டு நல்ல மகசூல் எடுக்க இயலும்.

கடந்த சில ஆண்டுகளின் நவரைப் பட்டங்களில் ஐ. ஆர். 8 நெல் ஏக்கருக்கு 3,500 கிலோ வரை மகசூல் கொடுத்துள்ளது. அதுபோலவே ஐ. ஆர். 20 நெல் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் அளித்துள்ளது. எனவே கீழ்க்கண்டுள்ள சாகுபடிக் குறிப்புகளைப் பொங்கல் பரிசாக 'தமிழரசு' இதழ் சார்பில் அளிக்கின்றோம்.

அதிசய நெல் ஐ. ஆர். 8

அதிசயக் கிச்சலி ஐ. ஆர். 20

### சாகுபடிக் குறிப்புகள்.

பருவம்.—நவரைப் பருவத்தில் (டிசம்பர் 15 முதல் மே வரை) சாகுபடி செய்யலாம்.

#### வயது.

ஐ. ஆர். 8: 135 நாட்கள், ஐ. ஆர். 20: 125 முதல் 135 நாட்கள்.

#### விதையளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 18 கிலோ (14 படி) விதையை நாற்று விட வேண்டும்.

#### விதை நேர்த்தி

நோய் தாக்குவதை முன் கூட்டியே தடுக்க 18 கிலோ விதையுடன் 36 கிராம் (1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்துவீதம்) 'அக்ரசான் அல்லது 'செரசான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' அல்லது 'டில்லக்ஸ்' அல்லது 'காப்டான்' மருந்தைக் கலக்க வேண்டும்.

#### நாற்றங்கால் அளவு

ஒரு ஏக்கர் நடவு செய்ய 12 சென்ட் பரப்பளவில் நாற்று விட வேண்டும்.

#### நாற்றங்கால் தயாரித்தல்

நாற்றங்காலை நன்கு உழுது, 12 சென்ட் நாற்றங்காலுக்கு 2 வண்டி தொழு எரு அல்லது 1 வண்டி பசுந்தழை போடவும்.

பசுந்தழை போட்டிருந்தால், மறுபடியும் நாற்றங்காலை 2 முறை உழுது, பரம்படித்து 8 அடி அகலத்திற்கு ஒரு வாய்க்கால் வீதம் அமைத்து 8 அடி அகல மேடைப் பாத்திகள் அமைக்க வேண்டும்.

எட்டு அடி அகலமும், 54 அடி நீளமும் கொண்ட சென்ட் நாற்றங்கால் அமைப்பது சிறந்தது.

நாற்றங்காலின் நான்கு ஓரங்களிலும் வாய்க்கால் அமைத்து, மேடைப் பாத்திகளை நன்றாகச் சமப்படுத்தி மூன்றாங் கொம்பு விதைகளைச் சென்டிற்கு 1 1/2 கிலோ வீதம் எடுத்துக்கொண்டு, ஒரே சீராக விதைக்கவும்.

நாற்றுவிட்ட 3-ஆம் நாள் முளைநீர்விட்டு வடிக்கவும்.

அதன் பின் தேவையான பொழுது தண்ணீர்விட்டு வடிய விடவும். தண்ணீர் தேங்கி நின்றால் முளைகள் அழுகி விடக் கூடும்.

நாற்று நன்கு முளைத்து, வளர்ந்த பிறகு ஒரு வாரம் அல்லது 10 நாள் கழித்து இலேசாக நாற்றங்காலில் தண்ணீர் தேங்கலாம்.

#### நாற்றங்காலுக்கு மேலுரம்

நாற்று விட்ட 14-ஆம் நாள்— அதாவது நாற்றுப் பறிப்பதற்கு 10 நாட்கள் முன்பாக —12 சென்ட் நாற்றங்காலுக்கு 10 கிலோ யூரியா அல்லது 22 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாகத் தூவி விட வேண்டும்.

நாற்றங்காலுக்கு
மருந்து தெளித்தல்.

நாற்று விட்ட 17-ஆம் நாள் 12 சென்ட் நாற்றங்காலுக்கு, 6 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 15 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 12 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நாற்றுப் பறித்தல்

நாற்று விட்ட 24-ஆம் நாள் நாற்றுகளைப் பறிக்க வேண்டும்

நாற்றுகளைப் பறிக்கும் பொழுது வேர்கள் அறுந்து விடாமல் மிகவும் கவனமாகப் பறிக்க வேண்டும்.

நாற்றுகளைப் பறித்த அன்றே நட்டுவிட வேண்டும்.

நாற்றுகளை முடிகளாகக் கட்ட நாற்றுகளையே வளைத்துக் கட்டக் கூடாது. அவ்வாறு செய்தால் நாற்றுகள் முறிந்துவிடக் கூடும். எனவே, தாள் வைக்கோல் கொண்டு நாற்று முடிகளைக்கட்ட வேண்டும்.

நாற்று முடிகளின் வேர் பாகத்தைக் கையில் பிடித்துக்கொண்டு நாற்றின் மேல் பகுதியை மட்டும் மருந்துக் கலவையில் நனைத்து எடுத்து நடவு செய்வது நல்லது. இவ்வாறு செய்ய 25 லிட்டர் தண்ணீரில் 12½ மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 25 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தையும், 62 கிராம் குமான் அல்லது 125 கிராம் டைத்தேன் மருந்தையும், கலந்து, அக்கலவையில் நாற்றுகளின் மேற் பகுதியை மட்டும் நனைத்து எடுத்துப் பிறகு நடவு செய்ய வேண்டும்.

நடவு வயல் தயாரித்தல்

நாற்று விட்ட 14-ஆம் நாளில் நடவு வயலை உழவு செய்யத் தொடங்கலாம்.

நடவு வயலை இரும்புக்கலப்பையால் 3 முறை உழவு செய்ய வேண்டும்.

'கேஜ்வீல்' எனப்படும் கூண்டுச் சக்கரம் இணைத்த டிராக்டரைப் பயன்படுத்தினல், நிலத்தில் குறுக்கும் நெடுக்குமாக 2 முறை உழுது, பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

நடவு வயலுக்கு ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது 2,300 கிலோ பசுந்தழை இட வேண்டும்.



கூடுமானவரை 10 நாட்களுக்கு மேற்பட்ட பழைய சேற்றில் நடவு செய்யக்கூடாது.

அடியுரம்

நாற்று விட்ட 22 அல்லது 23-ஆவது நாளில், நடவு வயலில் கடைசி உழவு செய்யவும். கடைசி உழவின்போதுஏக்கருக்கு 45 கிலோ தழைச் சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவில் சத்துக் கிடைக்க 100 கிலோ யூரியா அல்லது 225 கிலோ அமோனியம் சல்பேட் 220 கிலோ சூப்பர் பாஸ்பேட், 60 கிலோ மியூரியேட் ஆப்பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 200 கிலோவையும், யூரியா 24 கிலோவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

15 : 15 : 15 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 235 கிலோவையும், 22 கிலோ யூரியாவையும் அடியுரமாக இட வேண்டும்.

அல்லது

16 : 16 : 16 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 220 கிலோவையும், 22 கிலோ யூரியாவையும் அடியுரமாமாக இட வேண்டும்.

அல்லது

16 : 20 : 0 கூட்டு உரத்தில் 175 கிலோவையும், 37 கிலோ யூரியாவையும், 60 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தையும் அடியுரமாக இட வேண்டும்.

நடவு செய்தல்

நாற்று விட்ட 24-வது நாளில், நாற்றுகளைப் பறித்து அன்றே நடவு செய்து விட வேண்டும். இதனல் விரைவில் பச்சை கட்டும்.

கூடுமானவரை நாற்றுகளை வரிசை வரிசையாக நடவு செய்வது சிறந்தது.

களிமண் பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 6 அங்குலமும், வரிசையில் பயிர் குத்துக்குக் குத்து (in-between 2 hills) 4 அங்குலமும் இடைவெளி விட்டு நடவு செய்யவும்.

மணற்பாங்கான நிலமெனில் வரிசைக்கு வரிசை 4 அங்குலமும், வரிசையில் பயிர் குத்துக்குக் குத்து, 4 அங்குலமும் இடைவெளி விட்டு நடவு செய்யவும்.

நடவு செய்த 1 முதல் 14
நாட்கள் வரை

நாற்று நட்டது முதல் 14 நாட்களில் பயிர்களில் புதியவேர் உற்பத்தியாகி, பயிர்கள் பச்சை கட்டுகின்றன. இக்காலத்தில் உருட்டுத் தண்ணீர் கட்ட வேண்டும். அதிக அளவு தண்ணீர் கட்டக் கூடாது.

நடவு செய்த 15-வது நாள்

வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு முதல்முறை களை எடுக்க வேண்டும். வரிசை வரிசையாக நடவு செய்திருந்தால் 'இன்டர்கல்ட்டிவேட்டர்' எனப்படும் இடை உழவுக் கருவியால் பயிர் வரிசைகளுக்கு இடையிலுள்ள மண்ணைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும். களை இல்லாவிட்டாலும் இவ்வாறு கிளறிவிடுவதால், தூர் ஏராளமாகக் கிளைக்கும். வரிசையில் உள்ள பயிர்களுக்கு இடையில் உள்ள களைகளைக் கைகளால் எடுக்கவும்.

சாதாரண முறையில் நடவு செய்திருந்தாலும் கைகளால் கிளறிவிட்டுக் களைகளை எடுக்கவும்.

முதல் முறை மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம்அல்லது 1 லிட்டர் 'ஹிலியோடாக்ஸ்' அல்லது 800 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்ட் கோம்பி' பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினேசான்' பூஞ்சாள மருந்தையும், 200 மில்லி லிட்டர் (10 மண்ணெண்ணெய் டின் அளவு)

தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் (Hand Operated Sprayer) தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் (Power Sprayer) கொண்டு மருந்து தெளிப்பதாய் இருந்தால் மேற் கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண் ணெண்ணெய் டின் அளவு) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 15 முதல் 30 நாட்கள் வரை

நடவு செய்த 15 முதல் 30 நாட்களில் தூர்கள் கிளைக்கத் துவங்கும். இக் காலத்தில் நடவு வயலில் 2 அங்குலம் (2 முதல் 3 விரற் கடை அளவு) தண்ணீர் கட்ட வேண்டும்.

நடவு செய்த 21-வது நாள்

முதல் முறையாக மேலுரம் இடவேண்டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவை மேலுர மாகப் பயிர் வரிசைகளுக்கு இடையில் தூவ வேண்டும்.

நடவு செய்த 30-வது நாள்

நடவு செய்த 15-ஆம் நாள் தெளித்தது போலவே இரண் டாம் தடவையாக மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம் அல்லது 1 லிட்டர் 'ஹிலியோடாக்ஸ்' அல் லது 800 மில்லி லிட்டர் 'மெட் டாசிஸ்ட்' கோம்பி பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' பூஞ்சாள மருந்தை யும் 200 லிட்டர் (10 மண் ணெண்ணெய் டின் அளவு) தண் ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் கொண்டு மருந்து தெளிப்பதாய் இருந்தால் மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் (3 மண் ணெண்ணெய் டின் அளவு ) கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 31 முதல் 35 நாட் கள் வரை.

இக்காலத்தில் களிப்பான நிலங்களிலுள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும். நிலம் ஈரமாய் இருக்க வேண்டும். ஆனால், வெடிக்கவிடக் கூடாது. மணற்பாங்கான நிலங்களில் நிலம் நனையும் அளவிற்குத் தண்ணீர் கட்டினால் போது மானது.

இருவகை நிலங்களிலும் மயி ரிழைக்குப் பெரியதாக வெடிப் புகள் ஏற்படவிடக் கூடாது.

இவ்வாறு செய்வதனால் தூர்கள் அதிகமாகக் கிளைக்கும்.

நடவு செய்த 36 முதல் 45 நாட்கள் வரை

இச்சமயத்தில் வயலில் 2 முதல் 4 அங்குல அளவிற்குத் (3 முதல் 7 விரற் கடை அள விற்கு) தண்ணீர் கட்ட வேண் டும்.

நடவு செய்த 40-வது நாள்

இரண்டாம் முறையாக நடவு செய்த 15-ஆம் நாள் செய்தது போலவே களை எடுக்கவும்.

நடவு செய்த 45-வது நாள்

மூன்றும் முறையாக மருந்து தெளிக்க வேண்டும். நடவு செய்த 15-வது நாளில் தெளித் தது போலவே தெளிக்க வேண் டும்.

நடவு செய்த 46 முதல் 50 நாட்கள் வரை

தூர் கிளைக்கும் உச்ச அளவுக் காலம் முடிந்து சூல் ஏற்படும் காலம். எனவே, இக்காலத் தில் 31 முதல் 35 நாட்கள் வரை யான காலத்தில் செய்தது போலத் தண்ணீரை வடிய விட வும்.



நடவு செய்த 55-வது நாள்

இரண்டாம் முறையாக (சூல் கட்டத்தில்) மேலுரமிட வேண் டும். ஏக்கருக்கு 33 கிலோ யூரி யாவை மேலுரமாகத் தூவவேண் டும். நடவு செய்த 63-வது நாளுக்குள் இரண்டாம் முறை யாக மேலுரமிட்டு விட வேண் டும்.

மேலுரமிட்ட பின், 200 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 மில்லி லிட்டர் என்ட்ரின் அல்லது 1 கிலோ கார்பரில் 50 சதம் பூச்சி மருந்தையும், 300 மில்லி லிட்டர் 'ஹினோசான்' மருந்தையும், 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

விசைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிப்பதனால், மேற் கூறிய அளவு மருந்தை 60 லிட் டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

நடவு செய்த 75-வது நாள்

நெற் பூக்களில் பால் பிடிக்கும் சமயத்தில் நாவாய்ப் பூச்சியின் தாக்குதலைத் தடுக்க ஏக்கருக்கு 5 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளையும், 5 கிலோ டி.டி.டீ. 5 சதத்தூளையும் கலந்து தூவான் மூலம் தூவுதல் வேண்டும். தூவான் கிடைக்கா விட்டால் மருந்தைக் கோணிப் பையில் இட்டு, கட்டிவிட்டு நன்கு குலுக்கலாம் அல்லது கையா லேயே தூவலாம்.

நடவு செய்த 105 முதல் 111 நாட்கள் வரை

நடவு செய்த 105 முதல் 111 நாட்களுக்குள் அறுவடை செய்யலாம்.

**வேண்டுகோள்**

மேற்கூறிய சாகுபடி முறை களை மேற்கொண்டால் ஐ.ஆர்.8 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,500 கிலோவுக்குக் குறையாம லும், ஐ.ஆர். 20 நெல் ரகத்தின் மூலம் ஏக்கருக்கு 3,000 கிலோ வுக்குக் குறையாமலும் மகசூல் எடுக்க முடியும். எனவே, மேற் கூறிய சாகுபடிக் குறிப்புகளைப் பொங்கற் பரிசாக ஏற்றுப் பயன டையுமாறு தமிழ்நாட்டின் உழ வர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

—ஆர். எம்.

# அட்டை சொல்லும் கட்டுரை

வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சி, வகை வகையான பட்டாடைகளுக்கும் மட்டில்லாப் புகழ் பெற்றது என்பதை உலகம் அறியும்.

சின்னஞ் சிறு கைகள் உருவாக்கும் சித்திரச் சேலைகள் பல, கண்ணைக் கவரும் வண்ணம் காட்சியளிப்பதை இங்கே காணலாம்.

ஏழை, எளிய மக்களால் நேர்த்தியாக நெய்யப்படும் பட்டுத் துணிகளுக்கு, இன்று நாடு நகரங்களிலெல்லாம் நல்ல வரவேற்பிருப்பதை நாமறிவோம்.

இந்த வரவேற்புக்கெல்லாம் காரணம், அதன் தரம் தான் என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பில், காஞ்சியில் இயங்கிவரும் கதர்ப்பட்டு உற்பத்திக் கூடத்தின் உள்ளே சென்றால்—

செந்தாமரை
சித்திரகலா
சசிகலா
வனமோகினி
மகேசுவரி

என்ற பெயர்களில்—பட்டுப் புடைவைகளைப் பார்க்கலாம்:




கதர் உடுத்துவோரின் தேவையை நிறைவேற்றும் நோக்குடன் முதல் பட்டு உற்பத்திக் கூடம் 1956-ல் கும்பகோணத்தில் துவக்கி வைக்கப் பட்டது. பின்னர் மூன்று ஆண்டுகளுக்குள் காஞ்சிபுரம், ஒசூர் மற்றும் ஆரணி ஆகிய இடங்களில் பட்டு உற்பத்திக் கூடங்கள் துவக்கப்பட்டன.

எவருமே வெளியிடாத புதிய 'டிசைன்'களில், பல்வேறு வண்ணங்களில் சரிகை வேலைப்பாடுகள் அமைந்த புடைவைகள், பாவாடைகள், வேட்டிகள், பொன்னாடைகள் முதலியன இங்கே சிறப்பாகத் தயாரிக்கப் படுகின்றன.

காஞ்சிபுரப் பகுதியிலுள்ள 150 நெசவாளர்கள் இந்த உற்பத்திக் கூடத்தினால் வருவாய் பெற்று வருகிறார்கள். குறிப்பாகத் தமிழகத்திலுள்ள 15 இடங்களில் கதர்ப்பட்டுத் தொழிலினால் ஏறத்தாழ 4,000 பேர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

முதலில் 25 விழுக்காடுகள் கூடப் பட்டு உற்பத்தி செய்ய இயலாததைக் கண்ட இத்துறை, இதன் தேவையை மேலும் அதிகரிக்கத் தமிழகத்தின் பல பகுதிகளில் பட்டு உற்பத்தி நிலையங்களைத் துவக்கி உற்பத்தியில் மும்முரம் காட்டியது. இன்று செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சை, சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, நெல்லை, முகவை, கோவை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 15 பட்டு உற்பத்தி நிலையங்கள் சிறப்பாக இயங்கி வருகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

கும்பகோணத்திலுள்ள பட்டு உற்பத்தி நிலையம், புடைவைகள், சட்டைத் துணிகள், துண்டுகள், வேட்டிகள், சிறிய சிறிய பாவாடைத் துணிகள் முதலியன உற்பத்தி செய்வதில் தனிச் சிறப்புப் பெற்றுள்ளது.

சேலத்திலுள்ள பட்டு உற்பத்தி நிலையம், நல்ல கவர்ச்சியான 'பார்டர்கள்' அமைந்த தர்மாவரம் வகைச் சேலைகளைத் தயாரிப்பதில் திறம் பெற்றுள்ளது.

ஆரணியிலுள்ள நிலையம் கவர்ச்சியான—மலிவான—மெல்லிய பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்வதில் புகழ் பெற்றுள்ளது.

மற்ற உற்பத்தி நிலையங்கள் உள்ள நரிக்கால்பட்டி (மதுரை), கண்மலியம் பட்டி (கோவை), வீரவநல்லூர் (திருச்சி), திருச்சி, திருவில்லிபுத்தூர் (இராமநாதபுரம்), ஓசூர் (தருமபுரி), வாலாசாப்பேட்டை (வட ஆர்க்காடு) ஆகிய இடங்களில் பட்டாலான சட்டைத் துணிகள் மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன.

"ஏழை எளிய மக்கள் வாழ வழிகோலும் வகையில் நாமனைவரும் கதர் வாங்கி உடுத்திட முன்வரவேண்டும்" என்று முதல்வர் கலைஞர் அவர்கள் தம் வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

"பெருத்த முதலீடுகள் தேவைப்படாத இந்தக் கதர்த் திட்டத்தை மாசறு பொன்னாய், வலம்புரி முத்தாய், நித்தம் நினைந்து வணங்கப்படுகின்ற தமிழ்த்தாய் பெற்றெடுத்த தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் மனமுவந்து ஏற்றுச் சாதனைகளைக் காட்டியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து இந்த அரசு இந்தக் கதர்த்திட்டத்தை வளர்த்து வருகின்றது என்பதை இந்த நாடு அறியும்."

"நமது உடம்பைப் போர்த்துக் கொண்டிருக்கின்ற கதர், நம்மையறியாமலே இந்த நாட்டு ஏழை எளிய நூற்பாளர்கள் நெசவாளர்களின் கண்ணீரைத் துடைக்கின்றது. கண்ணொளியும், வாழ்வொளியும் வழங்குகின்றது என்பதை அறிவீர்கள். இந்த நல்ல திட்டத்தை ஆதரிப்பது நாட்டு மக்களுடைய கடமை ஆகும். அண்ணல் காந்தி அடிகளின் திட்டங்கள் காலத்தால் அழியாதவை. சாகா வரம் பெற்றவை. இந்தக் கதர்த் திட்டம் மேன்மேலும் வளர்ந்து ஓங்கிட அனைத்துக் கட்சியாளரும், நாட்டு மக்களும் இக் கதரை வாங்கி அணிய விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன்".

பளபளப்பான பட்டுத் துணிகளை அணிந்து கலகலப்பாகக் காட்சியளிக்கும் நாம், அந்தப் பட்டுத் துணிகள் எப்படித் தயாராகின்றன என்பதைத் தெரிந்துகொள்வது நல்லதல்லவா ?

பட்டு நூல் — இது பெங்களூரிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. இந்த நூலுக்குக் 'கோரா' என்று பெயர். தரவாரியாகக் கிலோ கணக்கில் இது வாங்கப்படுகிறது. ஒரு கிலோ பட்டு நூலின் விலை ரூ. 170.

மைசூர் மாநிலத்தில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிலைப் பெருக்கிட 19 புதிய திட்டங்கள் செயலாக்கப்படவிருக்கின்றன. உணவுத் தாவரங்கள், பட்டுப் புழு வளர்ப்பு, விதை வினியோக நிறுவனம், விற்பனைக் கூட்டுறவு ஆராய்ச்சிப் பயிற்சி முதலியவை சம்பந்தப்பட்ட இத் திட்டங்களுக்காக மைய அரசு 1972-73-ஆம் ஆண்டிற்கு 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது, இத் தொழில் இந்தியா வெங்கும் வளர்வதற்கு வழிகோலுவதாகும்.

முதலில், பட்டு நூலை, எத்தனை இழை தேவையோ அத்தனை இழைக்கு இராட்டினத்தில் சுற்றிக் கொள்கிறார்கள். பிறகு அவ் விழையை இன்னொரு இராட்டினத்தில் பொருத்தி முறுக்கேற்றுகிறார்கள். முறுக்கேற்றிய நூல் நன்றாகத் தண்ணீரில் அலசிக்கழுவப்படுகிறது. பிறகு எந்த வண்ணம் தேவையோ அந்த வண்ணத்தைக் கொதிக்கின்ற நீரிலே பதமாகக் கலக்கிப்பட்டு நூலைத் தோய்த்து எடுக்கிறார்கள். இந்த வேலையை நல்ல அனுபவமுள்ளவர்களே செய்கின்றனர்.



பட்டு நூலுக்குச் சாயம் தோய்க்கப்படுகிறது

நூலுக்குச் சாயமேற்றியதும் அதனை நன்றாக உலரவைத்து, நெசவாளர்களுக்குத் தரப்படுகிறது. அதன் பிறகுதான் நெசவாளரின் கைவண்ணம் பட்டுப் பட்டுப் பளிச்சிடுகிறது.

புதிய புதிய 'டிசைன்'களில் அவ்வப்போது இங்குப் பட்டுத் துணிகள் தயாரிக்கப் பட்டு விற்பனைக்கு வருகின்றன. பல்வேறு வண்ணங்களில் சரிகை இழை கலந்த அந்தத் துணிகளைப் பார்த்துவிட்டால், துணிந்து வாங்கிவிட வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் வந்து விடும் !

இங்கே பற்பல புதுமையான 'டிசைன்'களை உருவாக்கிக் கொடுக்க ஓர் ஓவியர் இருக்கிறார். இவரது கற்பனையில் வடிவெடுக்கும் சித்திரங்கள் எண்ணற்றவை, எண்ணத்தை ஈர்ப்பவை. அவர் வரைந்து கொடுக்கும் அழகிய மலர்கள், கோடுகள், கட்டங்கள் முதலியன கவர்ச்சியானவை. அவை 'கிராப்' ((Graph)) அமைப்பில் மீண்டும் வரையப்பெற்று நெசவாளருக்குத் தரப்படுகிறது. நெசவாளர் அந்த டிசைனைத் தறிக்கு மேலேவைத்து, அதோடு பல நூலிழைகளைக் கட்டித் தொங்கவிடுகிறார். துணியை நெய்யும்போது, இந்த நூல்களை அவ்வப்போது இழுத்துக் கொள்கிறார். நெசவாளரின் கைத்திறமையால் டிசைனும் நெய்யப் பட்டு விடுகிறது ! இந்த அரிய காட்சியை நேரில் கண்டே மகிழ வேண்டும் !



பட்டு நூல் முறுக்கேற்றப்படுகிறது

பட்டுப் புடைவைகளில் ஒளி விடும் சரிகையைப் பார்க்கி

ரும். இந்தச் சரிகைதான் புடைவைக்கு மேன்மேலும் மெருகேற்றுகிறது. இது எங்கிருந்து நமக்குக் கிடைக்கிறது?

குசராத் மாநிலத்திலுள்ள சூரத்திலிருந்து இது தருவிக்கப்படுகிறது. இப்போது காஞ்சியிலேயே ஒரு சரிகைத் தொழிற்சாலை இயங்கப் போவதை நாமறிவோம். இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்கி விட்டால், நாம் சரிகையின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டாமல்லவா?

சூரத்திலிருந்து தருவிக்கப்படும் இந்தச் சரிகை, 'மார்க்' என்ற கணக்கில் வாங்கப்படுகிறது. 'மார்க்' என்பது எட்டுத் திரிகளைக் கொண்டது. எட்டுத் திரிகளின் மொத்த எடை ஏறத்தாழ 250 கிராம். ஒவ்வொரு திரியும் குறைந்தது 2,000 மீட்டர் இருக்கும். எனவே, ஒரு ''மார்க்'' அதாவது 250 கிராம் சரிகையின் நீளம் ஏறத்தாழ 20,000 மீட்டர். 250 கிராம் சரிகையின் தற்போதைய விலை ரூ. 185.

இந்தச் சரிகை இழையைப் பாவாக இராட்டினத்தில் சுற்றிக் கொள்வார்கள். பட்டுச் சேலைகளில் உள்ள பார்டரில் சரிகையினால் டிசைன் போடுவதற்குச் சரிகை 18 கெஜம் அல்லது 36 கெஜம் நீளத்திற்குப் பாவாகத் தயாரிக்கப்பட வேண்டும். அதனால் இந்த இராட்டினத்தைச் 'சரிகைப் பாவு இராட்டினம்' என்று கூறுவர்!

•
• •

சரிகை இப்படித்தான் தயாராகிறது: பட்டு நூலில் சுத்தமான வெள்ளி இழை இடைவெளி இல்லாமல் சுற்றப்பட்டு, அதன் மேல் பொன் மெருகு ஏற்றப்படுகிறது. ஒரு சரிகையில் தங்கம் 0.55 சதவீதமும், வெள்ளி 71.40 சதவீதமும், பட்டு 28.05 சதவீதமும் கலந்திருக்கும்.

இப்படிப் பட்டு நூலும், சரிகையும் தரம்பார்த்துத் தயாரிக்கப்படுவதால் கதர்ப் பட்டுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்து வருகிறது.

இதோ, சில புள்ளி விவரங்கள்! 1 புடைவை நெய்ய 450 கிராம் பதனப் படுத்தப்பட்ட பட்டு நூல் தேவைப்படுகிறது. சரிகை 40 கிராமிலிருந்து 150 கிராம் வரை டிசைனைப் பொறுத்துச் சேர்க்கப்படுகிறது. ஒரு பட்டுப் புடைவை தயாரிக்கச் சுமார் 15 நாட்கள் ஆகின்றன. ஒரு புடைவையின் விலை ரூ. 100-லிருந்து ரூ. 500 வரைக்கும் இருக்கும். ஏன், 1,000 ரூபாய்க்குக் கூடப் புடைவை கிடைக்கும், 'ஆர்டர்' கொடுத்தால்!

இங்குத் தயாரிக்கப்படும் காந்தியடிகள், வள்ளுவர், அறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர் ஆகியோரின் உருவம் பதித்த பொன்னாடைகள் சட்டம் போட்டுப் படமாக மாட்டி வைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பட்டு நூல் சரிகை உருவ அமைப்பின் விலை ரூ. 60.

கலையழகு மிக்க பொன்னாடைகளும் இங்கே ஏராளமுண்டு. இங்குத் தயாரிக்கப் பெற்ற எழில் கொஞ்சும் எடுப்பான பொன்னாடைகள் அரசி எலிசபெத் அம்மையார், மலேசியப் பிரதமர் துங்கு அப்துல்ரகிமான், அமெரிக்க மருத்துவ நிபுணர் டாக்டர் மில்லர், இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஆகியோருக்கு வழங்கப் பெற்று, அவர்களின் மனமுவந்த பாராட்டுதல்களைப் பெற்றிருக்கின்றன என்றால், அவற்றை உருவாக்கிய தமிழ்நாட்டு நெசவாளரின் கைத்திறமையை நாம் பாராட்டாமலிருக்க முடியாது.

கதர் கிராமத் தொழில் வாரியத்தில் தன்னிரகற்ற இலாபத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பது எது தெரியுமா? பட்டு உற்பத்திப் பிரிவுதான்!

1956 அக்டோபர் முதல் 1972 அக்டோபர் வரை நாலரைக் கோடி ரூபாய்க்குப் பட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1,63,638 கிலோ கிராம் கச்சாப் பட்டு ரூ. 1,83,94,458 அளவுக்கும், 7,215 கிலோ கிராம் சரிகை ரூ. 46,82,813 மதிப்புள்ள அளவுக்கும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1956-57-ல் கதர்ப் பட்டில் கிடைத்த இலாபம் ரூ. 18,357; 1971-72-ல் கிடைத்த இலாபமோ ரூபாய் 12,06,801.

இந்த வகையில் இந்தியாவிலேயே அதிக அளவு கதர்ப் பட்டினை உற்பத்தி செய்யும் தகுதி பெற்ற ஒரே தனி அமைப்பாகத் 'தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்' திகழ்கிறது என்பதை நாம் பெருமையுடன் சொல்ல வேண்டும்.

'பட்டாடைகளை விலை கொடுத்து நம்மால் வாங்க முடியுமா?' என்று கேட்போருக்கு, ''ஏன் முடியாது? தாராளமாக வாங்கலாம்!'' என்று சொல்லும் வகையில், பொங்கல், தீபாவளி ஆகிய விழாக் காலங்களில் பத்து சதவீதத் தள்ளுபடியில் பட்டுத் துணிகள் விற்கப்படுகின்றன. சாதாரண நாட்களில் அதிக விலை கொடுத்து வாங்குவதை விட இந்தச் சமயங்களில் எவ்வளவோ அதன் விலை குறைகின்றது. நடுத்தர மக்களும் பட்டாடைகளை அணிந்து பூரிக்கும்



நெசவாளரின் கைவண்ணம் மிளிர்கிறது




வகையில், நல்ல வாய்ப்பினைத் தந்து உதவுகிறது கதர் கிராமத் தொழில் வாரியம். அரசுப் பணிகளில் உள்ளவர்களுக்குத் தவணை முறையில் துணிகளை வழங்கி அவர்கள் குடும்பத்துடன் குதூகலிக்கவும் இது வகை செய்கிறது.

கதராடைகள், கதர்ப்பட்டுத் துணிகள் முதலியன வாங்குவதன் மூலம், எண்ணற்ற நெசவாளர் குடும்பங்களை நாம் காப்பாற்றியவர்களாகிறோம்.

அதே சமயத்தில், கலப்படமில்லாத நல்ல தரமான மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆடைகளை அணிகிறோம் என்ற மன நிறைவும் நமக்கு ஏற்படுகிறது.

விழாக் காலங்களில் பட்டினை அணிந்து மட்டில்லா மகிழ்ச்சியில் திளைத்திடக் கதர்ப் பட்டினை வாங்கிடுவோம்! கை வண்ணம் மிளிரப் பாடுபடும் நெசவாளரின் கண்ணீரைத் துடைத்திடுவோம்!

—பி.வி.ஜி.

## மிளகாய் பயிருக்கு எவ்வளவு உரமிட வேண்டும்?

வேளாண்மையில் அதிக வருவாய் பெற்றிட உகந்த அளவு உரமிடுவது இன்றியமையாதது. வாணிகப் பயிர்களில் ஒன்றான மிளகாயும் அதிக உரமேற்று நல்ல பலன் தரவல்லது.

மிளகாய்க்கு இட வேண்டிய தழைச் சத்து அளவு பற்றி, கோவில்பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் 'கே. 1' (K.1) மிளகாய் ரகத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஒரு எக்டேருக்கு 40, 60, 80, 100, 120 கிலோ தழைச்சத்து என்ற அளவில் இடப்பட்டு பரிசீலிக்கப்பட்டதில், 120 கிலோ தழைச்சத்து உரமிட்ட பயிர், எக்டேருக்கு 6,339 கிலோ பச்சை மிளகாய் மகசூல் கொடுத்துள்ளது, இதனால் எக்டேருக்கு நிகர இலாபமாக ரூபாய் 1,360/- கிடைத்துள்ளது.

தழைச்சத்தைத் தவணைகளாக இடுவது பற்றிச் செய்த ஆராய்ச்சியில், தழைச் சத்தை மூன்று சம பாகமாகப் பிரித்துக் கொண்டு, முறையே நடவு செய்த 50-ஆம் நாள், 70-ஆம் நாள், 90-ஆம் நாள் இடுவது நல்ல பலனைத் தந்துள்ளது.

'கே-1' வகை மிளகாய்க்கு எக்டேருக்கு 120 கிலோ தழைச்சத்தை மூன்று சம பாகங்களாகப் பிரித்துக் கொண்டு மிளகாய் நடவு செய்த 50-வது, 70-வது, 90-வது நாட்களில் இடவேண்டும். இவ்வாறு உரமிட்டால் எக்டேருக்கு 63 குவிண்டால் பச்சை மிளகாய் மகசூல் பெறலாம். இதனால், எக்டேருக்கு நிகர இலாபம் ரூபாய் 1,360 பெற இயலும்.

[ தகவல் : கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி—18 ]

''மதுரையிலேயிருந்து வந்திருந்த வக்கீல் குமாஸ்தாவை வழி அனுப்பிவிட்டு, அந்தப் பாண்டியனும் லிங்கமும் போறாங்க பாத்தீங்களா?''

''அந்த அப்பாவிப்பய பொன்னையாவை அடிச்சிக் கொன்னு போட்டு, அவன் பெண்சாதியையும் இழுத்துவச்சுக்கிட்டு நிற்கிறதைப் பார்த்துச் சந்தி சிரிக்கிறப்போ, இவன் கொஞ்சமானும் குலுங்குறானா? பாருங்களேன்.''

''ஆச்சு..........அடுத்து முடியப் போற கட்டம் தான். இன்னும் நாலு நாளைக்குள்ளே கண்டிசன் பெயில்ன்னு ஆகிப் போகும். அப்புறம் இந்தத் தலைவரும், அவனுக்குத் துணையா நிக்கிறவனுகளும் ஊருக்குள்ளே தலைகாட்ட முடியாது. எல்லாமே அடங்கிப் போகும்.''

''மரண வாக்குமூலம் உறுதியாயிட்ட பிறகு, தண்டனைக்குத் தப்ப முடியுமா? உருட்டி முத்தையா அடியெடுத்து வச்சிருக்கும் போது, கடைசிவரைக்கும் உருட்டிட்டுத்தான் திரும்புவாரு.''

''இவ்வளவுக்கு வம்பு வழக்குன்னு வந்திட்ட பிறகும், அந்தக் கட்டிக் கழிச்சவளை விட்டுப் பிரியாம இருக்கானே அந்த லிங்கம். இடையிலே அழுதழுது அந்தக் கிழவி போய்ச் சேரப் போகுது.''

''போகட்டும். மூக்கு அடைக்குது—பொடி இருந்தா குடுக்கிறீயா?''

''உங்கிட்ட கேட்கலாம்ன்னு வாயெடுத்தேன். நீயே கேட்டுட்டே. மட்டை மத்தியானமே காலி.''

இரவு பத்து மணிக்கு மேலிருக்கும்.

ஊராட்சி அலுவலகத்தின் வாசற் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது.

முன் அறையில் மேசையின் முன்பாகப் பாண்டியனும் லிங்கமும் எதிரெதிரே அமர்ந்திருக்கிறார்கள். முன்னால் கவிழ்ந்து, ஒரு புத்தகத்தின் மீது டேபிள் வெயிட்டைச் சுற்றிவிட்டு, அதைப் பார்த்துக்கொண்டே, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி இருக்கிறான் பாண்டியன்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்த லிங்கம் உள்ளுக்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.




## இறுதி மூச்சில் எழுதிய கடிதம்

''யோசனைக்கு மத்தியிலே ஒரு புன்னகையும் நெளியுதே? கனவுக் காட்சியா?'' என்று கேட்டான்.

பாண்டியன் ஏறிட்டுப் பார்த்தான்.

''போராட்டங்களுக்கு மத்தியிலே, நின்று இளைப்பாற ஒரு நிழலும் வேணுமில்லையா? இல்லையின்னா நெஞ்சு சூடேறிப் போகும்'' என்றான் அதே புன்னகையோடு.

''காலையிலிருந்து பாட்டி தெம்பா இருக்காங்களே. நீ என்ன சொன்னே நானும் இல்லாத போது?''.

''லிங்கமும்-அரசியும் இந்த ஊருக்கே ஒரு எடுத்துக் காட்டாக நீடூழிக் காலம் வாழப் போறாங்க. என்னோட லட்சியமே இது தான். பாட்டி உங்க பேரனுக்கு எந்த ஆபத்தும் வராம என்னாலே காப்பாத்த முடியும். எல்லாத்தையும் மீறி தண்டனைன்னு கிடைச்சா அதை நானே முழுசா ஏத்துக்கிறேன்னு சொன்னேன்'' என்றான் பாண்டியன்.

''உடனே பாட்டி சரியின்னு சொல்லிட்டாங்களாக்கும்'' என்று இடையிலே குறுக்கிட்டான் லிங்கம்.

''அப்படிச் சொல்லுவாங்களா? நானும் ஒரு பேரனில்லையா? எப்படியோ கூடுமான வரையிலும் தைரியம் சொல்லியிருக்கேன் பாட்டிக்கு'' என்றான் பாண்டியன்.

''அடுத்து நிபந்தனை, ஜாமீன்னு ஆகி, ரெண்டு பேருமே ஊரைவிட்டுப் போகும் போதுதான், பாட்டியும் நமக்கொரு பிரச்சினையா இருக்கப் போறாங்க'' என்றான் லிங்கம் பெருமூச்சோடு.

''அதுக்குள்ளே, உருட்டி முத்தையாவே நேரிலே வந்து பாட்டியிடம் உண்மையைச் சொல்லணும். அப்பத்தான் பாட்டிக்கு நிம்மதியாகும்'' என்றான் பாண்டியன் ஏறிட்டுப் பார்த்து.

''ரொம்ப லேசாச் சொல்லிட்டியே. இந்த ஒரு வாரத்திலே அது நடக்குமா?'' என்று கேட்டான் லிங்கம்.

''நடக்குமான்னு திகைச்சு நிக்கிறதைவிட, முயற்சி செய்யலாமே. சித்தப்பாவுக்குள்ளேயும், உருட்டி முத்தையாவுக்குள்ளேயும் தான் உண்மை அடங்கி இருக்கு. நாம நினைச்சபடியே இடையிலே புகையவும் ஆரம்பிச்சிருக்கு. நடக்கப் போறது சர்க்கார் வழக்கா இருந்தாலும், முடிவு நம்ம ஊருக்குள்ளே தான் இருக்கு'' என்றான் பாண்டியன் அமைதியாகவே.

''இப்ப அந்தச் சடையனும் வந்திருக்கானே.''

''அவனும் சரியான நேரத்திலே வந்திருக்கான்.''

''சடையனும் விடுதலையாகி, சரியா பொன்னையா கண்ணை மூடினதுக்கப்புறம் வந்து நிக்கிறதை வச்சு, அவனே

பொன்னையாவை அடிச்சிருக்க லாம். இப்ப அவன் ஊருக் குள்ளே போடுற தெல்லாம் நாடகம்ன்னு குருவையா சொல் ருரு'' என்ருன் லிங்கம்.

''வழக்கை வேணும்ன்னு இப்படியும் திருப்பலாம். ஆனு, இதை உறுதியாகவும் சொல்ல முடியாது. எப்படியும் சடை யனை நம்ம பக்கம் இழுத்துக் கணும்'' என்று சொன்னுன் பாண்டியன்.

''அவன் வெறிபிடிச்சவன். அன்னிக்கே ஐயனு அவன் மேலே பாய இருந்தான்''.

''வெறி பிடிச்சவனை, அன் பாலே, அவனுேட அறிவைத் தூண்டி விடுறதுனலே தான் அடக்கமுடியும், தீயைக்கொண்டே தீயை அணைக்க முடியுமா? அவனைச் சுயமாகச் சிந்திக்க வைக்கணும். யார் யாருடைய நலனுக் காகவோ, நீட்டின இடத்திலே பாயுறதுக்கு நீ மிருக மில்லே; மனிதன்னு சுட்டிக் காட்டணும். சடை யனைத் திருப்ப முடியும்ன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு'' என்று பாண்டியன் சொல்லி வந்த போது,

''நிதானமா போறதுக்கும் நமக்கு நேரமில்லையே. இந்த அவசரத்திலே எப்படித்தான் சடையனை உன் போக்குக்குத் திருப்பப் போறியோ?'' என்று கேட்டான் லிங்கம்.

'' சிவந்தி புத்திசாலிப் பொண்ணு. தைரியமானவளும் கூட, அவளைச் சே ...... சடையனேட அறிவைத் தூண்டி விடணும். நாளைக்கு மறு நாள், களத்து மேட்டு வேலை முடியப் போகும். நாளைக்கு இரவிலேயே, சிவந்தி களத்து மேட்டுக் குடிசையைக் காலி செய்திட்டு, மைக்கேல் வீட்டுக் குப் பக்கமாகக்குடிபோகப்போனு. இது சடையனை எதிர்பாராமலே நடக்கப் போகுது. அவன் உச் சக் கட்டத்துக்கே போவான். அந்த நேரத்திலே அவனைச்




சந்திக்கப் போருேம்'' என்ருன் பாண்டியன்.

'' சிவந்தியிடம் இவ்வளவு நம்பிக்கையா உனக்கு? '' என்று வியப்போடு கேட்டான் லிங்கம்.

'' இப்ப.... நாலு நாளா சிவந்திக்குப் பக்கத்தில் டெய் சியை வச்சிருக்கேன். சடையன் கிட்ட எப்படி நடந்துக்கணும், என்ன பேசணும்ங்கிறது ஒத்தி

கையாகவே நடந்துக்கிட்டிருக்கு. சடையனை வச்சு, உருட்டி முத்தையாவுக்கு ஊட்டத்தைக் கொடுத்தே உண்மையைக் கக்க வைக்கலாம். எதுவுமே ஊரைத் தாண்டிப் போகாது'' என்று மேலும் சொன்னான் பாண்டியன்.

''காலையிலே மைக்கேல் வீட்டுக்கும் போயிருந்தியாமே?'' என்று புன்னகையோடு கேட்டான் லிங்கம்.

''எனக்காக நீ போயிருக்க வேண்டியது முறைப்படி நானே போகும்படி யாச்சு. மைக்கேலையும், அந்த அம்மாளையும் பார்த்தேன். தலைக்கு மேலே கொலை வழக்கை வச்சுக்கிட்டு, இவ்வளவு அமைதியாக இருக்கேன்னு,



அவங்களுக்கு ஒரே ஆச்சரியம். இப்ப கல்யாணப் பேச்சு வேண்டாம். வழக்கு முடியட்டும்ன்னு சொல்லியிருக்காங்க'' என்றான் பாண்டியன்.

''சரி..... அடுத்து நடக்கப் போறதிலே என் பங்கு என்ன?''

''கவலை இல்லாம பாட்டிக்குப் பக்கத்திலேயே இரு. அரசிக்கும் ஆறுதல் சொல்லு. சித்தப்பா....ஒரு பொய்யை மறைக்க, ஊரறிய, ஒன்பது பொய் சொல்லிட்டாரு. அவர் சாயம் வெளுக்கும் போது, அப்புறம் ஊருக்குள்ளே ஏளனமோ, எதிர்ப்போ இருக்கவே இருக்காது''.

அப்போது தெருவோடு பலர் நடந்துவரும் சந்தடியும், வாசற் கதவைத் தட்டுவதும் கேட்டது.

பாண்டியனும், லிங்கமும் பரபரப்போடு முன் பக்கம் வந்து கதவைத் திறந்தார்கள்.

கையிலொரு அரிக்கன் விளக்கைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, ஊராட்சி உறுப்பினர் அம்பலம் நின்று கொண்டிருந்தார்.

அவனோடு இன்னும் ஐந்தாறு கிராமத்து ஆட்கள், அவர்களுக்கு மத்தியிலே, வேலாயுதத்தின் தனித் திருமகன், ஆட்கள். அவர்களுக்கு நிமிராமல் நின்று கொண்டிருந்தான்.

சற்றுத் தயங்கினாலும், வெளியிலேயே நின்று பேச விரும்பாமல், ''உள்ளே வாங்க'' என்று சொல்லிவிட்டு லிங்கத்தோடு திரும்பினான் பாண்டியன்.

நடேசனையும் உள்ளே தள்ளிக் கொண்டுவந்து பாண்டியனுக்கு முன்பாக நிறுத்தி விட்டு, ஆங்காரத்தை அடக்கிக் கொண்டிருக்கும் குரலில் சொன்னான் அம்பலம்.

''ஆளு உருத்தெரியாமல் போகும்படியா நடக்க இருந்திச்சு. இருக்கிற நிலைமையிலே, புதுசா இப்படி ஒண்ணு முளைக்க வேண்டாம்ன்னு, கிராமத்தையே கையமத்தி, இந்த மைனரை இங்கே கூட்டியாந்திருக்கேன்'' என்றான் அம்பலம்.

பாண்டியன் நடேசனைத் திரும்பிப் பார்த்தான். அவன் குனிந்த தலை நிமிரவில்லை.

நடந்திருப்பது என்னவென்று ஓரளவு புரிந்தாலும் ''என்ன நடந்திச்சு?'' என்று கேட்டான் பாண்டியன்.

''நம்ம செங்கானோட பேத்திப் பொண்ணு, நீலகிரி காபித் தோட்டத்திலே இருந்தது, இங்கே தாத்தா வீட்டுக்கு வந்து முழுசா ரெண்டு மாசங் கூட ஆகலே, அதுக்குள்ளே இந்தக் காளையோட கண்ணு பட்டிருச்சு. ஊரு விட்டு ஊரு வந்து, துணிஞ்சு இறங்கிட்டாரு. கையும் மெய்யுமா பிடிபட்டுப் போனாரு. நான்தான் குறுக்கே விழுந்து, ஆளை உருப்படியா இங்கே கொண்டாந்திருக்கேன்'' என்றான் அம்பலம்.

''நாங்களும் மானம் ஈனத்தோட குடியிருக்கணும். இதுக்கொரு வழி பண்ணுங்க'' என்றான் கூட்டத்தோடு வந்திருந்த இளவட்டங்களிலே ஒருவன்.

பாண்டியன் நிதானமாகச் சொன்னான்.

''இந்த அளவுக்கு நடந்தும், அமைதியோட இங்கே வந்ததுஉங்க பெருந்தன்மையைக் குறிக்குது. நடேசன் என் தம்பி. இவனைக் கண்டிக்கவும், வழி காட்டவும் எனக்குப் பொறுப்பு இருக்கு. இதை நானே ஒரு முடிவுக்குக் கொண்டு வாரேன்'' என்றான்.

''அப்ப நாங்க வாரோம். ரெண்டுங் கெட்டான் நேரமா இருக்கு. ஊரிலேயும் போய்ச் சொல்லணும்.'' என்று சொல்லிப் புறப்பட்டான் அம்பலம்.

''அந்தப் பொண்ணுக்கும் எந்த ஆபத்தும் வராமப் பார்த்துக்குங்க'' என்றான் பாண்டியன்.

''சரிதாங்க. உங்களை நம்பித்தான் ஒப்படைச்சிட்டுப் போறோம்'' என்று இறுதியாகச் சொல்லிவிட்டு வந்தவர்கள் போய்விட்டார்கள்.

பாண்டியன் திரும்பினான்.

லிங்கமும் நடேசனும் அருகருகே தான் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால், இவனுக்கும் நடேச

னுக்குமிடையே எவ்வளவு வேறு பாடுகள்?

லிங்கம் பாண்டியனைப் பார்த்து உதட்டளவில் சிரித் தான்.

சம்பந்தக்காரன் சிரிக்க மாட் டாஞ?

'' இது-அண்ணன் தம்பிக் குள்ளே பேசிக்க வேண்டிய பேச்சு: நீ மச்சினன். பக்கத் திலே நின்னு சிரிச்சா, தம்பி- சொல்ல வேண்டியதைச் சொல்ல வெட்கப்பட மாட்டாஞ ?'' என்று கேட்டான் பாண்டியன்.

'' அண்ணனும் தம்பியுமாத் தான் பேசுங்க — நானும் போறேன். இருந்தாலும் அல் லும் பகலும் இதிலேயே நீச்சடிக் கக் கூடாது '' என்ற லிங்கமும் புறப்பட்டு விட்டான்.

பாண்டியன் வாசல்வரை சென்று ஏதோ சொல்லியனுப்பி விட்டுத் திரும்பி வந்தான். நடேசனுக்குப் பக்கமாக, மேசை யில் சாய்ந்தவாறு நின்று கொண்டு அவன் ஏறிட்டுப் பார்த் தான்.

காண்போர் கண்கவர உடுத் திக் கொள்வதில் தம்பி கெட்டிக் காரன். மனிதனுகப் பிறந்து விட்ட மண்ணிலே என்ன நடக் கிறது என்ன நடக்கப் போகிறது என்பதைப் பற்றி யெல்லாம் திரும்பியே பார்க்காத, அதற் கென்று தன்னை அலட்டிக் கொள் ளாத கவலையற்ற பிறவி.

இன்றைக்கு, இந்தக் குளிர்ந்த நேரத்திலும் வேர்வையில் சட்டை நனைந்து, விம்மியவனுகத் தலைகுனிந்து, எப்படியோ நிற் கிருன்.

'' இதையே இறுதியா வச்சுக் கலாமா?'' என்று கேட்டான் பாண்டியன்.

நடேசன் ஏறிட்டுப் பார்த்த தான்.

முகம் வாடித்தான் இருக் கிறது.

என்றைக்குமே பாண்டிய னேடு ஒட்டுதலாக இருந்த தில்லை. இன்றைக்கு எப் படியோ அல்லவா சிக்கிக் கொண்டு, இப்படி வந்து நிற் கும்படியாகி விட்டது.

'' எப்படியும் நீ ஒரு முடி வுக்கு வந்துதான் ஆகணும். இல்லையின்னு கிராமமே திரண்டு வந்து நிக்கப் போகுது? '' என் ருன் பாண்டியன் மேலும்.

'' என்ன முடிவுக்கு ?'' என்று வேறு பக்கமாகப் பார்த்துக் கொண்டே கேட்டான் நடே சன்.

'' நாலு பேருக்கு முன்னலே தலை குனிஞ்சு நிக்கிறியே.... இதுக்குத்தான் ஒரு முடிவு வேண் டாமா ? மனிதனுப் பிறந்த துக்கு என்ன அறிகுறிதான் இருக்கு உங்கிட்ட? இந்த வகை யிலே சித்தப்பாவும் உன்னைக் கண்டிக்க முடியாது. ஏன்ஞ,

### பொங்கல் திருநாள்

"நாம் உழைப்புக்கு மதிப்புத் தரவேண்டும். உலகத்தில் மற்ற நாடுகளில் உழைப்பவர்களுக்கு மதிப்புக் கிடைக்கிறது. ஆனல், இந்த நாட்டில் உழைப்பவனுக்கு மதிப்புக் கிடைப்பதில்லை. இந்த நிலை மாற வேண்டும். ஏனெ னில், ஒரு நாட்டின் உழைப் பின் பலனைக் கொண்டுதான், அந்த நாடு மற்றவர்களால் மதிக்கப்படும். ஆகவே, உழைப் பவனுக்கு மதிப்புத் தரும் நாள் வரவேண்டும். பொங்கல் திருநாள் உழைப்புக்கு மதிப்புத் தருகின்ற நாளாக மாற வேண்டும்."

இந்த வயசிலேயும், இந்தப் பாதையிலே, அவரே உனக்கு முன்னேடியா இருக்காரு. அதுக்குத் தனியாவே ஒரு தோப்பு இருக்கு '' என்று சற்றுக் கடுமையாகச் சொன் ஞன் பாண்டியன்.

நடேசன் வாய் திறக்கவில்லை. இன்றைக்கு ஏற்பட்ட அனு பவம் அவனுக்குப் புதியது. உட லும்—உள்ளமும் சோர்வாக இருந்தது.

''என்ன முடிவு சொல்லேன்?'' என்று மேலும் கேட்டான் பாண்டியன்.

நடேசன் திகைப்புடனே திரும் பினன்.

'' எதையும் நானு எப்படிச் செய்யறது?'' என்ருன் பயத்து டன்.

' நீயே முடிவெடுத்து ஊரைக் கடந்து போகும் போது, மற்ற வங்க அனுமதியைக் கேட்கலையே! உன்னுடை வேட்டைக்கும் ஒரு எல்லை இருக்கணுமில்லையா ?''.

நடேசன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவனையே பார்த்துக் கொண் டிருந்த பாண்டியன், சற்றுக் கழித்து.—

'' மனிதனுக்கு மட்டும்தான் பகுத்தறிவு இருக்கு. சித்தப்பா தலைவரா இருந்த நாளையிலே, நீயே கதாநாயகனு நின்னு நடத்தி வச்சதை, இதுக்குள்ளே மறந்திருக்க மாட்டே. நீ விரிச்ச வலையிலே விழுந்து, கண்டதும் கொண்டதும் ஊமை கண்ட கனவாகி, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடி யாமல், தன்னையே எரிச்சுக் கிட்டாளே ஒருத்தி, அவளைப் பற்றி நினைவு இருக்கா ?'' என்று முகம் பார்த்துக் கேட்டான் பாண்டியன்.

நடேசன் கண்களைப் பாதி மூடிய நிலையிலிருந்தான். இமை யோரங்களிலே நீர் கோத்திருப் பது போலவும் தெரிந்தான்.

பாண்டியன் மேலும் தொடர்ந் தான்.

'' நம்ம குடும்பத்தோட அதி காரப் பலத்துக்குப் பணிஞ்சு, அந்தச் சோக வரலாறு வெளியே தெரியாம அமுங்கிப் போச்சு: அந்தப் பொண்ணு இறுதி மூச் சிலே எழுதி வச்சிட்டுப் போன கடிதம் காலம் கடந்து என் கை யிலே கிடைச்சது. அதைப் பல தடவை படிச்சு நான் கண்ணீர் விட்டிருக்கேன். மனிதத் தன் மையோட நீயும் அதைப் படிச் சுப் பாரு ', என்ற பாண்டியன் திரும்பிச் சென்று, சற்றுத் தள்ளி யிருந்த பீரோவைத் திறந்து, புத் தகங்களுக்கிடையேயிருந்த ஒரு கவரைத் தேடியெடுத்துக் கொண்டு திரும்பினன்.

நடேசன் நின்றிருந்த இடம் காலியாக இருந்தது.

வாசற் கதவு திறந்து கிடந் தது.

(வளரும்)

# தந்தை மகற்கு ஆற்றும் நன்றி

ஒரு தந்தை மகனுக்குச் செய்யக்கூடிய நன்மை அவனைச் சான்றோனாக்குவதுதான். திட்டமிட்ட இன்ஷூரன்சு சேமிப்பின் மூலம் ராமுவின் உயர்கல்விக்கு வழி வகுத்தார் அவன் தந்தை. அவன் இன்று ஒரு புகழ் பெற்ற இன்ஜினீயராக விளங்குகிறான். உங்கள் மகனும் உயர் கல்வி பெற ஒரு எஜுகேஷனல் என்டோமென்ட் பாலிசி எடுங்கள்.

**ஆயுள் இன்ஷூரன்சு போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை**



EP.LIC.26.73



BAYER

# பாயரின் தரமான
# பூச்சி மருந்துகள்

உபயோகிப்பதன்

மூலம் பூச்சி பூஞ்சாண உபாதை-
களினாலான நஷ்டத்தை
தவிர்க்கிறார்கள்

## நெல் விளைவிக்கும்
## விவசாயிகள்.

நெல்லில் தோன்றும்
பலவகைப் பூச்சிகளை
சிறந்த வகையில்
மலிவான வழியில்
கட்டுப் படுத்த

## ஃபாலிடால்.




## ஹினோஸானை

உபயோகிப்பதனால்
நெல் குலை நோய்
மூலம் பயிர்
நாசமில்லை.




இலை சுருட்டும் புழுக்-
களையும் இதர
பூச்சியினங்களையும்
கட்டுப்படுத்தி சிறந்த
பலனளிக்க வல்லது

## மெட்டாஸிட்
## காம்பி தெளித்தல்




ஒவ்வொரு அடைப்புகளுடன்
இணைக்கப்பட்டிருக்கும்
உபயோகிக்கும் முறை-
களின்படியே ஃபாலிடால்
ஹினோஸான் மெட்டாஸிட்
காம்பி பூச்சி மருந்துகளையே
உபயோகியுங்கள்.

நெல் பயிரின் பூச்சி பூசண
தொல்லைகளிலிருந்து சிறந்த
முறையில் பாதுகாக்க நம்பிக்-
கைக்குகந்த ஃபாலிடால்
ஹினோஸான் மெட்டாஸிட் காம்பி
தெளிக்கவும்.

5-A/162 (760)




"என்றும் புலராது யாணர் நாட் செல்லினும் நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்" விளங்கும் முப்பாலைப் பற்றி எப்பாலும் போற்றும் சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவர் பெருந்தகை இப்படிக் கூறுகிறார்:

மும்மலையும் முந்நாடும்
முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும்
முக்கொடியும்—மும்மாவுந்
தாமுடைய மன்னர்
தடமுடிமேற் றாரன்றே
பாமுறைதேர் வள்ளுவன்
முப்பால்

புலவர் சொன்ன அந்த 'மூன்று'களைப் பார்ப்போம்:

மும்மலை: கொல்லிமலை, நேரிமலை, பொதியமலை.

முந்நாடு: குடநாடு, புனனாடு, தென்னாடு.

முந்நதி: பொருநை, காவிரி, வையை.

முப்பதி: கருவூர், உறையூர், மதுரை.

மும்முரசு: மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு.

முத்தமிழ்: இயல், இசை, நாடகம்.

முக்கொடி: வில், புலி, மீன்.

மும்மா (மூன்று குதிரைகள்): கனவட்டம், பாடலம், கோரம்.

இந்த மூவகைகளையும் தாம் முறையேயுடைய சேர, சோழ, பாண்டியரெனும் மூன்று மன்னர்களின் பெரிய முடிகளின்மேல் கொள்ளப்பட்ட மாலை அன்றோ முப்பால்!

ஆம். இத்தகு சிறப்பு மிக்க மூன்று பால்களையுடைய முப்பாலாம் திருக்குறளில், 'மூன்று' கருத்துக்கள் வரும்படியான குறளை, திருவள்ளுவர் நிறையச் சேர்த்துள்ளார்: மும்மணிகளாக விளங்கும் அந்தக் குறட்பாக்களைப் படித்துப் பயன் பெறுவோம்.

### துன்பத்தின் காரணம்

துன்பத்துக்குக் காரணம் என்ன?

இதற்கு வள்ளுவர் மூன்று விரலைக் காட்டி, ஆசை, சினம், அறியாமை என்று ஆணித்தரமாகச் சொல்கிறார்.

ஆசை மனிதனை அலைக்கழித்துச் செல்லாக் காசாக்கி விடுவதை நாம் அன்றாடம் பார்க்கிறோம். ஆசை, அதிலும் பேராசை மனிதனையே அழித்து விடுகிறது. ஆசைக்கு அடிமைப்பட்டால் அடித்தளமே ஆட்டங் கொடுக்கும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

அடுத்து மனிதனோடு பலமாக ஒட்டிக் கொண்டிருக்கும் 'சினம்' அதாவது கோபம். 'கோபத்தில் மனிதனது பகுத்தறிவு நீங்கிவிடுகிறது' என்று இராமகிருஷ்ணர் சொன்னதுதான் எத்தனை உண்மை. பகுத்தறிவு போகும் அளவுக்குக் கோபக் குணம் ஒருவனிடம் குடிகொண்டிருக்கிறதென்றால், அந்தக் குணம் மனிதனுக்குத் தேவைதானா? அதனால் அவன் அடையப் போகும் பலன்தான் என்ன?

மூன்றாவதாக மனிதனை விடாமல் பற்றிக் கொண்டிருப்பது அறியாமை. இந்த அறியாமை பெற்றெடுத்த அருங்குழவிதான் மூட நம்பிக்கை என்று இங்கர்சால் கூறுகிறார். மூட நம்பிக்கையின் பிறப்பிடமே அறியாமைதான் என்பது அவர் கருத்து—இன்று அறிந்தவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட பகுத்தறிவுக் கருத்துங் கூட. இத்தகைய 'அறியாமை' அறியாமல்கூட மனிதனைப் பற்றிவிடக் கூடாது என்பதுதான் வள்ளுவர் விருப்பம்.

ஆசை, சினம், அறியாமை இம்மூன்றும் நோய்க்கு இணையாகும். இந்த நோயிலிருந்து விடுதலை அடைபவனுக்குத் துன்பமே வருவதில்லை என்கிறார் வள்ளுவர். அதாவது துன்பத்துக்குக் காரணமே இந்த மூன்றுதான் என்கிறார் அவர்.

காமம் வெகுளி
மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய். (360)

### முன்னேற வழி என்ன?

வாழ்க்கையில் முன்னேற வழி என்ன? இந்த வினாவுக்கு வள்ளுவர் மூன்று குற்றங்களைக் களைய வேண்டும் என்கிறார். அவை என்ன?

'கற்றது கைமண்ணளவு. கல்லாதது உலகளவு' என்பதை உணர்ந்தவர்கள் எவ்வளவுதான் கற்றவர்களாயிருந்தாலும் செருக்கே இல்லாமல் இருப்பார்கள். செருக்கு, மனிதன் கழுத்தை அறுக்கும் அரிவாள். அறிவால் அந்தச் செருக்கைக் கீழே இறக்கிவிட்டால் சிறக்க வாழலாமே இப்பூமியில்.

சினம். இதைப் பற்றி மேலே கூறினோம். சிறுமை. இதனையே பிரித்துப் படித்தால் சிறு + மை என்று வரும். தும்பைப் பூப் போன்ற வெள்ளை உடையில் சிறுமை பட்டுவிட்டால் எவ்வளவு பெரிது படுத்தி, அழகைக் குறைத்துக் காட்டுகிறது? அதைப் போலத் தான் மனிதனிடத்தில் 'சிறுமை' என்னும் சிறு கறை பட்டு விட்டால், அவன் சமுதாயத்தில் சிறக்க முடியாமல் ஊர் சிரிக்க வாழ வேண்டியிருக்கிறது.

செருக்குஞ் சினமும்
சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து. (431)

### கவனம்! கவனம்!

மன்னவனானாலும் சரி, மாடுகள் ஓட்டும் சின்னவனானாலும் சரி, 'இதோ நான் கூறும் மூன்று கருத்துக்களையும் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்' என்று வள்ளுவர் கனிவாகக் கூறுகின்றார். அவை:

(1) ஈயாத் தன்மை, (2) பெருமையற்ற மானம், (3) அளவுக்கு மீறிய மகிழ்ச்சி என்கிறார் அவர். எச்சிற் கையினால்கூடக் காக்கையை ஓட்டாத உலோபிகளைப் பார்க்கிறோம் நாம். வாழ்வதன் நோக்கமே ஒருவருக்கொருவர் உதவி செய்வதுதான். இந்த உண்மையைப் புரிந்து கொண்டால்தான், மனிதன் மனிதத் தன்மையோடு இருக்கிறான் என்று பொருள். ஈயாத் தன்மையானது, மனிதத் தன்மையிலிருந்து அவனைப் பிரித்து விடுகிறது. ஆகவே, 'ஓ' மனிதர்களே! நீங்கள் 'மனிதனாக

வாழுங்கள்' என்று வள்ளுவர் அறைகூவல் விடுகிறார்.

மானமில்லாமல் வாழ்வதும் இத்தகையதே. மனிதன் என்று சொன்னால் அவனுக்கு மானம் இருக்க வேண்டாமா? இதனை வலியுறுத்தவே, மானத்துக்கு ஓர் அதிகாரத்தையே வள்ளுவர் வகுத்துள்ளார். 'மக்கள் தம் நிலையிலிருந்து தவறி நடந்த பொழுது, தலையினின்று நீங்கிய மயிரைப் போல இகழப் படுவார்கள்' என்று குறிக்கிறது குறள். எனவே, ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரி மான் போன்று மானம் உடையவர்களாகத் திகழ வேண்டும் என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதனை உணர்ந்தே, விருந்தும் மருந்தும் மூன்று வேளை என்று முன்னோர்கள் பகுத்து வைத்தனர். குடும்ப மகிழ்ச்சியும் இத்தகையதே. இன்பமும் சரி, துன்பமும் சரி அதனை அனுபவிப்பதில் அளவு வேண்டும். இரண்டுமே அளவுக்கு மீறினால் உயிருக்கே ஆபத்தாகக் கூட முடியும். அளவு கடந்த மகிழ்ச்சியில் திளைத்தவர்களும், துன்பத்தில் மூழ்கியவர்களும், அகால மரணமடையும் செய்திகளைப் பத்திரிகைகளில் படித்திருக்கிறோமல்லவா?

ஆகவே வள்ளுவர், ஈயாக் குணம், மானமற்ற தன்மை, அளவுக்கு மீறிய மகிழ்ச்சி— இந்த மூன்றும் குற்றங்களாகும் என்கிறார்.

இவறலும் மாண்பிறந்த
மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு. (432)

**ஆள்வோர்க்கு வேண்டும் பண்புகள்**

நாட்டை ஆள்பவருக்கு இருக்க வேண்டிய மூன்று பண்புகள் என்னென்ன? இதனை வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறும் போது, அந்தப் பண்புகள் நாட்டை ஆள்பவருக்கு மட்டுமல்ல, நமக்கும், நானில மக்களுக்கும் நல்லுரையாக விளங்குகிறது.



(1) தூங்காமை (2) கல்வி (3) துணிவுடைமை.

'இவை மூன்றும் நீங்கா நிலன் ஆள்பவருக்கு' என்கிறார் அவர். 'முயற்சி திருவினை யாக்கு' மாதலால் சோம்பல் இல்லாதவனாகவும், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' யாதலால் சிறந்த கல்விமானாகவும், வெற்றிக்குத் 'துணிவே துணை' யாதலால் துணிவுடையவனாகவும் மன்னன் இருத்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

அமைச்சரின் தன்மைகள் என்னென்ன?

செயலுக்குரிய கருவி, ஏற்ற காலம், செய்யும் முறைமை இந்த மூன்றையும் சிறப்புடன் தேர்ந்து செய்ய வல்லவன் தான் அமைச்சன்.

கருவியும் காலமும்
செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. (631)

**தூது செல்லாமோ?**

அன்பு அறிவு ஆராய்ந்த சொல் வன்மை தூது உரைப்பார்க்கு இன்றி யமையாத மூன்று (682) என்றார்.

அன்பு, நல்ல அறிவு, எதையும் ஆராய்ந்து சொல்லும் சொல்வன்மை இந்த மூன்றும் தூது உரைப்பவருக்கு வேண்டும் குணங்களாகும். இதே அதிகாரத்தில் இன்னொரு குறளில், இயற்கையான அறிவு, காண்பவர் விரும்புகின்ற தோற்றப் பொலிவு, தாம் கற்ற படிப்பினை இம்மூன்றும் தூதுவர்க்குச் சிறப்பாகும் என்கிறார். மேலும் அவர், நல்ல ஒழுக்கமும், சுற்றமும், துணிவும் உடையவனாக அவன் விளங்குதல் வேண்டும் என்கிறார்.

**இதுவே பொன்னாடு**

**எது நாடு?**

இந்த வினாவுக்குப் பதில் 'நாடு' என்னும் அதிகாரத்தில் இருக்கிறது. ஒரு நாட்டின் இலக்கணம் என்ன என்பதைக் கூறும் போது, வள்ளுவர்,

தள்ளா விளையுளும்
தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு. (731)

என்கிறார். நல்ல விளை நிலங்களும், அறம் உணர்ந்த சான்றோரும், கேடில்லாத செல்வரும் ஒருங்கே சேர்ந்திருப்பது தான் நாடாகும்; நாட்டுக்கு அழகாகும். மேலும் அவர் கூறும் போது—



பசியில்லாத நாடு, பிணியில்லாத நாடு, பகை இல்லாத நாடு—இதுவே பொன்னாடு என்கிறார்.

உறுபசியும் ஓவாப்
பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு. (734)

**வள்ளுவர் ஒரு மருத்துவர்**

வள்ளுவரை ஒரு மருத்துவர் என்று கூறலாம். இல்லாவிட்டால், 'மருந்து' என்னும் அதிகாரத்தை அவர் எழுதியிருப்பாரா?

உணவோ, உறக்கமோ எதுவானாலும் தம் உடம்பின் அளவிற்கு மிகுந்தாலும், குறைந்தாலும், வாதம், பித்தம், கவம் ஆகிய மூன்று நோயும் வருமாம்.

மிகினும் குறையினும்
நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று. (941)

**மேலோர் யார்?**

மேலோர் யார்? பணம் படைத்தவரா? சொத்து சுகம் உள்ளவரா? வள்ளுவர் கூறும் மேலோர் இவரல்ல!

ஒழுக்கமும் வாய்மையும்
நாணும்இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார். (952,

என்கிறார் அவர். ஒழுக்கம், மெய்மை, நாணம் இந்த மூன்று தன்மைகளால் தவறாது நல்வழியில் நடப்பவரே மேலோர் என்பது வள்ளுவரின் மேலான கருத்து.

இவ்வாறாக நாம் திருக்குறளென்னும் கடலிலே மூழ்கும்போது, மூன்று மூன்று முத்துக்களாக எத்தனையோ முத்துக்களை எடுத்து மகிழலாம். அத்தனை முத்துக்களையும் எடுத்து ஆரமாகத் தொடுத்துக் கழுத்திலே அணிய முடியுமா என்ன?

# வெண்பாப் போட்டி

## 48. 'நன்றி' எனத்தொடங்கி 'நன்று' எனமுடித்தல்

நன்றி முதற்சீராய் நன்றுநேர் பாய்க்கொண்ட
இன்பத் தமிழ்ப்பா இயற்றுக—என்ருல்
முடியும் செயலா ? முதுபா வலராய்
நடியா திருப்பதே நன்று.

—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

நன்றி மறவேல் ; நலிந்தோர்க் குதவிசெய் ;
குன்ருக்கும் நெஞ்சுறுதி கொண்டுழைநீ—என்றெல்லாம்
நான்பிறர்க்குச் சொல்லும் நயவுரையால் யாதுபயன் ?
நான்வாழ்ந்து காட்டுதலே நன்று.

—சி. செள. கருப்பன், திருச்சி-15.

நன்றிசொல வேண்டாவோ ? நல்லுழைப்பில் நாளெல்லாம்,
ஒன்றிவிடும் ஏரின் உழவருக்கே !—என்றுமிங்கே
தெள்ளமுதப் பொங்கல் திருநாளில் நாமந்த
நல்லவரை வாழ்த்திடுவோம் நன்று.

—வே. இளம்பரிதி, தாரமங்கலம்.

நன்றிப் பெருக்குடனே நானிலத்தோர் வாழ்த்துரைக்கப்
பொன்ருப் பணிசெய்தோர் போலுழைத்துக்—குன்ருத
பேர்பெறுவீர் மாணவரே ! பின்னிவரும் போராட்டம்
சீர்குலையச் செய்திடுவீர் நன்று.

—இளங்கோ, ஆலங்குளம்.

நன்றி மறப்பாரை, நம்பித் தெளியாரை,
நன்றியில் செல்வம் நயப்பாரை,—ஒன்றிநிதம்
கூடிக் கெடுப்பாரைக், குற்றமிகக் கொண்டவரை
நாடித் திரியாமை நன்று.

—கே. எஸ். பைரோசா, கம்பம்.

நன்றி மறப்போர், நயவஞ்சம் கொண்டலைவோர்,
வென்றி முடிக்கா வினையாளர் ;—மன்றுள்
கடப்பாடு கொன்றவர், கொள்கை மறந்த
அடங்கலரை நீக்குவதே நன்று.

—புலவர் சாமி. வரதராசன், கல்லணை.

நன்றி மறவாமை ; நாணுடமை தீயவற்றில் ;
இன்றி யமையாமை இல்லாமை; —என்றுமே
தீமை நினையாமை ; தீயருடன் சேராமை
நாமினிதாய் ஏற்றிடுவோம் நன்று.

—வீர. முருகேசன், எம்.ஏ.,பி.டி. தருமபுரி.

நன்றிக்கு வித்தான ஞாயிறுக்கும் நன்மழைக்கும்
கன்றுக்கும் கன்னியர்க்கும் காட்டுகின்ற—நன்றியன்ருே
பொன்ஞர்தைப் பொங்கல் ; புவிபுரக்கும் நல்லுழவர்
நன்ஞளைக் கொண்டாடல் நன்று

—புலவர் அ. வே. காசிநாதன், கோடாலிக் கருப்பூர்.

நன்றி மறந்து நல்வாழ்வு வாழ்வோர்கள்
என்றும் பிறந்தென்ன வாழ்ந்தென்ன—இன்றுலகில்
வர்யில்லா ஓர்பிறவி என்ருலும் நன்றிமிகு
நாயாய்ப் பிறத்தலே நன்று.

—சு. வீரசேகரன், மாயூரம்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
சு மாரியம்மாள்,
ஆசிரியை,
எஸ்.ஏ.வி. சாலா நடுநிலைப் பள்ளி,
முதலிப்பட்டி, சங்கரலிங்கபுரம் (வழி).

நன்றியதைக் கொன்றார்க்கு நானிலத்தில் வாழ்வுண்டோ
என்றும் இடருற்றே ஏங்கிடுவார்—தின்றிட்ட
கூழுக்காய்க் கன்னன் கொடுத்தான் உயிரதனை
நாளும் நினைத்திடுதல் நன்று.

—செல்வி முத்துலட்சுமி, நாகர்கோவில்.

நன்றி மறந்தவர் நல்லாசான் ஏசுவையே
கொன்றார் சிலுவையின் மேலறைந்தே—அன்றவரை
மன்னிக்க வேண்டிய மாதவன்போல் நாம்பிறரை
மன்னிக்க வேண்டுவதே நன்று.

—புலவர் இ. சூசைமாணிக்கம், சிறுகுடி.

நன்றிகொன்று நானிலத்தில் நல்லபெயர் பூண்டவரார்
சென்றிடறிப் பற்றலாமோ தீநெறியை—என்றும்
நெடிய மரபதனை நேர்மையுடன் காக்க
நடுநிலை நிற்றலே நன்று.

—ப. திருவேங்கடம், பொன்மலை.

நன்றிக் கடனெங்கள் நல்லுடலின் செங்குருதி!
நன்று பலசெய்யும் நல்லரசே!—என்றும்நீ
வாழ்வாய் ! எமைநன்கு வாழ்விப்பாய் ! நாளெல்லாம்
தாழ்வில்லாத் தன்மையுடன் நன்று.

—வே. குருநாதன், மதுரை-2.

நன்றி எனப்படுதல் நத்திப் பிழைப்பதுவோ ?
சென்று திசைமாறின் செல்வியர்—அன்றே
இடித்துரைப்பர் ; இன்னலினை இன்னமுதம் என்பார்
படும்துயரில் பங்குபெறல் நன்று.

—திருமதி த. மரகதம், ஆலம்பட்டி.

நன்றி யுணர்விற்கு நாயொரு சான்றெனின்
ஒன்றிய அன்பிற் குதாரணம்—அன்றிலாம்
முன்னைய நூல்கள் மொழிந்தபடி இல்வாழ்வில்
நன்மக்கட் செல்வமே நன்று.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

நன்றி எனும்வித்து நன்மைப் பயிராகிக்
குன்றுப் புகழைக் குவித்திடுமால்—இன்றுமுதல்
அல்லல் தவிர்க்கவும் ஆக்கம் பெருக்கவும்
நல்லுதவி நாம்செய்தல் நன்று.

—சு. முத்துக்கருப்பன், நகரம்.

நன்றி மறவாது நாம்பிறந்த நாடுகாக்க
முன்னின்ற வீர மறவர்க்கு—இன்றுநாம்
தாமாகச் சிந்தித்துத் தக்க உதவிகளை
நாமாகச் செய்வதே நன்று.

—வே. குமாரசாமி, கோரிக்கடவு.

நன்றி பலசெய்து நாள்தோறும் தாம்உயர
அன்றுமுதல் அன்புசெய்த நெஞ்சத்தை—இன்று
நிலைகுலையச் செய்திடுவோர் நற்கபிலர் பாரி
தலைநட்பைத் தாம்நினைத்தல் நன்று.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்

நன்றிது வென்றென்னை நாடியபோ தெக்குறையும்
இன்றிநான் தந்தேன் இருமழலை—இன்றோ
பொங்கிவரும் ஆசைக்குப் போடுகின்றாய் முக்கோணம்
நங்காய் உனக்கிதுவோ நன்று?

—முத்து. சாந்தகுமார், மதுரை-21.

நன்றிக் கடன்செய்ய வேண்டாவோ நாமெல்லாம் ?
தன்றுயரைப் பார்க்காமல் தன்னுழைப்பால்—இன்றுலகை
வாழவைக்கும் பட்டாளி வர்க்கத்தை நல்லபடி
ஞாலத்தில் மேலேற்றல் நன்று.

—சி. மு. சிவலிங்கம், மதுரை-21

நன்றிக்கு நன்றிசெய் ! நாடோறும் செந்தமிழே
வென்றுயரும் வண்ணம் வினையாற்று!—குன்றனைய
தோளுயர்த்தி ஏழைக்குத் தொண்டுசெய் ! சோம்பாது
நாளும் உழைத்திடுதல் நன்று.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்

நன்றி மறவாமல் நாடோறும் நீருற்றி
அன்று வளர்த்தோர்க்கே ஆர்வமுடன்—குன்றா
இளநீரை என்று மினிதே கொடுக்கும்
வளர்தெங்கு போல்வாழ்தல் நன்று

—தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-

நன்றி மகனென்று செய்வான் நமக்கென்றா
அன்றன்னை ஈந்தாள் அவனியிலே—இன்றுநமை
மானத்தின் எல்லையிலும் மார்போ டணைக்கும்தாய்
நானிலத்தில் வாழ்கவே நன்று.

—தா. சவுண்டையா, மேலச்சிவபுரி

நன்றி மறவாது நாம்போற்றுங் கால்நடைக்கு
இன்றேபோல் என்றும் உணவளித்தே—ஒன்றிடுவோம்
பொங்கல் படைப்போம் பொலிவாகப் புத்துணர்வால்
நுங்குடியை நாட்டுவோம் நன்று.

—புலவர் அ. ஆறுமுகம், எம். ஏ., பி.டி. திருச்சி-20

நன்றி உடையோனுய் நானிருப்பேன் என்வெண்பா
இன்றேனும் வந்திருந்தால் இவ்விதழில்—ஒன்றேனும்
காணமல் துஞ்சாயென் கண்கள் தொடர்ந்தெழுத
நானும் முயன்றிடுவேன் நன்று.

—பாலையூர் சுந்தரம், வேப்பந்தட்டை.

"நன்றி மறப்பது நன்றன்று", வள்ளுவனின்
குன்று மொழியதனைக் கூர்ந்தறிவீர் !—தன்மானச்
செந்தமிழர் வாழ்விற்கே நல்வளத்தைச் சேர்த்திடுவீர் !
நந்தமிழர்க் கஃதொன்றே நன்று!

—பொற்செழியன், மேட்டுப்பாளையம்.

நன்றி உணர்வோடு நந்தமிழ் நாடுயர
என்றும் உழைப்பவர் ஏழைகள்—இன்னலுறும்
பாட்டாளி ஏற்றமுறப் பக்குவமாய்ப் பல்தொழிலும்
நாட்டுடைமை யாக்குவதே நன்று.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

நன்றி மறந்திடுவார் ; நாளும் விதிஎன்பார் ;
மன்றினில் வீணே மறுத்துரைப்பார் ;—என்றுமே
பாட்டாளிக் கூட்டம் பழித்துரைப்பார் இந்நால்வர்
நாட்டில் வளர்வாரோ நன்று ?

—தமிழமுதன், மதுரை-21.

நன்றி மறப்பது நன்றன் றெனவுரைக்குந்
தென்றமிழ் வேதத் திருக்குறளை—யென்றென்றும்
சிந்தை தனிற்போற்றிச் சீர்சால் தமிழரசை
நந்தமிழர் பேணிடுதல் நன்று.

—வித்துவான் நா. சிவராம முத்துக்குமாரவேல், தேனி.

நன்றி பகர்கின்றோம் நன்னிலமே ! செங்கதிரே !
சென்று வயலுழுத மாடுகளே—இன்றிந்தப்
பொங்கற் புதுநாள்போல் பூத்துத் தமிழருளம்
தங்கித் தழைத்திடுக நன்று!

—சோ. சு. புவராசன், அரக்கோணம்.

நன்றி மறவாமை நட்டார் வெகுளாமை
கன்றி யினத்தாரைக் காயாமை—ஒன்றிய
துன்பம் பலவரினும் தூய்மை அகலாமை
அன்றே அறிஞர்க்கு நன்று.

—முருகு. சுவாமிநாதன், குடந்தை.

நன்றிக்கு நாயினைப்போல் நன்னடைக் (கு) ஏறுபோல்
வென்றிக்கு வீரமிகு வேங்கைபோல்—என்றும்
அடக்கத்தில் ஆமைபோல் வையத்து வாழ்ந்து
நடப்பதுவே இப்புவியில் நன்று.

—புலவர் வெ. வா. நடராசன், சென்னை-5.

நன்றி மறப்பவர் ; நற்றமிழைத் தூற்றுபவர் ;
என்றும் பெரியார்சொல் எள்ளுபவர் ;—சென்றுழைத்துக்
கைப்பொருள் தேடாக் கடைக்குணத்தர் ஆகியோர்
நட்பை விலக்குதலே நன்று.

—மா. கா. குருசாமி, அபிராமம்.

நன்றிக்குக் கொண்டாடும் நல்லவிழா தைத்திருநாள்
என்றைக்கும் இத்தமிழன் ஏற்றிடுவான்—குன்றனைய
தோள்தட்டிக் கொம்பிருகைச் சேர்த்திடுவான் காளையதன்
நாள்சுட்டி ஆடிடுவான் நன்று.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

நன்றிந்த நாடாண்ட நம்மறிஞர் அண்ணாவின்
பொன்னுரையைப் போற்றிப் புகழ்படைத்தார்—இன்றைக்கும்
அன்புள்ள செல்வன் அரிசனத்துப் பெண்மணக்கப்
பண்புள்ளம் பாராட்டும் நன்று.

—புலவர் மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

நன்றிக் கடனாக நல்லோர் வழியேக
இன்றென் பணியே இசைவாக—என்றுமே
நன்றும் பணிதல் நனிசிறக்கும் நல்லொழுக்கம்
நன்றே தமிழ்மொழி நன்று.

—தங்க. வேதபுரி, செய்யாறு.

நன்றி இருந்தாலென் ஞாலத்தில் போராட்டம்
ஒன்றி இருந்தாலென் ஊர்வம்பு—முன்றிலிலே
தாயே துடித்தழத் தன்னலம்பார்ப் பாரினும்
நாயேநீ எவ்வளவோ நன்று.

—இரா. பன்னீர்ச்செல்வம், திருத்துறைப்பூண்டி.


கதர் கைத்தொழில்
அங்காடி
குறளகம்
சென்னை-1
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
வெளிநாட்டார் போற்றும்
பயன் பொருள்
கலைக்கூடம்
20461
20462
20463
20464
20465

# முதல்வர் கலைஞர் தரும் பொங்கற் புதுநாள் செய்தி



வறட்சி வாட்டிய போதிலும், உளந்தளராது, உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளைப் பெரும் பரப்பில் பயிரிட்டு, அதன் பயனை அனுபவிக்கவிருக்கின்ற நேரத்தில்—கைக்கு எட்டியது வாய்க்கு எட்டும் தறுவாயில் தட்டிப் பறிப்பதைப் போல்--வெள்ளம் ஏற்பட்டு வெகுவாகச் சேதம் விளைவித்துவிட்டது. இயற்கை தரும் இன்னல்களுக்கு எதிராக, வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க விடாமுயற்சியுடன் பாடுபட்டு வரும் தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்கு என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, ''மேழி பிடிக்கும் கை; மேதினி ஆளும் கை'' என்ற நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத் தமிழ்நாடு அரசு பல்வேறு வகையிலும் முயன்று வருகிறது. எனவேதான், உழவர் திருநாளை பொங்கல் திருநாளாகக் கொண்டாட இன்றையத் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

உழவர் திருநாளாம் பொங்கலன்று உழவர் பெருமக்கள் அனைவரும், ''ஒரு மணித் தானியம் விளைந்த இடத்தில் இரு மணித் தானியம் விளைப்பேன்; ஒரு கதிர் விளைந்த இடத்தில் பலகதிர் விளைப்பேன்; ஒரு போகம் விளைந்த இடத்தில் இரு போகம் விளைப்பேன்; இருபோகம் விளைந்த இடத்தில் முப்போகம் விளைப்பேன்'' என்ற உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். அதே நேரத்தில் உங்கள் முயற்சிக்குத் தமிழ்நாடு அரசு ஆக்கமும், ஊக்கமும் அளிக்கத் தவறாது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் 4.82 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், கோயம்புத்தூர்,





சேலம், தருமபுரி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 4.13 இலட்சம் ஏக்கரில் இறைவைச் சிறுதானியங்களையும், தஞ்சாவூர், தென்ஆர்க்காடு மாவட்டங்களில் 6.10 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைகளையும் கடும் விரைவு 'ரபி' பின்பருவம் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது. இத்திட்டத்தில் பங்கு கொள்ளும் உழவர் பெருமக்களுக்கு வேண்டிய விதை, இரசாயன உரம், பூச்சி பூஞ்சாள மருந்துகள், கடன் உதவி ஆகியவைகளைத் தேவையான அளவில் தேவையான பொழுது வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாய்க் கூடுதலாக 1 இலட்சம் டன் அரிசியும், 50,000 டன் சிறுதானியங்களும் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதுபோலவே மற்ற மாவட்டங்களிலும் தண்ணீர் வசதி உள்ள இடங்களில் எல்லாம் உயர் விளைச்சல் தரும் தானிய வகைகளைச் சாகுபடி செய்யவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம், தீவிர வேளாண்மைப் பகுதித் திட்டம், சிறுநிலக் கிழார் மேம்பாட்டுத் திட்டம், பலபயிர்த் திட்டம், உயர்விளைச்சல் திட்டம், வாணிகப் பயிர்ப்பெருக்கத் திட்டம் என்பன போன்ற பல திட்டங்கள் உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவே செயல் படுத்தப்படுகின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிலவரியைத் தள்ளுபடி செய்யவும், கடன் தவணை வசூலை ஒத்திப் போடவும், உழவர் பெருமக்களுக்குத் தேவையான கடன் உதவிகளைச் செய்யவும், துண்டிக்கப்பட்ட மின்சார இணைப்புகளை உடனுக்குடன் சரிசெய்யவும், பாதைகளையும், பாலங்களையும் உடனுக்குடன் செப்பனிடவும் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்காலப் பணிகளைப் போல் விரைந்து நடைபெற்று வருகின்றன.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதற்கொப்ப, பசிப்பிணி மருத்துவர்களாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறுக என இப்பொங்கல் திருநாளில் வாழ்த்துகின்றேன்.



# எப்படிப் பொறுப்பேன்?



கவியரசு முடியரசன்

இருளும் ஒளியும் காண்பேன்—உலகின்
இயல்பெனும் மனநிலை பூண்பேன்
வறுமையும் வளமும் கண்டால்—மனித
வாழ்வில் எப்படிப் பொறுப்பேன் ?

மருதமும் பாலையும் உண்டு—பொறுப்பேன்
மண்ணின் இயல்பெனக் கொண்டு
உரியவன் எளியவன் இருத்தல்—இயல்பென்
றுரைத்தால் எப்படிப் பொறுப்பேன் ?

தடமலை சமதரை இருக்கும்—அது
தரைதனில் இயல்பென இருப்பேன்
குடிலுடன் மாளிகை இருப்பின்—மனம்
குமுறு தெப்படி யிருக்கும் ?

பூவும் பிஞ்சும் மடியும்—அது
பூமியில் இயல்பென முடியும்
சாவும் இளமையைத் தொடரின்—மனம்
சாந்தியில் எப்படிப் படியும் ?

மலர்தனிற் பனிநீர் குந்தும்—அது
மனமகிழ் அழகினைச் சிந்தும்
உலரிய விழிநீர் சிந்தின்—என்
உளமோ கடலெனப் பொங்கும்.

விரித்திடும் தோகைக் கண்கள்—காணின்
விளைத்திடும் என்மனம் பண்கள்
தரித்திடும் ஆடையிற் கண்கள்—காணின்
தலைக்கொளும் ஆயிரம் புண்கள்.

முழுமதி வடிவம் குறையும்—அது
மூன்றும் பிறையாய் மறையும்
உழுபவன் வடிவம் குறையின்—என்
உள்ளம் கனலாய்ப் புகையும்

பசியும் நலிவும் மிகுத்தால்—மனம்
பாயும் புலியாய்ச் செருக்கும்
இசையா வுலகம் படைப்பின்—இதை
எப்படி என்மனம் பொறுக்கும் ?



# விழிநீர் துடைத்த தமிழரசு

கவிஞர் சாமிபழனியப்பன்

உயிர்கட்கே உற்றதோர் உயிராய் நின்றே
உலகினையே காத்தளிக்கும் தண்மை மிக்க
உயர்கருணை வெள்ளத்தால் இவ்வை யத்தின்
உயிர்களினைப் புரக்கின்ற அருளின் ஊற்றே!
பெயலளிக்கும் பேரன்பே! தாயே! நீயேன்
பேய்க்கோலம் கொள்கின்றாய்? தாய்மை மாறிச்
செயிர்பகைநீ கொண்டிட்டால் உலகில் உன்றன்
சேய்கள்நிலை என்னாகும்? சிந்தித் துப்பார்!

ஏரிகளைக் குளங்களைநீ பாழ்ப டுத்தி
எழில்சேர்க்கும் ஆறுகளின் கரையு டைத்துச்
சீரான கழனிகளின் விளைவ ழித்துச்
சிற்றூர்கள் பலவற்றைச் சிதைத்தொ ழித்து
ஊரெங்கும் ஏழையரின் குடிசை மற்றும்
உதவுகிற கால்நடைகள் பள்ளிக் கூடம்
சீரான நல்வாழ்வு மனைகள் யாவும்
சிதைந்துபடச் செய்தாயே! நியாயந் தானா?

வானகமே உனக்கேனோ இவ்வா றான
வளர்பகைகள்? பொல்லாத வெறியாட் டங்கள்!
வானுயர்பே ரவதியினைத் தாங்கொ ணாமல்
மனநொந்து வாழ்விழந்த மக்கட் கூட்டம்
வானத்து மழைபோலக் கொட்டித் தீர்த்த
மாளாத கண்ணீரை—கண்ணீர் வெள்ளக்
கானினைநீ கண்ணாரக் கண்டும் சற்றும்
கழிவிரக்கம் கொண்டிலையே! ஐயோ பொல்லாய்!

'என்னுடலில் உயிர்தங்கி நிற்கும் மட்டும்
ஏழைகளின் வாழ்வுக்கும் இந்த நாட்டின்
நன்மைக்கும் உழைத்திடநான் தவறேன்' என்னும்
நல்லதோர் உறுதிபெற் றுழைக்கும் எங்கள்
இன்னுயிராம் அருந்தலைவர் தமிழ்நாட் டுள்ள
இனங்காக்கும் முதலமைச்சர் கலைஞர் உன்றன்
வன்செயலைக் கண்டுமனம் நொந்தே கண்ணீர்
வடித்திட்டார்: விரைந்தோடி உதவி செய்தார்!





வீடிழந்தோர்க் குதவுவதை இரும டங்காய்
விரிவாக்கி உதவிடவும் கடன்கள் பெற்று
வீடுகட்டிக் கொள்வதற்கும் அரிச னங்கள்
வீடுகட்ட மூங்கில்களைப் பெறுவ தற்கும்
ஆடைதரும் நெசவாளர் கருவி வாங்க
அன்பளிப்பாய் ஒருநூறு பெறுவ தற்கும்
கேடுகளைக் களைந்திடவும் ஆணை யிட்டார்!
கேடுற்றோர் வாழ்வுபெற் றுயர்கின் றாரே!

வெள்ளத்தால் முற்றழிந்த நிலங்க ளுக்கு
வரிவிதிப்பை விலக்கிடவே ஆணை யிட்டார்!
வெள்ளத்தால் கரையிழந்த ஆறு கட்கு
மீண்டும்நற் கரையெடுத்து விரிக்கின் றார்கள்;
பள்ளிகளை ஏரிகளைச் சாலை மற்றும்
பழுதடைந்த குளங்களினைப் புதுப்பித் திங்கே
வெள்ளத்தின் பாதிப்புச் சுவடே காணா
வகைசெய்யத் திட்டமிட்டுப் பணிமேற் கொண்டார்.

குடும்பத்துத் தலைமகனை இழந்தே வாடும்
குடும்பத்திற் கிரண்டாயி ரம்ரூ பாயும்
குடும்பத்தின் மற்றவர்கள் இறந்தி ருந்தால்
கொள்உதவி ஓராயி ரம்வ ரைக்கும்
கொடுத்திடவும் பெற்றோரை இழந்து விட்ட
குழந்தைகளை அன்பில்லம் சேர்ப்ப தற்கும்
விடுத்துள்ள தமிழரசின் ஆணை கண்டு
விரிமனத்தர் மனமுவந்து போற்று கின்றார்!





# ஒளி வெள்ளம்

புலவர் மு. சிக்கந்தர்



அண்டத்தின் கண்கள்நான் ; உலகை யாளும்
ஆதவனின் மைந்தன்நான் ; செம்பா கற்காய்க்
கொண்டையுடன் விளங்குகின்ற சேவற் கோழி
கூவிடுமுன் எழுகின்ற வெள்ளி மீனில்,
தண்டமிழப் பாட்டாளி வியர்வை முத்தில்,
தளிருறங்கும் பனித்துளியில், வைரக் கல்லில்,
விண்டுரைக்க முடியாமல் குடியி ருப்பேன்.
வெட்டவெளிக் கெட்டாத பெட்ட கம்நான்.



ஒற்றைத்தேர் மேலேறிக் குதிரை யேழில்
உலகைவலம் வருகின்றேன் என்ப தற்குக்
கற்றறிந்தோர் விளக்கமென்ன? வெண்பெட் டிக்குள்
கண்கவரும் ஏழுவண்ணப் பட்டுண் டென்று
சொற்றமிழால் கூறுங்கள்! வான வில்லைச்
சுட்டிவந்தால் காட்டுங்கள்! வெள்ளை யுள்ளும்
உற்றறிந்தால் உள்ளிருப்பை அறிவோம் என்ற
உண்மையினை விள்ளுங்கள்! இன்னும் சொல்வேன்.

சத்திரத்தில் நானிருப்பேன் ; விண்ணில் மாநட்
சத்திரத்தில் நானிருப்பேன் ; வெற்றி டத்தில்
புத்தர்சிலை போலிருப்பேன் ; ஏழை வாழ்வைப்
புதுப்பிப்பார் நெஞ்சத்தில் குடியி ருப்பேன் ;
எத்தரில்லம் அலங்கரிப்பேன் ; எனினும், அன்னார்
இதயத்தில் சிறையிருக்க விரும்ப மாட்டேன்.
அத்தின்றிப் பலாப்பழம்போல் என்னை எண்ணி
அண்டுகின்ற ஈக்கூட்டச் சிறகொ டிப்பேன் !

ஒலிசெல்ல முடியாத கண்ணா டிக்குள்
ஊடுருவிப் பாய்கின்ற என்னைப் போன்று
விழியில்லா மக்கள்தம் உள்ள மெல்லாம்
விழிப்படையக் கல்வியெனும் விழியைத் தாரீர் !
நிலவில்லா நேரத்தில் 'விளக்கை' ஏற்றி
நெளியிருட்டை முடிந்தமட்டும் விரட்டு தல்போல்
நிலமில்லா ஏழைக்கோ வறுமை வாழ்வில்
நிலவாமல் முடிந்தமட்டும் உதவு வீரே !





# செம்மையே நிறைப்பாள்!

புலவர் தமிழ்ப்பித்தன்

மார்கழித் திங்கள் நீங்கி
மணங்கவர் 'தை'யாள் வந்தாள்!
யார்தடுத் தாலும் நில்லா
அருள்மிகு நெஞ்சங் கொண்டாள்
வேர்பெறு புவியின் வாழ்வில்
விளைபயன் உறையச் செய்வாள்!
சீர்மிகத் தருவாள்; பொங்கும்
செம்மையே நிறைப்பாள் அன்பாய்!

உழவரின் நெஞ்சி லெல்லாம்
உவகையே உலவச் செய்வாள்:
பழகிடும் உழவு மாட்டின்
பயன்களை எடுத்துச் சொல்வாள்!
அழகினை எங்கும் தேக்கி
அகம்முகம் மலரச் செய்வாள்!
முழங்கிடும் முழக்கில் எல்லாம்
புத்துணர்(வு) ஈவாள் அன்னாள்!

வறுமையை ஓடச் செய்தே
வளமையை மகிழ்வாய்ச் சேர்ப்பாள்
சிறுமைகள் களைவாள்; தூய
செயல்களை நிறைப்பாள்; மக்கள்
'பொறுமையின் பரிசே' என்று
புகன்றிடும் வகையில் இங்கே
அறுவடைப் பயிர்கள் சேர்ப்பாள்!
அன்னையின் வடிவாய் நிற்பாள்!

கன்னலும் மணிச்செங் நெல்லும்
கவினுறப் படைப்பாள்; வீட்டுச்
சன்னலின் ஓர மெல்லாம்
சரித்திரம் சமைப்பாள்; மின்னும்
சின்னவர், இளைஞர், மூத்தோர்
சிந்தையில் இன்ப வெள்ளம்
பின்னிடச் செய்வாள்; நாளும்
பெருகிடச் செய்வாள் மெய்யாய்!

தலைவியைப் பிரிந்து சென்றும்
தண்கடல் தாண்டி வாழ்ந்தும்
உலையினைப் போலும் உள்ளம்
உளைந்திடும் தலைவர் எல்லாம்
அலையினும் விரைவாய் வந்தே
அன்புடன் இல்லம் நாடும்
நிலையினைத் தோற்றம் செய்தே
நிம்மதி சேர்ப்பாள் வாழ்க!

# நல்லவை தொடர்வோம்

மாட்சிமிகு தமிழரசு மலர்ந்த பின்னே
மாநிலத்தில் சாதனைகள் மிகுந்த தம்மா !
ஆட்சிமொழி தமிழ்,அனைத்தும் தமிழே ஆக
அரியதொரு வரலாறு காணு கின்றோம் ;
காட்சிகளே நிலையான சாட்சி கள்தாம் !
கடுவேக மின்இணைப்பால் இருளி னின்றும்
மீட்சியுற்றோம் ; விளையுளிலே நிறைவு பெற்றோம் ;
வேளாண்மைத் திறத்தாலே விருதும் பெற்றோம் !

அரிசிவகை பெருகிடவே குவியும் வண்ணம்
அரும்பசுமைப் புரட்சியினை நாமே செய்தோம் !
பரிசெனவே புன்செய்க்கும், நன்செய் என்னில்
பதினறு மாவுக்கும் வரிவி லக்காம் !
வரிசையுடன் விவசாயத் தொழிலா ளர்க்கு
வாகான வீட்டுமனை நிலப்பட் டாக்கள்
சரிசமமாய் வழங்கியவை ஆறு லட்சம் ;
சரித்திரத்தில் ஐந்தாண்டில் இவைபோல் உண்டோ ?

காடான மேடான நிலப்ப ரப்பைக்
கணக்கின்றிப் பிணைத்தஉச்ச வரம்பு தன்னைக்
கோடாமல் ஆராய்ந்த திந்த ஆட்சி ;
கொடுமைதனை விலக்கியதே பெரும்பு ரட்சி !
மூடாமல் ஆலைகளை இயக்கு தற்கு
முனைகின்ற முயற்சியெலாங் கொஞ்சந் தானோ ?
வாடாமல் தொழிலாளி மக்கள் வாழ
வாரியள்ளிக் கொடுத்தோமே எட்டு லட்சம் !

தாய்ப்பாச உணர்வோடிம் மாநி லத்தைத்
தமிழ்நாடென் றழைக்கின்றோம் ; தியாகி கட்கும்
காப்பாக நிதிவசதி உதவு கின்றோம் ;
களைத்திருந்த ஊழியர்க்குச் செவியைச் சாய்த்தே
மூப்பான இரகசியக் குறிப்பொ ழித்தோம்.
முகிழ்த்திட்ட மகிழ்ச்சிவெள்ளம் அடங்கு முன்னே
கோப்பாக முப்பத்து நான்கு கோடி
கூடுதலாய் ஊதியத்திற் கொடுத்தோம் அன்றோ ?







## கவிஞர் கருணானந்தம்

அறங்காவல் பொறுப்பினிலே அரிச னங்கள்
அர்ச்சகராய்ப் பதவிபெறச் சட்டம் செய்தோம்;
உறங்காதெட் டரைக்கோடிப் பொருளோ துக்கி
உள்நுழையாத் துறையினிலும் இவர்முன் னேறப்
புறங்காணும் குறியீட்டை உயர்த்த லானேம்;
புதுப்புதிதாய்த் தொழிற்பயிற்சி நிலையம் வைத்தோம்;
திறங்காணும் தேர்வுதனை எழுது தற்கே
தேவையுள்ள தனிப்பயிற்சி வகுப்புந் தந்தோம்!

மாணவர்கள் விடுதிபல ஏற்ப டுத்தி
வான்புகழக் "காந்திநீதி" வழங்கு கின்ருேம்;
மோனேயெனப் புகுமுகத்தில் முன்நீற் போர்க்கு
முழுநூறு திங்களுக்குத் தருகின் ருேமே!
கேணிதனைத் தோண்ட,உழும் மாடு வாங்கக்
கிடைக்கின்ற தொகை, உதவி யாவும் யாரால்?
ஏணியென நிமிர்ந்துநிற்கும் மாடி வீட்டில்
இடங்கிடைக்கும் என்றவரே நினைத்த துண்டா?

பிற்பட்டோர் நலங்காணத் தனிய மைச்சும்
பிறபயனும் விரைந்தெய்தக் குழுவ மைத்தோம்;
முற்பட்டே தொழில்துறையின் மேன்மை ஓங்க
முனைப்புடனே வட்டியிலாக் கடன ளித்தோம்;
அற்புதமாய் முடிதிருத்து வோரும், ஆடை
அழுக்கெடுப்போர் தாமும்கைக் கருவி பெற்ருர்!
சொற்பமெனக் கருதாமல் மாண வர்தாம்
சுழற்கடலில் படகோட்ட வழிவ குத்தோம்.

வருவாயில் மூன்றிலொரு பாகம் கல்வி
வளர்வதற்கே செலவழிக்கும் நிலைமை இன்று;
பெருவாரி யானவர்கள் கற்கு மாறு
பெருகிவளர் புகுமுகமும் இலவ சந்தான்!
திருவாழும் கோவில்கள் ஏழு கோடி
திரட்டுகின்ற சூழலுடன் வழிபாட் டிற்கோ
உருவான நறுந்தமிழாம்; பிணிய கற்றும்
உயர்வான மருந்தகமாம் அருமை அன்ருே?










குடிசைகளைக் கோபுரம்போல் மாற்று கின்றோம் ;
குடிநீரும் வடிகாலும் கொண்டு வந்தோம் ;
படிப்பதற்கே இருமொழிகள் போதும் என்றோம் ;
பார்வைதரும் கண்முகாம்கள் நடாத்து கின்றோம் ;
துடிக்கின்ற தொழுநோயர் மறுவாழ் வில்லம்—
சுவையான சத்துணவுத் திட்டம் கண்டோம் !
படித்தவர்க்காம் இளைஞரணி யோடு, மேத்தப்
பயனுள்ள சீரணியும் சிறக்கச் செய்தோம் !

கோச்சோழன் கண்டமனு நீதித் திட்டம்
குக்கிராமம் வரையிந்நாள் குடியே றிற்றே !
ஆச்சரியப் படுமாறு சிற்றூர் எல்லாம்
அண்மைவரும் பேரிணைப்புச் சாலை யாலே !
மூச்சடக்கி மூழ்கியருஞ் சங்கெ டுப்போர்
முதன்முதலாய் முழுவுரிமை பெற்ற தெங்கே ?
சீச்சீயென் றொதுக்காமல் தோளி ணைக்கும்
சீர்திருத்த மணச்சட்டம் வந்த திங்கே !

பேருந்தை நாட்டுடைமை ஆக்கு கின்றோம் ;
பேணிடுமா நிலத்திட்டக் குழுவ மைத்தோம் ;
சீருந்த விடாதவட்டிக் கடனால் தேய்ந்து
தென்பிழந்தோர் வலிவுறவே உரமுந் தந்தோம் ;
யாருந்தம் பண்ணையாளை வெளியேற் றாமல்
ஏற்பாடு, கூலிக்குச் சட்டம் போட்டோம் !
ஊரெங்கும் சுற்றுலாவை நாடு வோர்க்கும்
உதவுமொரு வாரியமும் புதிதாய்க் கண்டோம் !

ஆசிரியர், பொறியாளர் வேலை வாய்ப்பும் ;
அரக்கோணம் சேலமிரும் பாலை யோடு,
பேசுந்தூத் துக்குடியில் பெரிய திட்டம் !
பிணியகற்றக் கூவஞ்சீ ரமைப்பும், அண்ணா
வீசுபுகழ்ச் சதுக்கமங்கே நீச்சல் வாவி,
வெற்றிபெற்ற குடும்பநல முனைப்பி யக்கம் ;
நாசியின்மேல் விரல்வைத்து வியக்கு மாறு
நாடுவாழ நல்லனவே தொடர்வோம்; வாழ்வோம் !



# வெள்ளம் விளைத்ததோ வேதனை - அரசு



# விரைந்து உதவியது சாதனை

ஏழை, எளிய, சாமானிய மக்களின் வாழ்வில் வளம் கூட்டிடத் தமிழ்நாடு அரசு அயராது உழைத்துவருகிறது.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண முயலும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு எத்தனை முட்டுக்கட்டைகள்! பழுத்த மரத்தில் தான் கல்லடி விழும் என்பதுபோல், பாமர மக்களின் பாதுகாவலனாக விளங்கும் தமிழ்நாடு அரசுக்கு எத்துணைத் தொல்லைகள்!

தொல்லைகளைக் கண்டு துவண்டுவிடாத தமிழ்நாடு அரசு, மக்களின் துயர் துடைக்கும் பணியையே மூச்சாகக் கொண்டு செயலாற்றி வருகிறது என்பது, இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்தால் தெரியும்!



"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!" என்பதற்கொப்ப, உணவு அளித்து உயிர்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் 75 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங்களை உற்பத்தி செய்யப் பல்வேறு வகையிலும் முயற்சி எடுத்துக் கொண்டது. ஆனால், தமிழ்நாடு அரசின் பெரு முயற்சிக்கு எதிராக, வேளாண்மை உற்பத்தியைச் சீர்குலைக்கும் இரட்டைப் பிறவிகளான வறட்சியும், வெள்ளமும் தோன்றின. இந்த இரட்டைப் பிறவிகளுடன் "புயல்" என்னும் கொடியவனும் சேர்ந்து கொண்டான். இயற்கையின் கோரக் கரங்களான வறட்சி, வெள்ளம், புயல் ஆகிய மூன்றும் தமிழகத்தின் குரல்வளையை இந்த ஆண்டு நெரிக்க முயன்றன. இக்கோரக் கரங்களின் பிடியிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றத் தமிழ்நாடு அரசு தன் கடமையைச் செவ்வனே செய்துள்ளது என்றால் மிகையாகாது.

இந்த ஆண்டில் தென் மேற்குப் பருவமழை (ஜூன் முதல் செப்டம்பர் வரையான காலத்தில் வீசும் காற்றினால் ஏற்படும் பருவமழை) முன் கூட்டியே துவங்கிய போதிலும், வழக்கமாகப் பெய்யும் அளவுக்குப் பெய்யாமலும், பெய்த மழையும் எங்கும் ஒரே சீராகப் பெய்யாமல் முறையற்று அங்கும் இங்குமாகப் பெய்து விட்டும் போய்விட்டது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை வறட்சி வாட்டியது. அப்பகுதிகளில் உழவர் பெருமக்கள் சாகுபடி செய்ய முடியாமல் பெருத்த ஏமாற்றத்திற்கு உள்ளானார்கள். கிடைத்த மழையைக் கொண்டு சாகுபடியைத் துவக்கியவர்களும், பிற்பகுதியிலும் மழையின்மையால் எதிர்பார்த்த அளவுக்கு மகசூல் பெறாமல் ஏமாந்தனர்.

நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்நாடு அரசு 600 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வறட்சி நிவாரணத் திட்டம் தீட்டியது. இந்திய அரசின் ஆய்வுக்குழு, வறட்சியின் கொடுமைக்குள்ளான தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களைப் பார்வையிட்டது. அக்குழுவின் பரிந்துரைக்கேற்ப இந்திய அரசு, 150 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக வழங்கியது. தமிழ்நாடு அரசு வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்தது.

நல்ல காலமாக அக்டோபர், நவம்பர் திங்களில் பருவம் தமிழ்நாட்டிற்கு வாய்ப்பாக அமைந்தது. வடகிழக்குப் பருவ மழையினால் (அக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலத்தில் வீசும் காற்றினால் ஏற்படும் மழை), வழக்கத்திற்கும் அதிகமான மழை நவம்பர் திங்களுக்குள்ளாகவே தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது. இதன் பயனாய், நீர்த் தேக்கங்களெல்லாம் நிரம்பின; ஆற்றுப் பாசனங்களின் கீழும், ஏரிப் பாசனங்களின் கீழும் சாகுபடி வேலைகள் தீவிரமடைந்தன.

வறட்சியின் கொடுமை நீங்கிய நிம்மதியில் பெருமூச்சு விட்டு விட்டுப் பொதுவாக மக்களும், குறிப்பாக உழவர் பெருமக்களும் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்த நேரத்திலே, பேரிடியென வந்தது ஒரு செய்தி!





"தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் இருந்து கிழக்கு-தென்கிழக்கு மூலையில் 650 கிலோ மீட்டர் தொலைவில் வங்காள விரிகுடாவில் குறைந்த அழுத்தப் பகுதி (Low pressure area) தோன்றியுள்ளது!" என்ற கொடிய செய்தியை வானிலை ஆராய்ச்சித் துறையினர் முன்கூட்டியே தெரிவித்தனர்.

'புயல் உருவாகிறது!' என்ற செய்தி கிடைத்த உடனேயே தமிழ்நாடு அரசு, கடற்கரை ஓரத்தில் வசிப்பவர்களையும், தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களையும் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல ஆவன செய்தது. கடற்கரை ஓரத்தில் உள்ள மாவட்ட அலுவலர்கள் இப்பணியினைச் சிறப்புறச் செய்தனர்.

ஆறாம் தேதி அன்று காலை 5 மணியளவில் கடலூருக்கருகில், தமிழகத்தைக் கொலைக் களமாக்க வேண்டுமென்ற கொடிய வெறியுடன் புயல் கரையைக் கடந்தது. அப்புயல் தன்னுடைய கோரத் தாண்டவத்திற்குத் துணையாகக் கொட்டும் மழையையும், குலைநடுங்க வைக்கும் குளிர் காற்றையும் அழைத்து வந்தது.

மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது! வானமே இடிந்து விட்டதோ என்ற அளவுக்குப் பெருமழை கொட்டியது! சென்னை முதல் வேதாரண்யம் வரையான கடற்கரைப் பகுதி டிசம்பர் 6, 7 நாட்களில், இதுவரை காணாத மழையைப் பெற்றது.

குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏராளமான மரங்களும், மின்சாரக் கம்பங்களும், தந்திக் கம்பங்களும் புயலுக்கு அடிபணிந்தன. பெருமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளம் ஏராளமான ஏரிகளை உடைத்துச் சாலைகளையும், புகைவண்டிப் பாதையையும் பாழ்படுத்தியது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடற்கரை ஓரப்பகுதிகளில் டிசம்பர் 6-ம் நாள் எந்த விதப் போக்குவரத்தும் நடைபெறவில்லை.

இவ்வாறு பெரும் பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் நாச வேலை காரணமாகத் தமிழ்நாட்டில் 81 பேர் இறந்தனர்; பல்லாயிரக் கணக்கான கால்நடைகள் உயிரிழந்தன; அரசுக்கும், பொது மக்களுக்கும் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பாழாயின.

அப்பப்பா! வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்களை நினைத்தாலே நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. ஆயினும் அவைகளை ஈண்டு மாவட்ட வாரியாகக் கூறவேண்டியது கடமையாக உள்ளது.









## தென்னார்க்காடு

கடந்த நூறாண்டுக் காலத்தில் இத்தகைய வெள்ளம் ஏற்பட்டதில்லை என்று புள்ளி விவரங்கள் மட்டுமல்ல, பல முதியவர்களும் கூறுகிறார்கள். இம்மாவட்டத்திலுள்ள 2,203 கிராமங்களில், 1,057 கிராமங்கள் வெள்ளத்தால் பாழாகியுள்ளன. இம்மாவட்டத்தில் 110 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட திருக்கோவிலூர் அணை, முழு அளவில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. பெண்ணையாற்று வெள்ளம் தேசிய நெடுஞ்சாலையில் அரசூர் என்ற இடத்தில் இருந்த பாலத்தைப் பாழ்படுத்திவிட்டதுடன், அருகில் திருச்சி—விழுப்புரம் கார்டு வழியிலுள்ள புகை வண்டிப் பாதையில் பாலத்தை முழு அளவில் அடித்துச் சென்றுவிட்டது. மணிமுத்தாறு, கோமுகியாறு, வெள்ளாறு, பரவனாறு, மலட்டாறு, கெடிலம் முதலிய இதர ஆற்று வெள்ளங்களும் தென்னார்க்காடு மாவட்டத்தை வெள்ளக் காடாக்கின. தென்னார்க்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி, 5 முதல் 6 அடி தண்ணீரில் 4 நாள் காலத்திற்கு மூழ்கியிருந்தது.





தென்னூர்க்காடு மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு சேதம் ஏற்பட்டுள்ளது.

| | |
|---|---|
| உயிரிழந்தவர்கள் ... ... | 26 |
| உயிரிழந்த கால்நடைகள் ... ... | 458 |
| சேதமடைந்த வீடுகள் ... ... | 88,000 |

## பாழான பயிர்களின் பரப்பும், மதிப்பும்

| | பரப்பு (ஏக்கர்) | மதிப்பு (இலட்சம் ரூபாய்) |
|---|---|---|
| நெல் ... ... ... | 1,00,000 | 160·00 |
| வாழை ... ... ... | 1,000 | 40·00 |
| கரும்பு ... ... ... | 350 | 9·45 |
| வெற்றிலை ... ... ... | 300 | 4·50 |
| துவரை ... ... ... | 10,000 | 10.00 |
| | 1,11,650 | 223·95 |



## வெள்ளத்தினல் ஏற்பட்ட இதர சேதமும், அவைகளைப் பழுது பார்ப்பதற்குத் தேவையான தொகையும்

| | சேதமடைந்த எண்ணிக்கை | பழுது பார்க்கத் தேவைப்படும் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| பொதுப்பணித்துறை ஏரிகள் ... | 504 | 2,46,50,000 |
| சிறிய நீர்ப்பாசன ஏரிகள் ... | 465 | 41,53,000 |
| நெடுஞ்சாலைகள் ... ... | 169 | 1,33,64,000 |
| ஊராட்சி ஒன்றிய, ஊராட்சி மன்ற, நகராட்சிச் சாலைகள் | 1,280 | 1,38,81,000 |
| பொதுக் கட்டடங்கள் ... ... | 733 | 40,48,000 |
| மின்சார அமைப்புகளுக்குப் பழுது பார்த்தல் முதலிய இதர பணிகள் ... | | 11,68,000 |
| பழுது பார்த்துச் செப்பனிடத் தேவைப்படும் தொகை | | 6,12,64,000 |

## தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி, மன்னார்குடி ஆகிய வட்டங்கள் பெருஞ்சேதத்திற்கு உள்ளாகியுள்ளன. இம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் 8 பேர்கள் உயிரிழந்துள்ளனர்; 46 கால் நடைகள் இறந்துள்ளன; 10,000 வீடுகள் சேதமடைந்துள்ளன; 83,450 ஏக்கரில் பயிரிடப் பட்டுள்ள 83·45 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. இம் மாவட்டத்தில் உடைப்பெடுத்த வாய்க்கால்களையும், ஏரிகளையும் செப்பனிடவும், சாலைகளைப் பராமரிக்கவும், பொதுக் கட்டடங்களைப் பழுது பார்க்கவும், இதர வெள்ள நிவாரணப் பணிகளுக்காகவும் ரூபாய் 4,96,94,000 தேவைப் படுகிறது.

## கோவை மாவட்டம்

கோவை மாவட்டத்தில் பவானி ஆற்று வெள்ளமே பெருஞ்சேதம் விளைவித்துள்ளது. பவானி நகரத்திற்குச் செல்ல, பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தின் இரு ஓரத்தையும் பவானி ஆற்றின் வெள்ளம் உடைத்துள்ளதுடன், பவானி நகரின் பெரும் பகுதியை மூழ்கடித்துக் காவிரியாற்றில் கலந்துள்ளது. இம்மாவட்டத்தில் வெள்ளத்தினால் 9 பேர் உயிரிழந்துள்ளனர்; 2,000 கால் நடைகள் மடிந்துளளன; 63,870 ஏககரில் பயிராகியிருந்த 243·82 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் பாழாகியுள்ளன; 16,000 வீடுகள் சேதமடைந்துள்ளன. இம்மாவட்ட ஏரிகளிலும், சாலைகளிலும் ஏற்பட்டுள்ள உடைப்புகளை அடைத்துச் செப்பனிடவும், இதர பணிகளுக்காகவும் ரூபாய் 2,09,34,000 தேவைப் படுகிறது.

## சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப் பட்ட பகுதி சேலம் நகரமும், ஆத்தூர் நகரமும், சுற்றியுள்ள கிராமங்களுமேயாகும். இம்மாவட்டத்தில் வெள்ளத்தினால் 6 பேர்கள் உயிரிழந்தனர்; 500 கால்நடைகள் மாண்டன; 7,700 வீடுகள் பாழடைந்தன; 11,390 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 93·35 இலட்சம் மதிப்புள்ள பயிர்கள் பாழடைந்தன. இம்மாவட்டத்தில் ஏரிகளையும், சாலைகளையும் பழுதுபார்க்கவும், இதர நிவாரணப் பணிகளுக்காகவும் ரூபாய் 1,51,14,000 தேவைப்படுகிறது.

## வட ஆர்க்காடு

வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள சாத்தனூர் அணையிலிருந்து டிசம்பர் 8, 9 நாட்களில் 24 மணி நேரத்தில் திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவு, சாத்தனூர் அணையின் கொள்ளளவை விட 3½ மடங்காகும். இவ்வாறு திறந்து விடப்படாதிருந்தால், சாத்தனூர் அணை என்னவாகியிருக்கும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. டிசம்பர் 7, 8 நாட்களில் பெய்த 12 முதல் 15 அங்குல மழையே இப்பெரு வெள்ளத்திற்குக் காரணமாகும். சாத்தனூர் அணைக்குக் கீழே பெண்ணையாற்றங் கரையில் உள்ள 20 கிராமங்கள் பெரும் சேதமடைந்து, ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு எவ்வித தொடர்பும் இன்றி வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தன. இம்மாவட்டத்தில் 6 பேர் உயிரிழந்தனர்; 58 கால்நடைகள் மாண்டன; 3,000 வீடுகள் சேதமடைந்தன; 14·22 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 3,620 ஏக்கர் நெல் பயிர்கள் பாழாகியுள்ளன.



இம்மாவட்ட ஏரிகளையும் சாலைகளையும் சீர் செய்யவும், இதர வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் ரூபாய் 73,39,000 தேவைப்படுகிறது.

### செங்கற்பட்டு மாவட்டம்

பாலாற்றில் பெரும்பாலும் எப்பொழுதும் வெள்ளம் வராது என்பார்கள்! ஆனால், அந்த ஆற்றிலும் அண்மையில் டிசம்பரில் பெய்த பெரு மழையினால் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதிலிருந்தே, வெள்ளத்தின் தாக்குதலை வெளிப்படையாக உணர முடிந்துள்ளது. இம்மாவட்டத்தில், வெள்ளம் பெரும்பாலான ஏரிகளை உடைத்துப் பாழ்படுத்தியுள்ளது. இம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஒருவர் உயிரிழந்துள்ளார்; ஆனால், 39 கால்நடைகள் மாண்டுள்ளன; மற்றும் 5,000 வீடுகள் பாழடைந்துள்ளன. 2,085 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 12·51 இலட்சம் மதிப்புள்ள நெற்பயிர்வகைகள் பாழாகியுள்ளன. இம் மாவட்டத்தில் ஏரிகளையும் சாலைகளையும் செப்பனிட ரூபாய் 81,40,000 தேவைப்படும்.

### தருமபுரி மாவட்டம்

தருமபுரி மாவட்டத்தில் பெய்த பெரும் மழையினால் பல சிறிய பாசன ஏரிகள் உடைந்து, பல இடங்களில்சாலைகளும்பழுதடைந்துள்ளன. இம்மாவட்டத்தில் வெள்ளத்தினால் 4 பேர்கள் உயிரிழந்தனர்; 44 கால்நடைகள் மாண்டன; 825 வீடுகள் சேதமடைந்தன; 2,900 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 17·15 இலட்சம் மதிப்புள்ள பயிர்கள் பாழாகி விட்டன. இம்மாவட்டச் சாலைகளையும், ஏரிகளையும், பொதுக்கட்டடங்களையும் பழுது பார்க்க ரூபாய் 33,00,000 தேவைப்படுகிறது.

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வெள்ளச் சேதம் குணசேகரம், இலப்பைக்குடிக்காடு ஆகிய 2 இடங்களிலே தீவிரமடைந்துள்ளன; இம்மாவட்டத்தில் வெள்ளத்தினால் 6 பேர்கள் உயிரிழந்தனர்; 6 கால்நடைகள் மாண்டன; 4,000 வீடுகள் சேதமடைந்தன; 9,600 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த ரூபாய் 41.60 இலட்சம் மதிப்புள்ள நெல்லும், சோளமும், மிளகாயும் பாழாகியுள்ளன. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும், ஏரிகளையும் செப்பனிட ரூபாய் 53,80,000 தேவைப்படுகிறது.

### நீலகிரி மாவட்டம்

நீலகிரி மாவட்டத்தில் பெய்த இடைவிடாத அடைமழையின் காரணமாகப் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு, சாலைகள் பழுது பட்டுள்ளன. இம்மாவட்டத்தில் இம்மழையினால் 15 பேர் உயிரிழந்தனர்; 9 கால்நடைகள் மாண்டன; 51 வீடுகள் இடிந்தன; நீலகிரி மாவட்டத்திலுள்ள சாலைகளைச் செப்பனிட 20,06,000 ரூபாய் தேவைப்படுகிறது.

### சென்னை மாவட்டம்

பெருமழையின் காரணமாகச் சென்னை நகரின் தாழ்வான பகுதிகளில் எல்லாம் வெள்ளம் தேங்கி நின்றது. இம்மழையின்போது 3 பேர் உயிரிழந்தனர்; 5 கால்நடைகள் மாண்டன; 35,000 வீடுகள் பாழாகின. சென்னை நகரச் சாலைகளில் பல இடங்கள் பழுதடைந்துள்ளன. இவைகளைச் செப்பனிட ரூபாய் 51,50,000 தேவைப்படுகிறது.

### மாநில அளவில் ஏற்பட்ட சேதம்

டிசம்பர் 2-ஆம் நாள் தோன்றி, டிசம்பர் 6-ஆம் நாள் கடலூர் அருகே கரையைக் கடந்த புயலாலும், அதையொட்டிப் பெய்த பெருமழையாலும், அதன் காரணமாகத் தோன்றிய வெள்ளத்தாலும், இது வரை கூறியவற்றால், தமிழ் நாடெங்கும் வெள்ளத்தில் மூழ்கியதாலும், வீடுகள் இடிந்து விழுந்ததாலும், மரங்கள் விழுந்ததாலும், மின்சாரக் கம்பங்கள் சாய்ந்து மின்சாரம் பாய்ந்ததாலும் 81 பேர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களில் 39 பேர்கள் வயது வந்தவர்கள்; அவர்களே அவர்களது குடும்பத்தைக் காப்பாற்றி வந்தவர்களாவார்கள்.

ஆயிரக் கணக்கான கால்நடைகள் பெருமழையால் இறந்ததுடன், வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவ்வாறு சேதமடைந்த கால்நடைகளையும் அவற்றின் மதிப்பையும் கணக்கிடக் காலம் அதிகம் ஆகும்.



புதுடில்லியில் திட்டக் குழுவினரைச் சந்தித்த முதலவர் கலைஞர் அவர்களும், தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களும் சந்தித்த போழுது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேத விவரங்களைத் தெரிவித்தனர்

தமிழ்நாடெங்கும் 1,70,000 வீடுகள் பாழடைந்துள்ளன. பெண்ணையாறு, கெடிலம் ஆறு ஆகியவற்றின் கரையிலிருந்த சில குக்கிராமங்கள் முழு அளவில் நாசமடைந்துள்ளன.

டிசம்பர் 12-ஆம் நாள் வரை, வெள்ளம் வடியாதிருந்ததன் காரணமாகத் தாழ்வான பகுதிகளில் வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ஏறத்தாழ ஒரு வார காலத்திற்கு வெள்ளத்தால் சூழப்பட்டிருந்தனர்.

சாத்தனூர், பவானி சாகர் ஆகிய இரு பெரிய நீர்த்தேக்கங்களும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டாலும், திருக்கோவிலூருக்கு அருகில் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்

டிருந்த அணை முழு அளவில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. அதுபோலவே கள்ளக்குறிச்சிக்கு அருகில் கெடிலம் ஆற்றில் கட்டப்பட்டிருந்த அணையும் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பாழடைந்துள்ளது. 1,524 பெரிய பாசன ஏரிகளிலும், 1,387 சிறிய நீர்ப் பாசன ஏரிகளிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளன.

ஏரிகள் உடைந்ததன் காரணமாகச் சாலைகளிலும், தொடர் வண்டிப் பாதைகளிலும் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் புகுந்ததால் 5 நாட்கள் வரை, சென்னையிலிருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

தமிழ்நாடெங்கும் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்களுக்கு ஏற்பட்ட சேதம் சொல்லுந்தரமன்று! 40,765 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் முழு அளவில் பாழாகி விட்டன. 2,47,800 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்களில் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு நாசம் விளைந்துள்ளது.

ஆறுகளில் பெருக்கெடுத்து வந்த வெள்ளம், 4,000 ஏக்கர் நல்ல வளமான சாகுபடி நிலங்களில் மணலைக் குவித்துள்ளது. மணல் மேடுகளை அகற்றினல் அன்றி, அந்நிலங்களில் சாகுபடி செய்வதென்பது எளிதல்ல. பல உழவர் பெருமக்களுடைய எண்ணெய் இயந்திரங்களும், மோட்டார்களும் மணலில் புதைந்தும், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டும் சேதமடைந்துள்ளன.

### உடனடி நிவாரணங்கள்

வருவாய், காவல், பொதுப் பணி, தீயணைப்பு ஆகிய துறைகளைச் சேர்ந்த மாவட்ட அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ், ஒன்று பட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான உடனடி நிவாரணப் பணிகளைச் செய்துள்ளனர். வெள்ளத்தில் சிக்கி, வெளியேற முடியாத நிலையில் இருந்த மக்களைக் காப்பாற்றுவதில் ஆயுதப்படைக் காவலாளர்களும், தீயணைப்புப்படையினரும் அரும்பணியாற்றியுள்ளனர்.

சுற்றிலும் வெள்ளத்தால் சூழப்பட்டு, உயிர் பிழைப்போமா என்று ஏங்கிய நிலையில் இருந்த மக்களைக் காப்பாற்றும் பணியில் இந்தியக் கடற்படையினர் ஆற்றியுள்ள சேவை மிகவும் குறிப்பிடத் தக்கது. அவர்கள், ஹெலிகாப்டர்களை வைத்துக் கொண்டு தென்னார்க்காடு மாவட்டத்தில் 4,319 மக்களைக் காப்பாற்றியுள்ளது மிகவும் பாராட்டிற் குரிய சேவையாகும்.

வீட்டையும், உடைமைகளையும் இழந்து வாடியவர்களையெல்லாம் பள்ளிக்கூடம், அலுவலகங்கள் போன்ற பொது இடங்களில் தங்கச் செய்து, வெள்ளம் வடியும் வரை அவர்களுக்கு இலவச உணவும் அளிக்கப்பட்டு வந்துள்ளது. தனியார் சிலரும் மனமுவந்து உதவி வந்துள்ளனர்.

வீடிழந்த குடும்பத்தினர் அனைவருக்கும், உடனடியாகக் குடும்பத்திற்கு ரூபாய் 80 வீதம் பண உதவி செய்யப்பட்டுள்ளது. முன்பெல்லாம் இவ்வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 40 மட்டுமே கொடுக்கப்பட்டு வந்துள்ளது. ஆனல், இன்றைய அரசு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 80 வீதம் உதவித் தொகை வழங்கியுள்ளது. இவ்வகையில், 1,70,000 குடும்பங்களுக்கு உதவிப் பணம் வழங்கப்பட்டுள்ளன. இக்குடும்பங்களில் 88,000 குடும்பத்தினர் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

பொதுப்பணித் துறையும், ஊராட்சி ஒன்றியங்களும் தங்கள் பணியாளர்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டு குறுகிய காலத்திலேயே மணல் மூட்டைகளை அடுக்கி, வளைவான அணைகளை (Ring—bunds) ஏற்படுத்தி, உடைப்பெடுத்த ஏரிகளைத் தற்காலிகமாக அடைத்துள்ளனர்.

நெடுஞ்சாலைத் துறையினர் 3 முதல் 4 நாட்களிலேயே தற்காலிகச் சீரமைப்புப் பணிகளின் மூலமாக எல்லா முக்கியச் சாலைகளிலும் போக்குவரத்து நடைபெறச் செய்து விட்டனர்.

தென் இரயில்வே துறையினர் ஒரே வாரத்தில் தொடர் வண்டிப் போக்குவரத்து நடைபெறச் செய்தது வியப்பிற்கும், பாராட்டுக்கும் உரிய செயலாகும்.

வெள்ளம் வடிந்தது! வேதனை சற்றுக் குறைந்தது! போக்குவரத்துத் தொடர்ந்தது! வெள்ளச் சேத விவரங்களையும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமளிக்கத் தேவையான தொகையையும், புயலும் வெள்ளமும் ஏற்படுவதற்கு முன்பிருந்த நிலைமைக்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, பகுதிகளைக் கொண்டு வருவதற்குத் தேவையான தொகையையும் கணக்கிடும் பணி தொடர்ந்தது!

### வெள்ள நிவாரணப் பணிகள்

சேதங்களும், தேவையான நிதியும் திட்டவட்டமாகக் கணக்கிடப்பட்டபின் பல்வேறு துறைகளாலும் தீட்டப்பெற்ற செயல் திட்டங்கள் 19—12—1972 அன்று சென்னையிலே நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாட்டிடிலே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் விவாதிக்கப்பட்டன. விரிவான விவாதங்களுக்குப்பிறகு, வெள்ள நிவாரணத் திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. அந்தத் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன :

1. உழைத்துச் சம்பாதித்துக் குடும்பத்தைக்காப்பாற்றக் கூடியவர் வெள்ளத்தினல் இறந்திருந்தால், அத்தகைய குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 பண உதவி அளிக்கப்படும். மற்றவர்கள் வெள்ளத்தினல் இறந்திருந்தால், அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 500 முதல் 1,000 வரை பண உதவி செய்யப்படும்.

2. உடைந்த ஏரிகளையெல்லாம் உடனடியாகச் செப்பனிட்டு, 1973 தென் மேற்குப் பருவ மழையினல் கிடைக்கும் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்குத் தகுந்த வகையில் வைத்திருக்க வேண்டும்.

3. வெள்ளத்திற்கு முன்பிருந்த நல்ல நிலைமையில் எல்லாச் சாலைகளும் செப்பனிடப்படும்.

4. பள்ளிக்கூடம் போன்ற பொதுக்கட்டடங்கள் உடனடியாகச் செப்பனிடப்படும்.

5. வெள்ளத்தினல் பயிர்களை இழந்த உழவர் பெருமக்கள் உடனடியாகப் புதிய பயிர் செய்யவும், மணல் மூடிய நிலங்களிலிருந்து மணலை அகற்றிச் சாகுபடிக்குத் தக்க நிலமாகச் செய்யவும் உடனடிக் கடன் உதவி தேவைப்படுகிறது. முடிந்த வரையில் அவர்களுக்கு வேண்டிய கடன் உதவிகள் கூட்டுறவு வங்கிகளின் மூலம் அளிக்கப்படும். கூட்டுறவுக் கடன் பெற முடியாத நிலையில் உள்ளவர்களுக்குத்

தமிழ்நாடு அரசே நேரடியாகக் கடன் வழங்கிடும். மணலை அகற்றுவதற்கு ஆகும் மொத்தச் செலவு அனைத்தையும் தமிழ்நாடு அரசே மானியமாகக் கொடுத்து உதவும்.

6. வீடிழந்தவர்களில் பெரும்பாலோர் குடிசை வாழ் மக்களேயாவர். அவர்கள் தங்களுடைய வீட்டைக் கட்டிக் கொள்ளக் கூட்டுறவு நிதியைப் பயன் படுத்தக் கூடிய நிலையில் இருக்க மாட்டார்கள். தற்பொழுது வீடிழந்த குடும்பம் ஒவ்வொன்றிற்கும் கொடுக்கப்படும் ரூபாய் 80, அவர்கள் மீண்டும் வீடு கட்டிக் கொள்வதற்குப் போதாது. எனவே, வீடு கட்டிக் கொள்ளக் கடன் உதவி வேண்டும் குடும்பத்தினர்களுக்கு ரூபாய் 250-க்கு மேற்படாமல் தமிழ்நாடு அரசு கடன் கொடுத்து உதவவும் திட்டமிட்டுள்ளது.

7. பயிர்களை இழந்த உழவர் பெருமக்கள் 1973 மார்ச்சுத் திங்கள் இடைப்பகுதியில் அறுவடைக்கு வந்து விடக்கூடிய குறுகிய காலப் பயிர்களைப் புதிதாகச் சாகுபடி செய்வதற்குத் தேவையான புதிய விதைகளை வழங்க வேண்டும். அத்தகைய விதைகளை இலவசமாகவோ அல்லது மானிய விலையிலோ வழங்க வேண்டும்.

8. வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் நிலங்களுக்குரிய நிலவரி, நீர்வரி, உள்ளூர் வரி, உள்ளூர் வரியின் மேல் விதிக்கப்படும் கூடுதல் வரி (Surcharge) ஆகியவைகளைத் தள்ளுபடி செய்ய (நியாயமான கோரிக்கையாக இருந்தால்) உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட திட்டங்களுக்கு ரூபாய் 24·58 கோடி செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மாநாடு முடிந்த உடனேயே, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 4 கோடி ரூபாய் செலவிடத் தமிழ்நாடு அரசு அனுமதியளித்தது. அதன் பின் உழவர்களுக்குத் தக்காவிக் கடன் வழங்க ரூபாய் 50 இலட்சமும், மணல் மூடிய நிலங்களைச் சீர்திருத்த ரூபாய் 50 இலட்சமும் செலவிடத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது.

வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிடும் முதற்கட்டமாக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கலைஞர் அவர்கள் 23—12—1972 அன்று தென்னார்க்காடு மாவட்டத்தைப் பார்வையிட்டார்கள். அவருடன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டனர்.

விழுப்புரம் அருகில் பெண்ணையாற்றங் கரையில் உள்ள பிடாகம் என்ற ஊரில் முதல்வர் அவர்கள் வெள்ள நிவாரணப் பணிகளைத் துவக்கி வைத்து, வெள்ளத்தால் உயிரிழந்தோரின் குடும்பத்திற்கும், வீடிழந்தவர்களுக்கும் பணமும், துணியும் கொடுத்து உரையாற்றினார்.

அதன்பின் குச்சிப்பாளையம் என்ற இடத்தில் ஏற்பட்டிருந்த சேதங்களையும், அரசூர் என்ற இடத்தில் தேசிய நெடுஞ்சாலையில் பாலம் சேதமுற்றிருந்ததையும் முதல்வர் பார்வையிட்டார். பிறகு பண்ணுருட்டிக்கு அருகில் உள்ள திருவாமூரில் மலட்டாற்றினால் பாழாகிய நிலங்களைப் பார்வையிட்டார். உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் 2,000 வீதம் நிதி வழங்கினார். திருவாமூரில் உள்ள நிலங்களில் மணல் மேடிட்டிருப்பதை, புல்டோசர் கொண்டு சீர்திருத்தும் பணியைத் துவக்கி வைத்தார். அதன்பின் மாலை 2 மணி அளவில் கண்டரக் கோட்டை அருகே பெண்ணையாற்றைப் பார்வையிட்டார்.

**சில தகவல்கள்**

* சேலம் நகரில் ஓடும் திருமணிமுத்தாறில் தண்ணீர் நிரம்பி ஓடும் என்றோ வெள்ளம் வருமென்றோ யாரும் நினைத்ததே இல்லை.

* சேலம் மாவட்டத்தில் ஓடும் வசிஷ்ட நதியை, சிலர் பேராறு என்று சொல்கிறார்கள். இந்த ஆற்றில் தலைவாசலில் உள்ள பாலம் நடுவில் உள்ள தூண் வெள்ளத்தின் வேகத்தால் கீழே அமுங்கியுள்ளதால் போக்குவரத்துக்குப் பயனற்றதாக இருந்தாலும் நவீன பாலம் போன்று ஒரு மாதிரியாகக் காட்சியளிக்கிறது!

அன்று மாலை கடலூரில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டு, மக்கள் பிரதிநிதிகளான சட்ட மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரின் கருத்தறிந்தபின், வெள்ள நிவாரணப் பணிகளைப் போர்க்காலப் பணி போல் விரைவாகவும், வெகு திறமையாகவும் செய்யுமாறு, வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்நாட்டின் வெள்ள நிவாரணத்திற்கு இந்திய அரசு உடனடியாக 50 இலட்சம் ரூபாய் நிதி வழங்கச் சம்மதம் தெரிவித்ததுடன், ஆய்வுக்குழுவையும் அனுப்ப ஒப்புக் கொண்டது.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டுப் பரிந்துரை செய்யத் திட்டக்குழு ஆலோசகர் திரு சி. எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் தமிழகம் வந்த ஆய்வுக்குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை டிசம்பர் 29, 30, 31 நாட்களில் பார்வையிட்டுச் சென்றது.

முதல்வர் கலைஞர் அவர்கள் இரண்டாவது கட்டமாகக் கோவை, சேலம், தஞ்சாவூர் மாவட்ட வெள்ள நிவாரணப் பணிகளை டிசம்பர் 30, 31 ஆகிய நாட்களில் பார்வையிட்டார்.

### கோவை மாவட்டத்தில்

முன்னரே மேற்கொண்டிருக்க வேண்டிய இந்தச் சுற்றுப் பயண நிகழ்ச்சி மூதறிஞர் ராஜாஜி மறைவினால் ஒத்திவைக்கப்பட்டு டிசம்பர் 30-ஆம் நாள் துவங்கியது.

முதல்வர் அவர்களுடன் இந்தச் சுற்றுப் பயணத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், பிற்பட்டோர் நலத்துறைஅமைச்சர் க. இராசாராம் அவர்கள், அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள், கோவை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப் பேரவை, சட்டமன்ற மேலவை நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஏனையோரும் கலந்துகொண்டனர். முதலில் பவானிக்கு முதல்வர் அவர்கள் சென்றார்கள்.

பவானி ஆற்றில் பவானியிலிருந்து ஜம்பை வரை கட்டப்படும் வெள்ளத் தடுப்புச் சுவர்ப் பணியை முதல்வர் தொடங்கி வைத்தார்கள். பவானியில் பெருக்கெடுத்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் முதல்வர் கலைஞர் அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் பவானி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.எம். ராஜா பவானிப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பாதிப்புகளை விவ

# அஞ்சலக சேமிப்பு வங்கி மூலம் சேமியுங்கள்!

- எந்த வங்கியும் இதுவரை அளிக்காத அளவுக்கு நடப்புக் கணக்கு — 4 சதவீத வட்டியுடன்
- வேண்டும்போதெல்லாம் பணம் எடுத்துக்கொள்ளலாம்; செலுத்தலாம்; எந்தத் தடையும் இல்லை
- காசோலை வசதிகள் உண்டு
- முற்றிலும் பாதுகாப்பு உடையது
- அஞ்சலகங்கள் அனைத்திலும் இந்த வசதி உண்டு

இப்போது சொல்லுங்கள் சேமிப்பதற்காக
அஞ்சலகச் சேமிப்பு வங்கியை
நான் தேர்ந்தெடுத்தது நியாயம்தானே!



தமிழ்நாடு அரசு
சிறுசேமிப்பு இயக்குநரால்
வெளியிடப் பெற்றது.

ரித்து அரசு செய்ய வேண்டிய உதவிகளை எடுத்துரைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சாமிநாதன் அவர்களும் வெள்ளச் சேதங்களை விளக்கினார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள், வீடிழந்தவர்கள், கால்நடைகளை இழந்தவர்கள் ஆகியோரின் குடும்பங்களுக்கு அரசு அளிக்கும் உதவித் தொகையான ரூ. 2,000, ரூ. 1,000, ரூ. 250 ஆகிய தொகைகளை முதல்வர் வழங்கினார்கள்.

முடி திருத்தும் தொழிலாளர்களுக்குத் தேவையான கருவிகளையும், சலவைத் தொழிலாளர்களுக்குத் தேவையான கருவிகளையும் முதல்வர் வழங்கினர். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் வெள்ளம் வந்தபோது ஆற்றிய வீரப் பணிகளுக்காகவும் பரிசுகள் வழங்கப்பட்டன.

தாம்பரம் கிறித்தவக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் பவானியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தொண்டாற்ற வந்துள்ளனர். தொண்டுள்ளம் படைத்த அந்த இளைஞர் கூட்டத்தில் ஒருவர்—தியாக உள்ளத்தோடு இருந்த இளம்கொழுந்து—ஜேம்ஸ் டேனியல் என்ற மாணவர்—பி.எஸ்.ஸி வகுப்பில் படித்துவரும் அந்த மாணவர்—தன் கடமைகளை நிறைவேற்றிவிட்டு ஆற்றில் குளிக்கச் சென்றவர் ஆற்றுச் சுழலில் அடித்துச் செல்லப்பட்டார். மறுநாள் வரை எவ்வளவு தேடியும் அவரது சடலம் கிடைக்கவில்லை.

இந்தச் சோகச் செய்தியைத் தெரிவித்த முதல்வர் அவர்கள், ஜேம்ஸ் டேனியலின் தந்தை ஒரு இராணுவ வீரர் என்றும் அந்தத் தியாகக் குடும்பத்தின் தொண்டுள்ளத்திற்கு நாம் என்ன உதவி செய்தாலும் ஈடாகாது; எனினும் முதலமைச்சர் நிதியிலிருந்து ரூபாய் ஐயாயிரம் அளிப்பதாகவும் அறிவித்தார்கள்.

பவானியிலிருந்து ஜம்பை வரை வெள்ளத் தடுப்புச் சுவரெழுப்பிப் பவானி முதல் கோபி வரை பவானி ஆற்றின் கரை உயர்த்தப்படும் என்பதை அறிவித்த முதல்வர் அவர்கள், பவானியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிக்குப் பதிலாக ரூபாய் ஐந்து இலட்சம் செலவில் புதிய பள்ளிக்கூடம் கட்டிக்கொள்ளவும், பழைய உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்தைச் செப்பனிட்டுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறிவித்தார்கள்.

### சேலம் மாவட்டத்தில்

சேலம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சேலம் நகரப் பகுதிகளையும், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளையும் முதல்வர் அவர்கள் பார்வையிட்டார்கள். அமைச்சர்கள் சாதிக் பாட்சா, க. இராசாராம் ஆகியோர் உடன் வந்தனர்.

சேலம் நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பணியாற்றுவதை முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார்கள். சேலம் கூட்டத்தில் இதனைப் பாராட்டிய முதல்வர் கலைஞர் அவர்கள், "சேலம் மாவட்டம், கோவை மாவட்டத்தின் பவானி பகுதிகளில், தொழில் கருவிகளை இழந்த ஐயாயிரம் நெசவாளர்களுக்கு அரசுச் சார்பில் ஒவ்வொருவருக்கும் ரூ. 100 அளிக்கப்படும்" என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பு, சற்றும் எதிர்பாரா வகையில் அறிவிக்கப்பட்டதும் கூடியிருந்த மக்கள் குதூகலித்தனர்.

சேலம் மாவட்டத்திலும் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணத் தொகையை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

> **குடிசை மாற்று வாரியம் போன்று ..**
>
> சென்னை நகரில் குடிசை மாற்று வாரியம் அமைத்திருக்கும் குடிசைகளை நல்ல கல் கட்டடங்களாக மாற்றி அமைத்து வருகிறோம்: அதுபோன்று, ஒரு கால வரையறைக்குள் வெள்ளத்தாலும் மழையாலும் பாதிக்கப்படும் இடங்களில்-முதலில் கடற்கரையோரப் பகுதிகளில் இந்தக் குடிசைகளை மாற்றிக் கல் கட்டடங்களாக்கிட ஓர் அமைப்பு ஏற்படுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.
>
> (தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் முதல்வர் அவர்கள் கூறிய தகவல்)

### தஞ்சை மாவட்டத்தில்

தஞ்சை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் கலைஞர் அவர்கள் டிசம்பர்த் திங்கள் 31-ஆம் நாள் பார்வையிட்டார்கள். முதல்வர் அவர்களுடன் பொதுப் பணித் துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், உணவு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாமினி ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ள பெருக வாழ்ந்தான் பகுதிகள், முத்துப்பேட்டை அருகில் உள்ள ராமன் கோட்டகம் புதுக் கோட்டகம், ஒரத்தநாடு தொகுதியிலுள்ள பெரிய கோட்டை ஆகிய பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்கள். மாலையில் தஞ்சையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அரசு விரைந்து அளித்துவரும் உதவிகளைப் பாராட்டினார்கள்.

உணவுஅமைச்சர், வேளாண்மை அமைச்சர், பொதுப் பணித்துறை அமைச்சர், முதல்வர் கலைஞர் ஆகியோர் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரித்தார்கள்.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக இந்திய அரசிடம் நிதி உதவி பெறுவதற்காகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 1—1—1973 அன்று டெல்லிக்குச் சென்றார்கள்.

இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களிடமும், நிதி அமைச்சர் அவர்களிடமும் வெள்ளச் சேதத்தை விரிவாக விளக்கினார்கள். தமிழகம் வந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் மைய அரசு உதவி அளிக்கும் என்று அவர்களும் உறுதி கூறினார்கள். வெள்ள நிவாரணப் பணிகள் போர்க்காலப் பணிகளைப் போல் வெகு வேகமாகவும் வெகு திறமையாகவும், நடந்து வருகின்றன. நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக்கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசுக்கு உங்கள் ஒத்துழைப்பையும் நல்கும் முகத்தான், உங்களால் ஆன நிதி உதவி செய்ய முன்வர வேண்டும் என்று வேண்டுகிறோம்.

"மக்கள் பணியே மகேசன் பணி"

# கண் சிகிச்சை முகாம் நிதி



| | ரூ. | காசு. |
|---|---|---|
| முந்திய இதழின்படி | 40,39,287 | 79 |
| **22—11—1972.** | | |
| கௌரவச் செயலாளர், பெரம்பூர் யுனைடெட் கிளப், சென்னை-11. | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், இராமநாதபுரம். | 225 | 00 |
| ஷை | 2,353 | 00 |
| மாவட்ட வேளாண்மை அதிகாரி (கரும்பு வளர்ச்சி), கடலூர்-1. | 36 | 00 |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம். | 1,080 | 00 |
| **24—11—1972.** | | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், சேலம். | 150 | 00 |
| முதல்வர், அரசினர் மகளிர் கல்லூரி கும்பகோணம். | 330 | 00 |
| **25—11—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 477 | 00 |
| திரு ஆர். எம். இராமநாதன், 107, வயி. வீர. தெரு, காரைக்குடி-1. | 11 | 00 |
| **27—11—1972.** | | |
| துணைச் செயலாளர், அசோசியேட் சிமெண்ட் கம்பெனி லிமிடெட், பம்பாய்-20. | 5,000 | 00 |
| மேலாளர், சென்னை அரசுப் பேருந்துத் துறை ஊழியர் கூட்டுறவு நாணயச் சங்கம் லிமிடெட், சென்னை-2. | 100 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர் | 278 | 00 |
| செயலாளர், வத்திராயிருப்பு கூட்டுறவு பால் வழங்கு சங்கம் லிமிடெட். | 25 | 00 |

| | ரூ. | காசு. |
|---|---|---|
| **28—11—1972.** | | |
| உதவி இயக்குநர் மீன்துறை, கடலூர்-3. | 1,000 | 00 |
| ஆணையர், பால் உற்பத்தித் துறை, பால் பண்ணை அபிவிருத்தித் துறை, மாதவரம், சென்னை-51. | 50 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 100 | 00 |
| **30—11—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், திருநெல்வேலி. | 71,735 | 30 |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர். | 650 | 00 |
| ஷை | 10 | 00 |
| செயலாளர், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், K. 708 உதகமண்டலம். | 100 | 00 |
| நிருவாக இயக்குநர், மதுரை மாவட்டக் கூட்டுறவு நூற்பு ஆலை லிமிடெட், மேலூர். | 1,500 | 00 |
| கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப் பணி) திண்டுக்கல், மதுரை மாவட்டம். | 15 | 00 |
| **1—12—1972.** | | |
| செயலாளர், பள்ளிகொண்டா கூட்டுறவு அர்பன் வங்கி லிமிடெட் பள்ளிகொண்டா. | 50 | 00 |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், அறந்தாங்கி. | 5 | 00 |
| **4—12—1972.** | | |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை-1. | 640 | 00 |
| கூட்டுறவுத் துணைப் பதிவாளர், செங்கற்பட்டு. | 151 | 00 |
| **6—12—1972.** | | |
| நிருவாக இயக்குநர், தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை, லிமிடெட், அலங்காநல்லூர், மதுரை மாவட்டம். | 1,001 | 00 |

## வழங்கியோர் பட்டியல்

| | ரூ. | காசு. |
|---|---|---|
| **7—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், இராமநாதபுரம். | 2,480 | 50 |
| முதல்வர், அரசினர் கலைக் கல்லூரி, கரூர். | 54 | 00 |
| **8—12—1972.** | | |
| செயலாளர், கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு பால் வழங்கு சங்கம், எண் 2946, நாகர்கோயில். | 101 | 00 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தென் ஆர்க்காடு, | 14,875 | 25 |
| **12—12—1972.** | | |
| உதவிப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம். | 400 | 00 |
| ஆணையர், அறநிலையத் துறை, சென்னை. | 1,000 | 00 |
| **13—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி. | 7,718 | 00 |
| **14—12—1972.** | | |
| இயக்குநர், கருவூலத்துறை, சென்னை | 3,824 | 10 |
| மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர். | 1,622 | 00 |
| நிருவாகப் பொறியாளர் (பொ.ப.து.), தூத்துக்குடிக் கோட்டம். | 450 | 00 |
| **15—12—1972.** | | |
| துணைப் பதிவாளர், கூட்டுறவுச் சங்கம், தூத்துக்குடி. | 100 | 00 |
| ௸ | 475 | 00 |
| **18—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், வட ஆர்க்காடு. | 93,793 | 00 |
| திரு ஜே. சாமுவேல்அதிக், மாவட்டத் தலைமைக் கல்வி அலுவலர், இராமநாதபுரம். | 223 | 00 |
| **19—12—1972.** | | |
| மாவட்ட வேளாண்மை அலுவலர், (கரும்பு வளர்ச்சி), தென் ஆர்க்காடு. | 10 | 00 |
| நிருவாக இயக்குநர், திருப்பத்தூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், வட ஆர்க்காடு. | 501 | 00 |
| **20—12—1972.** | | |
| செயலாளர், தமிழ்நாடு தலைமைக் கணக்காளர் அலுவலகக் கூட்டுறவு நாணயச் சங்கம் லிமிடெட். | 150 | 00 |
| திரு கே. மாசிலாமணி, துணைத் தலைவர், கலைஞர் கருணாநிதி மன்றம், 120-வது வட்டம், சென்னை-32. | 5 | 00 |
| 1972 நவம்பர் வரை வட்டியின் வாயிலாக. | 38,127 | 85 |
| **22—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சாவூர். | 1,125 | 00 |
| **27—12—1972.** | | |
| மாவட்ட ஆட்சியாளர், திருநெல்வேலி. | 10,677 | 00 |
| நெய்வேலித் தொழிலாளர் கூட்டுறவு நாணயச் சங்கம், நெய்வேலி. | 101 | 00 |
| நெய்வேலியில் 23—12—1972 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் வாயிலாக. | 86 | 00 |
| மாவட்ட ஆட்சியாளர், சென்னை. | 36,847 | 00 |
| மாவட்டப் பதிவாளர் தஞ்சை | 149 | 15 |
| ௸ | 140 | 50 |
| நிருவாகப் பொறியாளர், தூத்துக்குடி | 675 | 00 |
| பத்திரப் பதிவுத்துறைத் தலைவர், சென்னை-1. | 770 | 00 |
| நிருவாக இயக்குநர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட், தென் ஆர்க்காடு மாவட்டம். | 5,000 | 00 |
| முதல்வர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சென்னை-15. | 144 | 00 |
| மொத்தம் | 48,48,084 | 91 |


# தமிழரசு

**சந்தா**

ஓர் ஆண்டு ரூ. 10.00

அரையாண்டு ரூ. 5.00

தனி இதழ் 40 காசு.

**விவரங்களுக்கு :**

நிருவாகி,
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2






# கதர் கிராமத் தொழில்கள்

கதர் கிராமத்
தொழில்களை
ஆதரிப்பது
புனிதத் தொண்டு

கதர் கிராமத்
தொழில்களை ஆதரிப்பது
கிராம மக்களுக்குச்
செய்யும் பேருதவி







கதர்: கதர்ப் பட்டு
சோப்பு, தேன்
தோல் பொருள்கள்
பனைவெல்லம்.
பனைப் பொருள்கள்
வார்ப்படங்கள்
மற்றும் பல்வேறு கைநுட்பப்
பொருள்கள் கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில் கிடைக்கும்







## கதர் கிராமத் தொழில் துறை

2. சர் தேசிகாச்சாரி சாலை
சென்னை-4

சுந்தர்...

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

### கோழி வளர்ப்பு

நான் எஸ். எஸ். எல். சி. தேறிய மாணவன். மிகவும் ஏழை. வேலை கிடைக்காததால் வீட்டில் இருக்கின்றேன். கோழிப் பண்ணை அமைக்க விரும்புகின்றேன். கோழிப்பண்ணை அமைக்கத் தமிழக அரசு மானியம் வழங்குகிறதா? எந்தத் துறையின் மூலம் வழங்கு கிறது? மானியம் பெற யாருக்கு மனுச் செய்ய வேண்டும்? அரசு மூலம் மானியம் பெற்றுக் கோழிப் பண்ணை அமைத்து வாழ்க்கையில் வளம் பெற விரும்பும் இந்த ஏழைக்கு மானியம் பெறும் வழிகள் அனைத்தையும் தெளிவாக வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

—ஆர். தேவராஜ்

அரும்பாக்கம் அஞ்சல்,
ஆற்காடு வட்டம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

தற்பொழுது கோழிப் பண்ணை அமைக்கத் தனிப்பட்டவர்களுக்கு மானியம் வழங்கப் படவில்லை. 'ஸ்டேட் பாங்கு', 'பாங்க் ஆப் பரோடா', 'இந்தியன் பாங்கு', 'இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு', 'கனரா பாங்கு', 'பேங் ஆப் இந்தியா' போன்ற வங்கிகள் கோழிப்பண்ணை அமைப்பதற்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. எனவே, உங்கள் பகுதியில் உள்ள வங்கியில் இதுபற்றி விசாரிக்கவும். தனிப்பட்ட ஒருவராக இம்முயற்சியில் ஈடுபடுவதைக் காட்டிலும், உங்களைப் போன்று, படித்து விட்டு வேலைவாய்ப்புக் கிடைக்காமல் இருக்கும் பல நண்பர்களைச் சேர்த்துக் கொண்டு கூட்டுறவு முறையில் கோழிப் பண்ணை அமைப்பது சிறந்தது. 'கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்' அமைக்க உங்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலர் அவர்களையும், உங்கள் அருகாமையில் உள்ள உதவிக் கால்நடை மருத்துவரையும் கலந்தாலோசியுங்கள்.

### தொழில்

பணகுடியைச் சார்ந்துள்ள மலையில், இஞ்சிப்புல் (Ginger grass) என்னும் ஒருவகைப் புல் கிடைக்கிறது. இதிலிருந்து எடுக்கப்படும் சாறு (எண்ணெய்) கொச்சித் துறைமுகம் வழியாகப் பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நாட்டிற்கு அந்நியச் செலாவணி ஈட்டித் தருகிறது. பணகுடி உழவர் விவாதக் குழுவினர் சார்பாக, எண்ணெய் தயாரிக்கும் தொழிற் கூடம் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறோம். இதனால் விவசாய வேலையின்றி இருக்கும் பல நூறுபேர் வேலை வாய்ப்புப் பெறுவர் (மகளிரும் கூட). அத்தகைய புல்லை அறுத்து எடுத்து உபயோகிக்க அரசினர் அனுமதி தேவையா? அப்படியானால் எந்தத் துறை அதிகாரி மூலமாகப் பெறுவது? விளக்கம் தரும்படியாக விண்ணப்பிக்கிறோம்?

—முகமது அலி,
கன்வீனர்,
உழவர் விவாதக் குழு,
பணகுடி, நெல்லை மாவட்டம்.

இஞ்சிப் புல்லிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் நீலகிரித் தைலம் (Eucalyptus Oil) போன்ற முக்கிய எண்ணெய் (Essential Oils) வகையைச் சார்ந்ததாகும். பணகுடியைச் சார்ந்துள்ள மலையில் இருக்கும் இஞ்சிப்புல்லை அறுத்து எடுக்க அரசினர் அனுமதி தேவை. பணகுடி மலைப்பகுதி அநேகமாக வனத்துறைக்குச் (Forest Department) சொந்தமானதாக இருக்கும் என்று எண்ணுகிறோம். எனவே, இதுபற்றி உங்கள் பகுதியில் உள்ள வனச் சரக அலுவலர் அல்லது மாவட்ட வனத்துறை அலுவலரிடம் கலந்தாலோசிப்பது நல்லது. தொழிற்சாலை தொடங்க, தொழில் வணிகத் துறை (Industries and Commerce Department) அனுமதியும் பெற வேண்டும். எனவே, உங்கள் பகுதியில் உள்ள ''உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை'' (Assistant Director, Industries and commerce Department) அவர்களைக் கலந்தாலோசிப்பது சிறந்தது.




தமிழ்நாடு அரசு, 1972–73-ம் ஆண்டில் 72,000 ஏக்கர் புறம்போக்கு நிலங்களையும், 54,000 ஏக்கர் வனத்துறை நிலங்களையும், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நில ஒப்படை செய்து கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

—முதல்வர் கலைஞர்

*(தமிழ்நாடு சட்ட மேலவையில் 14—12—1972 அன்று குறிப்பிட்டது.)*

### தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கடன் உதவி

ஒரு ஏக்கர் நிலம் ஒரே இடத்தில் உள்ளவர்களுக்கு (தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டிலும்) ஆழ் கிணறு வெட்டிக் கொள்ள கடன் பெற விரும்பினால், விண்ணப்பிக்கலாம் என்ற அரிசன நல இயக்குநர் அவர்களது, அறிவிப்பின் படி தஞ்சை அரிசன நல அலுவலருக்கு விண்ணப்பித்தேன். ரேவின்யூ இன்ஸ்பெக்டர் அவர்கள் வந்து நிலத்தைப் பார்வையிட்டார். எனது நிலம் கூட்டுப் பட்டாவாக (Joint Batta) உள்ளது. ஆகையால், எனக்குக் கடன் வழங்கத் தடை ஏற்படுமா? பட்டா பிரித்துக் கொள்ள வழி முறை என்ன?

—க. சண்முகம்,
வடகுடி (அஞ்சல்,)
தஞ்சை மாவட்டம்.

தங்கள் நிலம் கூட்டுப் பட்டாவாக இருப்பதால், கூட்டுப் பட்டாதாரர் தாங்கள் கடன் வாங்குவதில் தமக்குத் தடை இல்லை என்று வாக்கு மூலம் அல்லது எழுதிக் கொடுத்தால், கடன் பெற இயலும்.

இதுபற்றி உங்கள் வருவாய் ஆய்வாளரைக் ( Revenue Inspector ) கலந்தாலோசியுங்கள்.

பட்டா பிரித்துக் கொள்ள 'ஜமாபந்தி' நடக்கும் போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அல்லது கோட்டாட்சித் தலைவருக்கு மனுக் கொடுக்கலாம். அல்லது தங்கள் ஊருக்கு மனு நீதித் திட்டத்தின்கீழ் அலுவலர்கள் குறை கேட்க வரும்போதும் மனுச் செய்து கொள்ளலாம்.

### அகதிகள் மறு வாழ்வு

நாங்கள் 1964-ஆம் ஆண்டின் சிரிமாவோ — சாஸ்திரி (இலங்கை—இந்தியா) ஒப்பந்தப்படி, 1971-ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந்தியாவிற்கு வந்தோம். நான் கேட்ட இடத்தில் நிலம் கிடைக்காததால் வியாபாரம் செய்ய உதவிப் பணம் கேட்டு விண்ணப்பித்தேன். வீடு கட்டிக் கொள்ள இடமும், பணமும் கேட்டு விண்ணப்பித்தேன். இதுபற்றி, தாசில்தார், கோட்டாட்சித் தலைவர் (R. D. O,), கலெக்டர் ஆகியோருக்கும் விண்ணப்பித்தேன். நாங்கள் இந்தியாவிற்கு வந்து சுமார் 16 மாதங்கள் ஆகிறது. இதுவரையிலும், வீடு இல்லாமல் வேறு ஒருவருடைய மாட்டுக் கொட்டகையில் குடி இருக்கின்றோம். நாங்கள் மொத்தம் 9 பேர். கொண்டு வந்த பணம் எல்லாவற்றையும் செலவழித்து விட்டும், நகைகளை ஈடுவைத்து விட்டும், பெரும் கஷ்டப்படுகிறோம். எங்களுக்கு வாழ்வளிக்க அரசாங்கம் முன் வருமா? இதற்கு மேல் நான் யாரை நாடுவது? யாரிடம் எனது குறைகளைத் தெரிவிப்பது தயவு செய்து உங்களால் எனக்கு விமோசனம் கிடைக்க உதவி புரியும் படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். உங்கள் விவரத்தை ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன். (கடிதம் முழுவதும் வெளியிடப் படவில்லை)

—வி.ஏ. செல்லையா,
சிலோன் அகதி,
மருங்கூர் கிராமம்,
விருத்தாசலம் (வட்டம்),
தென்ஆர்க்காடு மாவட்டம்.

தங்கள் நிலை கேட்டு மிகவும் வருந்துகின்றோம். தாங்கள் உடன் உதவிபெற முடியாமைக்கு என்ன காரணம் என்பதை நாங்கள் தெரிவிக்கும் நிலையில் இல்லை. தாங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள படி 'அகதிகளுக்குத் தமிழ்நாடு அரசு என்னென்ன உதவி செய்கிறது? அவைகளைப் பெற என்ன செய்ய வேண்டும்?'' என்பன போன்ற விவரங்களைத் தான் நாங்கள் வெளியிட இயலுமே தவிர, நாங்களே நேரிடையாக உங்களுக்கு உதவ இயலாது. எனவே, உங்கள் குறைகளைக் குறிப்பிட்டு எழுதி எடுத்துக் கொண்டு போய், மாதத்தின் முதல் திங்கட்கிழமை அன்று (ஒவ்வொரு மாதத்தின் முதல் திங்கட்கிழமையன்று மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுமக்களிடமிருந்து விண்ணப்பங்களை நேரில் பெற்றுக் கொள்ளும் வழக்கம் உள்ளது) மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் கொடுத்துக் கஷ்டத்தை விளக்கிக் கூறுங்கள். அவர் அதன்பின் உடன் ஆவன செய்வார். அது போலவே, மாதத்தின் முதல் திங்கட் கிழமையன்று கோட்டாட்சித் தலைவரையும் நீங்கள் சந்தித்து மனுக் கொடுக்கவும். அவைகளின் நகலைப் பின்கண்ட முகவரிக்கு அனுப்பி வைப்பதும் நல்லது.

இயக்குநர்,
அகதிகள் மறுவாழ்வுத் துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

தாங்கள் மனந்தளராமல் மேற்கண்ட முறையில் நேரில் சந்தித்து, கஷ்டத்தையும் குறைகளையும் கூறி மனுக் கொடுத்தால் விரைவில் வெற்றி கிடைக்கும் என்பது உறுதி. —ஆர்.எம்.

---

## நெல்லுக்கு ஒரு புது நோய்

முதன் முதலில் குமரி மாவட்டத்தில் சிறிய அளவில் ''குள்ளப்புல் வைரஸ்'' (Grassy Stunt) என்னும் நோய் நெற் பயிரைத் தாக்கியது. இந் நோய் தாக்கிய பயிர்களில் தூர்கள் அதிக அளவில் கிளைக்கும்; இலைப் பரப்பு குறுகி மஞ்சள் அல்லது பசுமை கலந்த மஞ்சள் நிறமாக மாறிவிடும். இலைகளில் கரும் புள்ளிகள் நிறையக் காணப்படும். நோய் வாய்ப்பட்ட பயிரில் கதிர்கள் மிகச் சிறியதாகி, மணிகள் பழுப்பு நிறமடைந்து பதராகி விடும்.

''மாநிறப் புகையான்'' (Brown Fulgorids) என்னும் பூச்சிகளால் இந் நோய் பரவுகிறது. எனவே, இந் நோயைக் கட்டுப்படுத்த முதலில் இந்தத் தத்துப் பூச்சிகளை ஒழிக்க வேண்டும்.

### தடுப்பு முறைகள்

(1) தாக்கிய பயிரிலிருந்து மற்றப் பயிர்களுக்கும் நோய் பரவுமாதலால் தாக்குண்ட பயிர்களைத் தீயிட்டு எரித்துவிட வேண்டும்.

(2) நோய் பரவிய இடங்களிலிருந்து எக்காரணங்கள் கொண்டும் நாற்றுகளை மற்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது.

### பயிர் பாதுகாப்பு முறைகள்

''மாநிறப் புகையான்'' பூச்சிகள் பயிரின் அடிப் பாகத்தில் இருந்துகொண்டு சேதம் விளைவிக்கின்றன. எனவே, எந்தத் தடுப்பு நடவடிக்கைஎடுத்தாலும், அது பயிரின் அடிப் பாகத்தை அடைந்தால்தான் நல்ல பலன் கிட்டும். மருந்து தெளிக்கு முன் வயலிலிருந்து தண்ணீரை நன்றாக வடித்துவிட்டால் மருந்தின் வீரியம் அதிக நாட்களுக்கு இருந்து நல்ல பலன் அளிக்கும். கீழ்க்கண்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். 10 சதம் கார்பரில் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

அல்லது

0.1 சத கார்பரில் (400 கிராம் கார்பரில் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும்.

அல்லது

10 சத 'போரேட்' குருணைகளை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இடவும்.

அல்லது

5 சத 'டையசினன்' குருணைகளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் இடவும். குருணைகளை நடவு செய்த 15-ஆம் நாள் ஒரு முறையும், 40-ஆம் நாள் ஒரு முறையும் ஆக இரு முறை இட்டால் நல்ல பலன் தரும்.

(தகவல்: கூடுதல் வேளாண்மை இயக்குநர் [ஆராய்ச்சி], திருச்சிராப்பள்ளி—18)

# தக்கைக் கல் வீடுகள் கட்ட தக்க கல்



"தக்கைக் கல் பற்றி நீண்ட நெடுங்காலமாகப் பேசப்பட்டு வந்தாலும் அதனைத் தயாரிக்கும் தொழிற்சாலை முறையாக வெற்றி பெற்று, வேறு பல பகுதிகளுக்கும் அந்தக் கல் அறிமுகப்படுத்தப்பட்டு, வீட்டுத் தேவையை எளிதாக முடித்து வைக்கும் திட்டத்தை இப்போது பெற்றுள்ளோம். இந்தத் தொழிற்சாலையிலே தயாராகும் கற்கள் வெளியே சென்று நல்ல வீடுகளாக-கட்டடங்களாக மாற வேண்டும்.'' என்ற தம் ஆவலை முதல்வர் கலைஞர் அவர்கள் எண்ணூரில் அமைந்துள்ள தக்கைக் கல் தொழிற் சாலையைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் வெளியிட்டார்.

டிசம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் நடந்த இந்தத் தொடக்க விழா, போலந்து நாட்டுத் தூதுவர், அதிகாரிகள் முன்னிலையில் சீரும் சிறப்புமாக நடந்தது. இந்தியாவிலேயே முதலாவதாகத் திகழும் இந்தத் தக்கைக் கல் (செல்கிரீட்) தொழிற்சாலை ரூ. 3 கோடியே 65 இலட்சம் முதலீட்டில் தமிழக வீட்டு வசதி வாரியத்தினரால் நிறுவப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டில் துவக்கப் பெற்ற இது 20 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது.

கட்டடக் கலையில் புதுமையைப் புகுத்தும் நோக்கோடு மேலை நாட்டினர் கண்டுபிடித்த சாதனம் தான் 'செல்கிரீட்' என்னும் தக்கைக் கல். சிக்கனத்துக்குச் சிறந்த கல்லான இது, இன்று மேலை நாடுகளில் வானளாவிய கட்டடங்களாகவும், எழில் மிகுந்த இல்லங்களாகவும் காட்சியளிக்கின்றது.

இந்தப் புதிய கட்டடக் கற்களைக் கொண்டு போலந்து, ரஷ்யா, ஜெர்மனி, ஸ்வீடன், நார்வே போன்ற கிழக்கு-வடக்கு ஐரோப்பிய நாடுகளிலும், மெக்சிகோ, பிரேசில், எகிப்து போன்ற ஆப்பிரிக்க-அமெரிக்க நாடுகளிலும் இன்று கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் அருமை பெருமை உணர்ந்த அந்நாட்டவர், இந்தக் கல்லால் கட்டப்படும் கட்டடங்களையே பெரிதும் விரும்புகின்றனராம்!

மணல், சுண்ணும்பு, சிமெண்டு அலுமினியத்தூள்ஆகிய பொருட்களைக் கொண்டு தக்கைக் கற்கள் தயாரிக்கப்படுகின்றன. பதின்மூன்று செங்கற்களுக்கு இணையானது ஒரு தக்கைக் கல். இது நீரிலே மிதக்கக் கூடியது என்ருலும் இறுதிவரை உறுதி வாய்ந்த கல்லாகும்.

இன்று தமிழகத்தில் உருவாகும் பெருமைபெற்ற இந்தத் தொழிற்சாலை, நாளை இந்தியாவில் பெரும் புரட்சியை உண்டாக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

செங்கற்களைவிட இந்தச் செல்கிரீட் (தக்கைக் கல்) பலவிதங்களில் சிறந்தது. இந்தக் கல், செங்கல்லின் எடையில் மூன்றில் ஒரு பங்கேயானுலும் மிகவும் உறுதி வாய்ந்தது. இதனுல் கட்டப்படும் கட்டடங்கள் வெப்பத்தையும் குளிரையும் தாங்கி உட்புறம் ஒரே சீரான நிலையில் வைத்திருக்கும். ஒலியைத் தாங்கும் சக்தியும் இக்கல்லுக்கு உண்டு. வெடிப்பும் வராது.

தக்கைக் கற்கள் இலேசாக இருப்பதால் அதிக ஆழத்துக்கு அடித்தளம் போடத் தேவையில்லை. ஒரு வீடு கட்டத் தேவைப்படும் தக்கைக் கற்களின் அளவு, செங்கற்களைவிடக் குறைவாக இருப்பதால் செலவும் ஓரளவு குறையும். ஆகவே, கொத்தனுரின் வேலைத் திறனை இரட்டிப்பாக்கிச் சிற்ருளின் வேலைத் திறனை மும்மடங்காக்கிக் கட்டட அடிப்படையின் அகலத்தைக் குறைக்க உதவுகிறது. இந்தக் கல்லில் ஆணி அடிக்கலாம்; திருகித் துளையிடலாம்; தேவையான அளவுக்கு அறுத்தும் கொள்ளலாம். இப்படி எல்லா வகைக்கும் உகந்தது இந்த உறுதி வாய்ந்த தக்கைக் கல்!

போலந்து நாட்டின் அறிவு நுட்பமும், தமிழ் நாட்டுப் பொறியாளர்களின் திறனும் சேர்ந்து உருவாக்கப்பட்ட இந்தத்

தொழிற்சாலையில், நவீன தானியங்கி இயந்திரங்கள் பலவும் பொருத்தப்பட்டுள்ளன. 21.6 மீட்டர் உயரமுள்ள 'சிலோ' என்னும் கொள்கலன், மூலப் பொருட்களைச் சேர்த்து வைக்க உதவி செய்கிறது. மற்றும் மூலப் பொருட்களை அரைத்திட, மூலப் பொருட்களைத் தண்ணீர் விட்டுக் கலக்கிட, அலுமினியத் தூளைக் கலந்திட, கற்களைத் தேவைக் கேற்ப அறுத்திட இங்கு வகை வகையான இயந்திரங்கள் இயங்குகின்றன ; இவை, கற்களைப் பெருமளவில் உற்பத்தி செய்யும் பணியை எளிதாக முடிக்கின்றன.



தக்கைக்கல் தொழிற்சாலையை முதல்வர் கலைஞர் துவக்கிவைக்கிறார்

பச்சைச் செங்கற்களை நெருப்பிலிட்டுச் 'சூளை' போடுகிறோமல்லவா ? ஆனால், இந்த வெண்மையான தக்கைக் கற்கள் நீராவியின் மூலம் சுடப்பட்டுக் கெட்டியாக்கப்படுகின்றன. இதற்காக எண்ணெய் டாங்குகள் போலப் பெரிய பெரிய உருளை வடிவான அமைப்புகள் இங்கே இருக்கின்றன. உருளையினுள் இந்தக் கற்கள் அடுக்கி வைக்கப்பட்டு எந்த நெருப்பும், புகையுமில்லாமல் கெட்டியாக்கப்படுவதை இங்கே காணலாம்.

தற்போது இத்தொழிற்சாலை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இல்லங்கள் கட்டுவதற்குத் தக்க, தக்கைக் கற்களை வழங்கி வருகிறது. மேலும் அரசுக் கட்டடங்கள், மாநகராட்சிக் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தக் கற்கள் பயன்படுத்தப்படும்.

'' இந்தக் கற்கள் செங்கற்களைவிட மலிவானவையா ?''

இந்த வினா பலருக்கு எழக்கூடும். அதற்கு விடை :

''தக்கைக் கல்லின் விலை செங்கல் விலைக்குச் சமமாக இருக்கும் என்று சொன்னார்கள். விலை மலிவாக வேண்டுமானால் தக்கைக் கல் தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மணலோடு நீற்றுச் சாம்பலைக் கலந்து மலிவான விலையில் தக்கைக் கல் தயாரிக்கலாம் என்று கண்டுபிடிக்கப் பட்டுளது'' என்ற முதல்வர் கலைஞர் அவர்கள், அதற்கான வழியையும் விளக்குகிறார் :

''எண்ணூர் அனல் மின் நிலையத்தின் கழிவுப் பொருளாகக் கடலில் தள்ளப்படும் நீற்றுச் சாம்பலை இந்தத் தொழிற்சாலைக்குக் கொண்டு வருவதன் மூலம் மலிவு விலையில் தக்கைக் கல் தயாரிக்க முடியும்.''

'' நாள் ஒன்றுக்கு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 800 டன் நீற்றுச் சாம்பல் கிடைக்கிறது. தக்கைக் கல் தொழிற்சாலை தற்போது நாள் ஒன்றுக்கு 300 டன் நீற்றுச் சாம்பலைத்தான் பயன்





அசோக் நகரில் தக்கைக் கல்லால் கட்டப்பட்டுள்ள கட்டடம்.

படுத்துகிறது. மீதியுள்ள 500 டன் நீற்றுச் சாம்பலையும் பயன் படுத்தி, அதன் சக்தியை அதிகப் படுத்தும் அளவுக்கு எதிர்காலத் தில் இந்தத் தொழிற்சாலை விரி வடையும். அந்த வாய்ப்பைப் பெற மேலும் 81 இலட்சம் ரூபாய் செலவாகும். மொத்தத் தில் நாலரைக் கோடி ரூபாய் செலவில்தான் இத்தொழிற் சாலை முழுமை அடையும். மத்திய அரசு உதவியுடன் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது என்பதை நாம் மறந்து விடவில்லை'' என்ற முதல்வர், இத் தொழில் வளரு வதற்கான ஒரு வேண்டுகோளை யும் விடுத்தார்!

''தமிழக வீட்டு வசதி வாரியத் திற்கு மத்திய அரசு வழங்கும் கடன் தொகையை, 15 ஆண்டுக் காலத் தவணை முறையில் 5 சத வீத வட்டியுடன் மத்திய அரசுக் குத் திருப்பிக் கொடுக்க வேண்டி யுள்ளது. தவணை முறையை 30 ஆண்டுக் காலமாகவும், வட்டி சதவீதத்தை $\frac{1}{2}$ சதவீதமாகவும் குறைத்துக் கடன் வழங்கவேண் டும். இதன் மூலம், இது போன்ற தொழிற்சாலைகளை மேலும் பல பகுதிகளில் அமைக்க முடியும். இந்தக் கோரிக்கையை மத்திய அரசினர் செவி மடுத்து நிறை வேற்றுவார்கள் என்று நம்பு கிறேன்.''

இந்தத் தொழிற்சாலை ஆண்டுக்கு ஒன்றரைக் கோடித் தக்கைக் கற்களைத் தயாரிக்கும் என்றும், அதனைக் கொண்டு சென்னை செங்கற்பட்டு மாவட் டங்களில் மட்டும் 11 ஆயிரம்



கலைஞர் கருணாநிதி நகரில் தக்கைக் கல்லால் கட்டப்பட்டுள்ள வளைவு.

வீடுகள் கட்டப்படும் என்றும் விழாவுக்குத் தலைமை வகித்த வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் கூறியதைக் குறிப்பிட வேண்டும்.

தற்போது ஏறக்குறைய 300 தொழிலாளர்கள் இத் தொழிற் சாலையில் வேலை வாய்ப்புப்பெற் றுள்ளனர். மேலும், பலருக்கு வேலை வாய்ப்பினை நல்கிடும் அளவுக்கு இத் தொழிலகம் வளர்ந்து, பிற மாநிலத்தவர்க்கு வழி காட்டியாகத் திகழும் என்பதில் எள்ளளவும் ஐய மில்லை.

பசுமைப் புரட்சியின் மூலம் உணவுப் பிரச்சினையை வெற்றி கரமாகத் தீர்த்து வரும் தமிழக அரசு வீட்டு வசதிகளைப் பெருக் கத் தீவிரமாக முனைந்துள்ளது. ஒவ்வொருவரும் சொந்த வீடு பெறுவதற்கு இத்தொழிற்சாலை தக்க உதவி செய்யும் என்பது திண்ணம்.

வளரும் தமிழகத்திற்கு வளம் கூட்ட வந்திருக்கும் எண்ணூர் தக்கைக் கல் தொழிற்சாலையை எண்ணமெல்லாம் இனிக்க நல் வரவு கூறி வரவேற்போம்!

நல்லாதரவு தருவோம்!

—கிரி

## வெண்பாப் போட்டி-51

ஈற்றடி: கண்ணின் மணியனையான் காண்

முடிவு நாள்: 1—2—1973

பரிசு: ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு:

அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

# வீடில்லார் வீடு பெற...



பண்படுத்தப்பட்ட வீட்டு மனைகளைப் பொது மக்களுக்கு வழங்குவதிலும், வீடுகள் கட்டித் தருவதிலும் தலையாய நிறுவனமாகிய வீட்டு வசதி வாரியம், பணிபுரியத் தொடங்கி, 1972 ஏப்ரலுடன், பத்து ஆண்டுகள் முடிவடைகின்றன. எனவே, இந்த 10 ஆண்டுக் காலமாக வீட்டு வசதி வாரியம் செய்துள்ள பணிகள்-சாதனைகள் இங்கு விவரிக்கப்படுகின்றன. (10 ஆண்டுகளுக்கு முன், 15 ஆண்டுகள் C. I. T. நகர அபிவிருத்திக் கழகம் இப்பணியைச் செய்து வந்தது.)

வாரியம், சென்னை நகரிலும், திருச்சி, கோவை, மதுரை, சேலம், வேலூர் இங்கெல்லாம் கிளைகள் அமைத்து இயங்கி வருகின்றது. இதுவரை சென்னையிலும், மாவட்டங்களிலும் புறநகர்களை அமைப்பதற்காக 3 ஆயிரம் ஏக்கருக்கு மேல் நிலம் ஆர்ஜிதம் செய்துள்ளது. 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீட்டு மனைகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. இந்த ஆண்டு முடிய ரூ. 1,575 இலட்சம் நிலம் வாங்குவதற்காகவும், வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்பட்டிருக்கிறது.

இவ்வாண்டு சென்னையில் அண்ணா நகர் மேற்கு விரிவாக்கப் பகுதியில் 130 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 506 மனைகள் வழங்கப்பட்டன. 120 ஏக்கர் பரப்புள்ள திருச்சி புறநகர்ப் பகுதியில், நம் மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளன்று, 1972-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3-ஆம் தேதி ''டாக்டர் கலைஞர் கருணாநிதி நகர்'' துவக்கப்பட்டு, இதுகாறும் சுமார் 700 மனைகள் வழங்கப்பட்டுள்ளன. சேலத்தில் 158 ஏக்கர் ஆர்ஜிதம் செய்யப்பட இருக்கிறது. அவை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வீட்டு மனைகளாக அளிக்கப்படவிருக்கின்றன. சென்னைக்கு அருகேயுள்ள திருவான்மியூரில் 90 ஏக்கருக்கான நிலம் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, வீட்டு மனைகளாக மாற்றப்படும். ஆர்க்காடு சாலையையும், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையையும் இணைக்கும் வகையில் நெடுஞ்சாலையொன்றும், அதனையொட்டி புறநகரமும் அமைப்பதற்கு நில ஆர்ஜித வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அரும்பாக்கத்தைச் சுற்றி 100 ஏக்கர் நிலத்தைக் கையகம் செய்து வீட்டு மனைகளாகச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டும் அடிப்படையில் ரூ. 360.32 இலட்சம் மதிப்புள்ள 4,750 வீடுகள், இதுவரை கட்டி முடிக்கப்பட்டன. இந்த ஆண்டும் ரூ. 100 இலட்சம் மதிப்பில் 800 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு ரூ. 587.36 இலட்சம் மதிப்புள்ள 2,825 வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. மேலும் இவ்வாண்டு 400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நலனைக் கருதி, ரூ. 570.25 இலட்சம் செலவில் 6,725 வீடுகள் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டுள்ளன. மேலும், 802 குடியிருப்புகள் இவ்வாண்டு கட்டப்பட்டு வருகின்றன. நீதி, மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கான 400 வீடுகளில், 300 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள 100 வீடுகளும் இந்த ஆண்டுக்குள் முடிவுறும். இந்த ஆண்டும், அடுத்த ஆண்டும் மாவட்ட நீதிபதிகள், சென்னை நகர நீதிபதிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், வணிகவரி துணை ஆணையாளர் ஆகியவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ரூ. 38.39 இலட்சம் மதிப்பில் 462 குடியிருப்புகள் மதுரை, கோயம்புத்தூர், திருப்பூர், சிங்காநல்லூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ளன.

1970-ல் குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோன்றுவதற்கு முன்பு, சென்னை மாநகரில் 75 குடிசைப் பகுதிகளை அகற்றி உறுதியான வீடுகளைக் கட்டித்தர வீட்டு வசதி வாரியத்திற்கு ரூ. 885.41 இலட்சம் செலவாகியது. மாவட்டத் தலைநகர்களான சேலம், கோவை, தஞ்சை, திருச்சி, கடலூர் ஆகிய இடங்களில் குடிசைப்பகுதிகளை மாற்றி அமைப்பதற்காகச் சுமார் ரூ. 3 கோடி செலவிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ. 35 இலட்சம் செலவில் 1,000 குடியிருப்புகள் சேலம், கோவை, மதுரை, கடலூர் முதலிய இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

சென்னை நகரில் குடிசைப் பகுதி மாற்று வாரியம் வியக்கத்தக்க வகையில் பணியாற்றி வருகிறது என்பது கண்கூடு. இவ்வாரியத்தின் சிறப்பான பணி நாடெங்கும் பாராட்டப்பட்டு வருகிறது என நினைக்கும் போது தமிழ்நாட்டைச் சார்ந்த நாம் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைகிறோம். இவ்வாரியம் 4,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளைச் சென்ற ஆண்டில் ரூ. 3 கோடி செலவில் கட்டி முடித்துள்ளது. 1972-ஆம் ஆண்டில் 8,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் கட்டப்பட்டு வழங்கப்படும் தருவாயில் உள்ளன.

1970—71-ஆம் ஆண்டில் வீட்டு மனைகளைப் பண்படுத்தவும், வீடுகளைக் கட்டவும், வீட்டு வசதி வாரியம் மொத்தமாக ரூ.740·85 இலட்சம் செலவிட்டது. இந்த ஆண்டும் இதே மதிப்பீட்டின் அளவில் பணி நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் திட்டம்

நாளுக்கு ஒரு ரூபாய் நயமாய்ச் சேர்த்தால் ஐந்தாண்டு முடிவில் அழகான வீடு!

சிண்டிகேட் வங்கியின் ஆதரவு, ஒத்துழைப்புடன் குறைந்தது தினம் ஒரு ரூபாய் வீதம் சேமிப்பவர்கட்கு, 5-வது ஆண்டு முடிவில் வீடுகள் கட்டித்தரும் திட்டமொன்று தீட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதக் கடைசியிலும் சேகரிக்கப் பட்ட இத்தொகையானது அந் நபரின் கணக்கில் வரவு வைக்கப் படும். இவ்வாறு சேர்க்கப் பட்ட முதலும், அதற்கான 5 சதவீத வட்டியும் வீட்டு வசதி வாரியத்திடம் சிண்டிகேட் வங்கி 5-வது ஆண்டு இறுதியில் இத் தொகைக்கு நான்கு மடங்கு தொகையை முன்பணமாகத் தரும். அதைக் கொண்டு சேமிப்புத் தொகையின் 4 மடங்கு மதிப்புள்ள வீடு, சேமித் தவர்க்குக் கொடுக்கப்படும். பிறகு 10 அல்லது 12 ஆண்டு களில் மிகுந்த தொகையை அவர் முன்போல் ஒவ்வொரு நாளும் சேமித்துத் திருப்பிக் கொடுத்து விடலாம்.

• • •

சுமார் 2,500 நபர்கள் இரண்டு மாதத்திற்குள் இத்திட்டத்தில் சேருவதற்கு விண்ணப்பித்துள் ளார்கள். இதுவரை சுமார் 800 விண்ணப்பதாரர்கள் பணம் செலுத்தத் தொடங்கிவிட்டனர்.

| | |
|---|---|
| சென்னை நகரில் | 410 |
| திருச்சி மாவட்டத்தில் | 123 |
| கோவை மாவட்டத்தில் | 174 |
| ஏனைய மாவட்டங்களில் | 93 |
| ஆக மொத்தம் | 800 |

இது வரை பதிவு செய்யப்பட்ட நபர்களிடமிருந்து திரட்டப் படும் தொகை சுமார் 5 இலட்சம் ரூபாய் ஆகும். பணம் செலுத்த வருபவர்களுடன் கலந்து ஆலோ சித்து, ஏற்கெனவே வாரியத் திடம் கைவசமில்லாத பகுதி களில் வீடுகள் கட்டுவதற்கு நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

கிராமப் பகுதிகளில் நில மில்லாத தொழிலாளர்களுக்கு மனையுரிமை அளிக்க மாநிலங்கள் சட்டம் நிறைவேற்றினால் அம் மாநிலங்களில் உபரியாக உள்ள எளிய விவசாயக் குடும்பங்களுக்கு மனை வாங்கி, பண்படுத்தி இல வசமாக வழங்க, பணம் தர மத்திய அரசு முன்வந்துள்ளது. இச்சலுகையையொட்டி ரூ. 80·29 இலட்சம் செலவில் 33,592 வீட்டு மனைகள், நிலமில்லாத கிராமத் தொழிலாளர்களுக்கு அளிப்பதற்கான திட்டம் மத்திய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மத்திய அரசாங்கம் 548 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்கும், வீட்டு மனைகளை அபிவிருத்தி செய்வதற்கும் ரூ. 75.51 இலட்சம் அனுமதித்துள்ளது. நிலம் கையகம் செய்யப் போதிய சிப்பந்திகள் நியமிக்கப்பட்டு இதற்கான வேலை துவக்கப்பட் டுள்ளது. நடப்பு நிதியாண்டிற் குள் இத்திட்டம் முடிவடைந்து ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படும்.

மேலே விவரித்த திட்டங்கள் அனைத்தும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் போதிய நிதி வசதி இன்றியமையாதது. இயல்பாகப் பெறப்படும் வருவா யைப் பெருக்கிக் கொள்வதற் காக வாரியம், இவ்வாண்டு ரூ. 3 கோடி பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்பத் திட்டமிட்டுள் ளது.

வீட்டு வசதி வாரியத் திட்டங் களுக்கு ஆயுள்காப்புக் கழகம் கடனுதவி அளிக்க உதவி அளித் துள்ளது. இதற்காக ஆயுள் காப்புக் கழகம் வீட்டு வசதி வாரி யத்துடன் இணைந்து புதுத் திட்ட மொன்றை உருவாக்கியுள்ளது. பாலிசிதாரர்கள் அவர்களுடைய வீட்டைக் கட்டிக் கொள்வ தற்குக் கடனளித்து வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டிக் கொள்ளக் கழகம் அனுமதிக்கும். பயனடைவோ ரிடமிருந்து பிரிமியமும் கடன் தவணைத்தொகை ஆயுள்காப்புக் கழகத்தின் சார்பாக வாரியம் வசூலிக்கும். இத்திட்டத்தில் பங்கு கொள்பவர்களுக்கு (அல் லது அவர்களுடைய சந்ததி யருக்கு) வீடு கிடைக்கும். அதே தருணத்தில் ஆயுள்காப்பும் அளிக் கப்படுகிறது. இரு கருத்துக்கள் கொண்ட இத் திட்டம் மக்களின் பேராதரவைப் பெறும் என்பது நிச்சயம். மத்திய அரசு இதற்கு விரைவில் அனுமதி வழங்குமென எதிர்பார்க்கப்படு கிறது.

வீட்டு வசதி புறநகர் அபி விருத்தி கார்ப்பரேஷன் (Housing and Urban Development Corporation) கொரட்டூர் புறநகர்ப் பகுதிக்காக ரூ. 2.386 கோடியும் கலைஞர் கருணாநிதி நகர், அண்ணா நகர், கோட்டூர் புரம், சென்னியம்மன் கோயில் ஆகிய நான்கு பகுதிகளுக்கும் மொத்தமாக ரூ. 6.25 கோடி கடனுதவியாக அளித்துள்ளது. கொரட்டூர் திட்டத்தில் 1,508 வீட்டு மனைகள் பலதரப்பட்ட வருவாய்உடையோருக்குவழங்கப் பட விருக்கின்றது. இந்த ஆண்டு 280 வீடுகள் கட்டப்படும். மற்றப் பகுதிகளில் அபிவிருத்திப் பணி நடந்து வருகிறது. 3,733 வீட்டு மனைகளில் குடியிருப்புகள் அமைக் கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# வாரியம் ஆற்றும் பணிகள்

கட்டடங்களை விரைவாகவும் குறைந்த செலவிலும் கட்டு வதற்கு அடிப்படையான கட்ட டப் பொருட்கள் நியாயமான விலைக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வேண்டும். இதற்காக ஹட்கோ ( HUDCO ) நிதி உதவியுடன் செங்கல், பளிங்கு ஓடுகள், குழாய்கள், மரச்சாமான் கள் முதலியவைகளை வாரியமே தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட் டுள்ளது.

# பார்த்தோம் படித்தோம்






### திருப்பு முனை

'பாட்டுக்கொரு புலவன்' கவிதை மூலம் மகாகவி பாரதியாரைப் புதிய கோணத்தில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் இளங்கோ! இது கவிஞர் ஆனந்தம் அவர்களின் பாணி. இலக்கியத்தில் நல்ல திருப்புமுனை. இதுபோன்ற கவிதைகள் தொடர்ந்து வெளிவர வேண்டுகிறேன்.

—புலவர் பூங்கோதை, சித்திரையூர்.

### தமிழ் வள்ளல்

ஊராட்சி வளர்ச்சி ஊழியர்கட்கு வழக்கம்போல் இப்போதும் வாரி வழங்கியுள்ளது தமிழக அரசு. பொறுத்திருந்தோம்; பயன் பெற்றோம். இன்று அள்ளித்தரும் வள்ளல் தமிழரசே!

—வே. விஜயலட்சுமி, மதுரை–1.

### பார்த்தேன்! ரசித்தேன்!

''தமிழரசு'' நாட்காட்டியைப் பார்த்தேன்! பன்முறை ரசித்தேன்! அறையில் மாட்டியுள்ளேன்! தமிழரசுக்கு எனது நன்றி.

—சி. வேங்கப்பன், பூவிருந்தவல்லி.

### ராஜாதி........ராஜாஜி

எந்த இதழும் அமரர் ராஜாஜியின் படத்தை ஆப்செட்டில் அழகாக அச்சிடவில்லை. ஆனால், தமிழரசு இதழ் எல்லாவற்றையும் வென்று ராஜாதி ராஜாவாகி விட்டது. படத்தைத் தனியாக எடுத்துக் கண்ணாடி போட்டுவிட்டேன்.

—மா. கோமளா, சென்னை-2.

### தோழி, வாழி!

முதல்வர் எழுதிய 'தோழி' எத்தனை தரம் படித்தாலும் திகட்டவே இல்லை; தமிழினிமை..ஆகா! நாவில் நீர் ஊறிக்கொண்டே உள்ளது. இது வெறும் தேனலை கள் அல்ல, பெரும் செந்தேன் கடல்.

—இரா. பார்வதி, சிவகங்கை.

### நிமிர்ந்தெழுந்தேன்!

அரும் பொருட்காட்சி அகத்துக்கு இவ்வளவு பெரிய வரலாறு? ஏ, அப்பா! ஏதோ, சரித்திரப் புத்தகத்தைப் படிப்பது போன்ற சுவை, விறுவிறுப்பு, உணர்ச்சிகள் கண்டேன். அதை அலட்சியப் படுத்தியிருந்த என்னைத் துடித்தெழச் செய்து விட்டது தங்கள் கட்டுரை.

—ஆர். செல்வராஜன், நாமக்கல்.



# மகளிர் பகுதி

# குழந்தைகளின் நோய்த் தடுப்பு முறை

நாட்டிலுள்ள மகளிர் மன்றங்கள் நல்லமுறையில் பயனுள்ள வகையில் செயல்படுவதற்கு முன்னோடியாக, அகில இந்திய வானொலியின் சென்னை வானொலி நிலையம் நலவழிக் கல்வி-குடும்ப நலத்திட்டம் பற்றிய ஒரு கருத்தரங்கத்தை நடத்தியது.

அதில் நாற்பதுக்கு மேற்பட்ட மகளிர் மன்றத்தைச் சேர்ந்த தாய்மார்கள், மருத்துவத்துறை வல்லுநர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள், அரசுப் பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கம் போன்று மகளிர் மன்றங்களும் தனித் தனியாகக் கருத்தரங்கங்களை நடத்தலாம்.

சென்னை எழும்பூரிலுள்ள குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய இயக்குநரும், குழந்தைகள் மருத்துவமனைக் கண்காணிப்பாளருமான திரு வ. பால கோபால் ராஜு அவர்கள் கருத்தரங்கில் முதல்நாள் ஆற்றிய உரை மிகச் சிறந்ததாக இருந்தது. குழந்தைகளுக்கு வரும் நோய்களைப் பற்றி அவர் எடுத்துரைத்த விவரம் தாய்மார்களுக்கும் மிகவும் பயனுள்ளதாகும். அந்த உரையில் மிக முக்கியமான பகுதிகள் வருமாறு :

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கண்டு பெரிதும் நடுங்கும் சிலர், இவ்வளவு குழந்தைகள் இருக்கையில், அவர்களில் சிலர் இறப்பதால் என்ன நஷ்டம் என்று கேட்கலாம். இந்த எண்ணப் போக்குச் சரியல்ல.

நம் நாட்டுக் குழந்தைகளின் உடல் நலக் குறைவிற்கும், இறப்பிற்கும் முதற் காரணம் சத்துணவுக் குறைவே. இத்துடன் கிருமி நோய்களும் சேர்ந்து கொள்கின்றன. சத்துணவுக் குறைவினால்தான் சாதாரணக் கிருமிநோய்களையும் தடுக்கும் சக்தி நம் குழந்தைகளிடம் இல்லை.

நோயுற்ற குழந்தைகள் இறப்பதால் மற்ற திடமான குழந்தைகளுக்கு நன்மைதானே என்று விவாதிக்கலாம். சுமார் நூறு குழந்தைகள் டைஃபாய்டு சுரத்தால் இறந்தால், அவர்கள் மட்டும்தான் அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அர்த்தமல்ல. குறைந்தது ஐயாயிரம் குழந்தைகளாவது டைஃபாய்டு ஜுரம் வந்து அவதிப் பட்டிருப்பார்கள். வெகுநாட்களுக்கு நலங்கெட்டும் இருந்திருப்பார்கள்.

மற்றும் நமக்குத் தெரியாமலேயே ஆயிரக்கணக்கான குழந்தைகள் டைஃபாய்டு கிருமியைச் சுமந்து கொண்டு சமூகத்தில் உலவிக் கொண்டிருப்பார்கள். சில காலம் பொறுத்து அவர்களே அந்நோயின் பின்விளைவுகளால் கடுமையாகப் பாதிக்கப்படுவது மட்டுமின்றி, சமூகத்திலும் அந்நோயை நிரந்தரமாகப் பரப்பிக் கொண்டிருப்பார்கள். இந்த விளைவுகள் எல்லாவற்றையும் நாம் டைஃபாய்டு நோயைத் தடுப்பதன் மூலம் தடுத்துவிடலாம். எனவே, நோய்த் தடுப்பு முறை இன்றியமையாததாகிறது.

ஒவ்வொரு குழந்தையும் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், நோய்க் கிருமியால் பாதிக்கப்படுகிறது. மிருகங்களின் மூலமோ, மனிதர்களின் மூலமோ பரவும் வியாதிக்குத் தொத்துநோய் என்று பெயர்.

Bacteria எனப்படும் நுண் கிருமிகளும், Virus எனப்படும் அணுக்கிருமிகளும் நம் உடலில் புகுந்து, குறிப்பிட்ட சில இடங்களில் பெருகி இந் நோய்களை விளைவிக்கின்றன. இந்நோயின் தீவிரம், நோய்க் கிருமிகளின் தனித்தன்மையையும், அவைகளின் எண்ணிக்கையையும் மட்டுமின்றி உடலின் நோயை எதிர்க்கும் சக்தியின் அளவையும் பொறுத்துள்ளது. உடலின் இந்த எதிர்க்கும் சக்திக்கு Immunity என்று பெயர்.

இந்த எதிர்ப்புச் சக்தி, இயற்கையாகவோ, அல்லது செயற்கையாகவோ புகுத்தப் பட்டதாக இருக்கலாம். இயற்கையான தடுப்புச் சக்தி (Natural Immunity) என்பது முறையான சத்துணவு, திடமான உடல், வயது, சுற்றுப்புறச் சூழ்நிலை, இவற்றைப் பொறுத்துள்ளது.

இச்சக்தியில் ஓரளவு, குழந்தைக்குத் தாயின் கருவிலிருக்கும்போது நஞ்சு மூலமாகவும், பிறகு தாய்ப்பால் மூலமாகவும் கிடைக்கிறது.

உதாரணமாகப் பெரும்பான்மையான சிசுக்களுக்கு இயற்கையிலேயே, தட்டம்மை, சின்னம்மை, பெரியம்மை, பொன்னுக்கு வீங்கி, இளம்பிள்ளை வாதம், போன்ற நோய்களைத் தடுக்கும் சக்தி இருக்கிறது. தாயிடமிருந்து பெற்ற இந்தச் சக்தி முதல் ஐந்தாறு மாதங்கள் வரை இருக்கும்.

ஒருவன் கிருமிகளாலோ, அவை உற்பத்தி செய்யும் விஷப் பொருட்களாலோ தாக்கப்படும் போது அவனுக்குச் செயற்கையான தடுப்புச் சக்தி உண்டாகிறது. இதுவே, அவன் இயற்கையாகக் குணம் அடையக் காரணம். இந்தத் தடுப்புச் சக்திப் பொருள்கள் அவன் இரத்தத்தில் தங்கி, அவன் பிற்காலத்தில் அதே நோயினால் பாதிக்கப் படாமல் தடுக்கிறது. அண்மைக் காலம் வரை இந்த ஒரு முறையே நோய் வராமல் தடுக்கக் காரணமாயிருந்தது.

ஆனால், தற்போது நவீன மருத்துவ முறையில், தடுப்பு ஊசிகளைப் பயன்படுத்தி, செயற்

கையாக நோயை எதிர்க்கும் சக்தியை (Immunity) அடையலாம்.

தடுப்பு ஊசிகள் என்பவை, ஒரு நோயினால் பாதிக்கப்படாமல், அந்நோயை எதிர்க்கும் சக்தியை, (antibodies எனப்படுவதை) உடலில் உண்டாக்கக் கூடியவையாகும்.

சில தடுப்பு முறைகள் (Vaccines) உயிருள்ள நோய்க் கிருமிகளைக் கொண்டவை. உதாரணமாகப் பெரியம்மை, இளம்பிள்ளை வாதத் தடுப்பு முறை. இந்த உயிருள்ள கிருமிகள் உடலில் செலுத்தப்படுமுன் ஆய்வுக்கூடத்தில் சில மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அதன் மூலம் இவை நோயின் தீங்கைக் கொடுக்காமல், தடுப்புச் சக்தியை மட்டும் கொடுக்கின்றன.

மற்றும் சில தடுப்பு முறைகள் (Vaccines) கொல்லப்பட்ட கிருமிகளைக் கொண்டவை. உதாரணமாக, டைஃபாய்டு தடுப்பு ஊசியைச் சொல்லலாம். இவை கொல்லப்பட்டு இருந்தாலும் தடுக்கும் சக்தியைக் கொடுக்கும் தன்மை உடையன.

சில கிருமிகள் உற்பத்தி செய்யும் விஷப் பொருட்களுக்கும், தடுப்புச்சக்தி (அதாவது antibody-ஐ), உண்டுபண்ணும் தன்மை இருக்கிறது. இவைகளுக்கு உதாரணமாக டிப்தீரியா, டெடனஸ் தடுப்பு ஊசிகளைக் கூறலாம். இந்த இரண்டு வியாதிகளும், கிருமிகள் உண்டாக்கும் விஷப் பொருட்களால் வருகிறது. டாக்சின் (Toxin) என்னும் விஷப் பொருட்கள் ஆய்வுக் கூடத்தில் (Laboratory—யில்) தீங்கற்ற பொருட்களாக மாற்றப்படுகின்றன. இவை உற்பத்தி செய்யும் antibody-ஐ anti-toxin என்கிறோம்.

இயற்கையாக நோயினால் கிடைக்கும் எதிர்ப்புச் சக்தியைப் போல இந்தச் செயற்கை எதிர்ப்புச் சக்தி நிரந்தரமல்ல. எனவே, இதை அடிக்கடி தடுப்பு ஊசிகள் மூலம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

நம் நாட்டில் தற்பொழுது குழந்தைகளைப் பாதிக்கும் தொத்து வியாதிகளில் தடுப்பு ஊசிகளினால் சுலபமாகத் தடுக்கக் கூடிய வியாதிகளில் முக்கியமானவை எட்டு வியாதிகள். அவைகள்:—

1. உருக்கி நோய் T.B. எனப்படும் Tuberculosis
2. தொண்டை அழற்றி நோய் அதாவது Diptheria
3. ஜன்னி Tetanus
4. கக்குவான் இருமல் ( Whooping cough )
5. இளம்பிள்ளை வாதம் ( Poliomyelitis ).
6. தட்டம்மை (Measles).
7. டைபாய்டு.
8. காலரா.

சில ஆண்டுகளுக்கு முன்பு, நான் பெரியம்மைக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பேன். நம் மாநில அரசும், மத்திய அரசும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக அந்நோயைக் காண்பது இப்போது அரிதாகிவிட்டது. தற்போதுள்ள தீவிரமான அம்மைத் தடுப்பு முறை இங்கே தொடர்ந்து அமலில் இருந்தால் இந்நிலைமை நீடிக்கும்.

குழந்தை பிறந்த சில நாட்களிலேயே அம்மை, முதல் தடுப்பு ஊசியைப் ( Primary Vaccination ) போடுவது சிறந்த முறை. இல்லாவிடில், பிறந்த சில மாதங்களுக்குள் இந்தத் தடுப்பு ஊசியைப்போட்டு விட வேண்டும். பிறகு 6 வயது வரை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் பிறகு ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையும் போடுவது சிறந்தது ஆகும்.

நமது நாட்டில் உள்ள தொத்து நோய்களின் மிகத் தலையாய பிரச்சினை உருக்கி நோய் அல்லது T.B. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி தமிழ் நாட்டுச் சேரிப் பகுதிகளில் உருக்கி நோயால் பீடிக்கப்பட்டவர்கள் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 25 சத

# நல வழிக் கல்விக் கருத்தரங்கம்
# ஒரு முன்னோடிக் கருத்தரங்கம்

விகிதமும், 12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் 4 சதவிகிதமும் இருக்கிறார்கள்.

உருக்கி நோயைத் தடுப்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் சிசுப் பருவத்தில் B. C. G. தடுப்பு ஊசி முறையால் இந் நோயைத் தடுப்பதில் பெருமளவில் வெற்றி காணலாம். நமது அரசு, எல்லாத் தாய்சேய் நல விடுதிகளிலும், மாநகராட்சி மருத்துவ மனைகளிலும், பிறந்த குழந்தைகளுக்கு அம்மைத்தடுப்பு ஊசியுடன், B.C.G. தடுப்பு ஊசியினையும் போட்டு வருகிறது. இதுவரை தமிழ் நாட்டில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு B. C. G. தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

இதற்கடுத்தபடியாகக் குழந்தைகளைக் கடுமையாகத் தாக்கக்கூடிய நோய்கள், Diphtheria, Tetanus, Whooping Cough (கக்குவான்) என்பவை.

சத்துணவுக் குறைவுள்ள குழந்தைகளுக்கு இந்த நோய்கள் வந்தால் உயிருக்கு பெரும் ஆபத்து நேரலாம். ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் இந்த நோய்களால் இறக்கின்றனர்.

மேற்கூறிய மூன்று நோய்களையும் தடுக்கவல்ல தடுப்பு ஊசிகளையும் தனித்தனியே போடமுடியுமாயினும், மூன்றையும் சேர்த்து மும்முனைத் தடுப்பு ஊசியாக ( Triple Antigen ) தற்போது போடப்படுகிறது. நம்மரசு இந்த ஊசிகளை எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும், (ஆரம்ப சுகாதார நிலையம் உள்பட) போடும் வசதியைச் செய்திருக்கிறது. இந்த ஊசிகளை, சென்னை மாநகராட்சி மருத்துவ நிலையங்களிலும் போட்டுக் கொள்ளலாம்.

இந்த ஊசியில் முன்பு கூறிய முறையில் தயாரிக்கப்பட்ட (Diphtheria Toxoid, Tetanus Toxoid) என்று சொல்லப்பட்ட கக்குவான், இருமல் கிருமிகள் ஆகியவை அடங்கியுள்ளன.

இந்த மும்முனைத் தடுப்பு ஊசி ( Triple Antigen ) குழந்தை பிறந்த 2-வது மாதத்தில் இருந்து 5 வயது வரை கொடுக்கலாம். முதலில் இந்த ஊசியை 4 அல்லது 6 வார இடைவெளியில் மூன்று முறை கொடுக்க வேண்டும். முதல் ஊசியை 2-வது மாதத்தில் கொடுத்தால், இரண்டாவது ஊசியை மூன்றாவது மாதத்திலும், மூன்றாவது ஊசியை 4-வது மாதத்திலும் கொடுக்க வேண்டும். அதன் பிறகு ஒரு வருடங் கழித்து ஒரு முறையும் ( First Booster ) 4—5 வயதில் மற்றொரு முறையும் கொடுக்கவேண்டும்.

இந்த மும்முனைத் தடுப்பு ஊசியை 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குக் கொடுப்பது நல்லதல்ல. ஏனெனில், இதில் உள்ள கக்குவான் கிருமிகள், இவ்வயதிற்கு மேல், மூளையைப் பாதிக்கலாம். ஆனால், அவசியம் ஏற்பட்டால் மற்ற இரு நோய்களையும் (டிப்தீரியாவும், டெடனஸும்) தடுக்கும் ஊசிகளைத் தனித்தனியாகவோ, சேர்த்தோ கொடுக்கலாம். இதை மறுபடியும் 14 வயதில் ஒரு முறை கொடுப்பது சிறந்தது. அதன்பிறகு 10 ஆண்டுகட்கு ஒரு முறை Tetanus Toxoid கொடுத்து வருவது அவசியமும் சிறந்ததும் ஆகும்.



ஆசியாவிலேயே சிறந்த குழந்தைகள் மருத்துவமனை என்று எல்லாராலும் பாராட்டப்படும் எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனைக்கண்காணிப்பாளர் டாக்டர் வ. பாலகோபால்ராஜு அவர்கள்

குழந்தைகளுக்கு ஒவ்வொரு முறை காயம் ஏற்படும்போதும் Tetanus Toxoid கொடுக்கவேண்டுமா என்று பெற்றோர்க்கு ஐயம் ஏற்படலாம். காயம் ஆழமானதாகவும், பெரியதாகவும் இல்லாதிருந்தால், கடந்த 5—6 ஆண்டுகளில் இதைப் போட்டிருந்தால், இந்த ஊசியைப் போடவேண்டிய அவசியமில்லை. Tetanus பற்றித் தெரிந்தவர்களுக்குச் சில விஷயங்கள். Tetanus என்னும் நோய் தடுப்பு ஊசி போடாத குழந்தைகளுக்கு என்றைக்கும் ஆபத்தை விளையக் கூடும். இந் நோய் மண்ணிலிருக்கும் ஒரு வகையான கிருமியினால் ஏற்படுகிறது. மண்ணில் வீரியமில்லாத இந்தக் கிருமி உடலில் புகுந்தவுடன் பெருகி, அதிகச் சக்திவாய்ந்த விஷப் பொருட்களை உண்டாக்குகிறது. இந்த விஷப் பொருள்கள் தசைகளைச் செயலற்றுப் போகச் செய்வதுடன், தசைகளை இறுக்கியும், வலிப்பும் உண்டாக்கச் செய்கின்றன.

வீட்டின் பின்புறமோ அல்லது புழுதி படிந்த சாலைகளிலோ சிறிய காயம் ஏற்பட்டாலும், (Tetanus) வியாதி வர வாய்ப்பு இருக்கிறது. எனவே, தடுப்பு ஊசி தவறாமல் போட்டுக் கொள்ளுவதன் மூலமே இதைத் தடுக்கமுடியும். பிறந்த குழந்தையின் தொப்புள் கொடியை அறுப்பதற்குச் சுத்தமில்லாத கத்தியை உபயோகிப்பதனாலும், தொப்புள் கொடியை கட்டுவதற்குச் சுத்தமில்லாத நூலை உபயோகிப்பதாலும் அநேகக் குழந்தைகளுக்கு Tetanus வருகிறது.

கர்ப்பிணிகளுக்குக் கர்ப்பகாலத்தின் பிற்பகுதியில் இந்தத் தடுப்பு ஊசி போடுவதாலும், சுத்தமான கருவிகளைப் பிரசவச் சமயத்தின் போது உபயோகிப்பதாலும், இந்நோயைத் தடுக்கலாம். குழந்தைகளுக்கு நெடுநாளையக் காதுச் சீழ் நோயாலும் (Tetanus) வரும்.

Diptheria என்னும் நோய் சாதாரணமாகத் தொண்டைப் புண் மாதிரி ஆரம்பிக்கிறது. பிறகு தொண்டை அடைப்பு, இருதயம், நரம்பு முதலியன பாதிக்கப்படக் கூடும். இதனால் நூற்றுக் கணக்கான குழந்தைகள்தங்கள்உயிரைஇழக்கிறார்கள். சில திடமானவர்களிடம் இந்த நோய்க் கிருமிகள், வியாதி உண்டாக்காமல் உடம்பில் இருப்பதுண்டு. வியாதி இல்லாமல் இருக்கும் இவர்களிடமிருந்து தடுப்பு ஊசி போடாத குழந்தைகளுக்கு வியாதி பரவக்கூடும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

கக்குவான் இருமலைப் பற்றி எல்லாருக்கும் தெரிந்து இருக்கும். கக்குவான் இருமல், பிறந்தகுழந்தைகளையும், சின்னஞ்சிறிய குழந்தைகளையும் மிகக் கடுமையாகத் தாக்கும். ஏனெனில் இந்நோய் பெரிய குழந்தைகளைப் பாதித்தால், அது நீண்ட நாள் இருப்பதோடு, அவர்களுக்கு உருக்கி நோய் இருந்தால் அதை அதிகப்படுத்தவும் செய்கிறது

அடுத்து முக்கியத்துவம் பெறுவது இளம்பிள்ளைவாதம் தடுப்பு முறையாகும். Virus எனப்படும் அணுக்கிருமிகளால் உண்டாகும் இந்நோய் கை, கால்களில் வாதம் உண்டாக்குவதுடன், மூளை போன்ற முக்கிய உறுப்புகளையும் தாக்குகிறது. இது டைஃபாய்டு சுரத்தைப் போலவே, உமிழ் நீர், சிறுநீர், மலம் முதலியவற்றின் மூலம் பிறருக்குப் பரவுகிறது. எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவ விடுதியில் மட்டும், ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக் கணக்கான குழந்தைகள் இளம்பிள்ளை வாதத்தினால் கை, கால் செயலற்றுப் போய் வருகின்றனர். இந்த நோய், குழந்தைகளைப் பாதித்தால் அவர்களில் ஒரு சதவிகிதம் தான் கை, கால் செயலற்று இருக்கின்றனர். இதிலிருந்து நமது சமுதாயத்தில் இந்த நோய் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறகிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

எல்லாக் குழந்தைகட்கும், வாய் மூலமாகக் கொடுக்கப்படும் போலியோ தடுப்பு மருந்து மிக இன்றியமையாததாகும். இந்த மருந்தை எந்த வயதிலும் கொடுக்கலாம். ஆனால் மும்முனைத் தடுப்பு ஊசிபோடும் சமயத்தில் இதையும் கொடுத்து விட்டால் சௌகரியமாக இருக்கும். அதாவது Triple Antigen போலவே மாதம் ஒரு முறை இடைவெளியில் கொடுக்கவேண்டும். ஆனால் 3 முறை கொடுப்பதைவிட 5 முறை கொடுத்தால் இன்னும் நல்லது. 4—வது முறையாக, 3—வது முறை கொடுத்ததில் இருந்து 6—மாதம் கழித்தும், 5—வது முறையாக இதிலிருந்து 2 மாதம் கழித்தும் கொடுக்க வேண்டும்.

போலியோ தடுப்பு மருந்து கொடுப்பதில் சில முன்னெச்சரிக்கைகள்.

1. ஜலதோஷம் போன்ற அணுக்கிருமிகளால் வருகின்ற நோய்கள் குழந்தைகளுக்கு இருக்கும்போது இம் மருந்தைக் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் பயனிருக்காது.

2. இம்மருந்தைக் கொடுப்பதற்குச் சில மணி நேரங்கள் முன்னும், பின்னும் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது. ஏனெனில் தாய்ப்பாலில் உள்ள Antibody இம்மருந்தின் சக்தியைக் குறைத்து விடுகிறது.

அடுத்து வருவது தட்டம்மை ( Measles ). இதுவும் கக்குவான் இருமலைப் போல் உருக்கு நோய் இருந்தால் அதை அதிகப் படுத்தும். அண்மைக் காலத்தில் தட்டம்மைக்கும் தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில ஆண்டுகளில் நமது நாட்டிற்கு அம்மருந்து உபயோகத்திற்கு வரும்.

டைஃபாய்டு சுரம் தடுப்பு முறையும் (T. A. B. தடுப்பு ஊசி) குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. T. A. B. 4 வார இடைவெளியில் 11-வது மாதத்திலும் 12-வது மாதத்திலும் கொடுக்கப்படுகிறது. இதன் பிறகு ஒன்பது முதல் 3 ஆண்டு இடைவெளியில் திரும்பவும் கொடுக்கலாம். காலராத் தடுப்பு ஊசி, நாட்டில் கலாரா பரவியிருக்கும் சமயத்தில் போடப்படுகிறது. இம் மருந்தை 6 மாதக் குழந்தையிலிருந்து எல்லா வயதினருக்கும் போடலாம்.

சுருங்கக் கூறின், B.C.G. யும் பெரியம்மைத் தடுப்பு ஊசியும், குழந்தை பிறந்தவுடன் மும்முனைத் தடுப்பு ஊசி 2-வது 3-வது 4-வது மாதங்களில் இத்துடன் வாய் மூலம் கொடுக்கும் போலியோ தடுப்பு மருந்து 3 தடவை 4-வது, 5-வது போலியோ தடுப்பு மருந்து 10-வது 12-வது மாதத்தில் பிறகு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை.

முதலாவது, இரண்டாவது பூஸ்டர், Triple Antigen அதாவது மும்முனைத் தடுப்பு ஊசி $1\frac{1}{2}$ வயதிலும் 4—5 வயதிலும், T. A. B. டைஃபாய்டு தடுப்பு ஊசி 11-வது மாதத்திலும் பிறகு 12-வது மாதத்திலும் மறுபடி ஒன்றிலிருந்து 3 ஆண்டுக்கு ஒரு முறை.

இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த டாக்டர் பாலகோபால் ராஜு தாய்மார்களுக்கு ஏற்பட்ட ஐயங்களையும் அகற்றினார்.

மொத்தத்தில் வானொலி நிலையம் நடத்திய கருத்தரங்கம் மகளிர் மன்றங்களுக்கு வழிகாட்டியான ஒரு கருத்தரங்கமாகும்.

— அஞ்சனா



# உழவர்க்கு உதவும் நவரைத் திட்டம்



"அட என்னாங்க அண்ணாச்சி பொன்னான விளக்கம் சொல்லுவேன் புரிஞ்சிக்குங்க........''

என்று ஆரம்பித்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள நந்திவரம் என்ற கிராமத்தில் கடந்த 20—12—72 அன்று திரண்டிருந்த ஆயிரக்கணக்கான உழவர்பெருமக்களின் உள்ளத்தைக் கவர்ந்து, 'உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளையே இனிப்பயிரிடுவது!' என்ற உறுதியை ஏற்படுத்தியது. இந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைக் 'கடும் விரைவு பின்பருவத் திட்டம்' (Emergency Rabi Programme) என்னும் நவரைத் திட்டத் துவக்க விழாவை யொட்டி, நந்திவரத்திலே தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை ஏற்பாடு செய்திருந்தது.

உழவர் பெருமக்கள் நவீன சாகுபடி முறைகளை மேற்கொண்டு, உயர்விளைச்சல் தரும் வகைகளைப் பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்ல சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவும், அதிக உற்பத்தியின் காரணமாக அதிக வருவாய் பெற்று வாழ வேண்டுமென்பதற்காகவும், புது மாதிரி வில்லுப்பாட்டு நிகழ்ச்சி—சினிமாவில் உள்ளது போல் இசைக் கருவிகளையெல்லாம் வைத்துக் கொண்டு—நந்திவரத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்வில்லுப்பாட்டினால் உழவர் பெருமக்கள் உயர் விளைச்சல் நெல் ரகங்களைப் பற்றிய தெளிவான விளக்கம் பெற்றார்கள். • •

வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பின்னர், கடும் விரைவு பின்பருவத் திட்டத் துவக்க விழா நிகழ்ச்சி, மாண்புமிகு தமிழ்நாடு உணவு அமைச்சர் திரு மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு ரகுநாத ரெட்டியார் வரவேற்பு உரையாற்றினார்.

வேளாண்மைத் துறைச் செயலாளர் அவர்கள் கடும் விரைவு பின்பருவத் திட்டத்தைப் பற்றி விளக்கிப் பேசினார்.

செங்கற்பட்டு சட்டப் பேரவை உறுப்பினர் திரு விசுவநாதன் அவர்கள் ''பசுமைப் புரட்சியின் மூலம் எல்லாருக்கும் உணவு கிடைக்கச் செய்யவேண்டும் என்பதற்காகவே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப்புரட்சித் திட்டத்தைத் தமிழ்நாடு அரசின் முதல் திட்டமாக எடுத்துக் கொண்டார்'' என்று குறிப்பிட்டு விட்டு, ''இந்திட்டத்தில் உழவர் பெருமக்கள் அனைவரும் பங்கு கொண்டு பயன்பெற வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடுவேளாண்மை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்கள் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தைத் துவக்கிவைத்து உரையாற்றினார்கள். இந்த விழாவையொட்டி ஏற்பாடு செய்திருந்த வேளாண்மைக் கருத்துக் காட்சியையும் திறந்து வைத்தார்.

இத்தகைய விளம்பர விழாக்கள் டிசம்பர் 20 முதல் சனவரி 15 வரை செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பல இடங்களில் நடைபெற்றுள்ளன.

## நவரைத் திட்டம் ஏன் ?

இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவ மழை பொய்த்து விட்டதால், தமிழ்நாட்டில் பல பகுதிகளில் வறட்சி நிலவியது. அதனால் பல உழவர்கள் சாகுபடி செய்ய முடியாமல் வாடினர். கிடைத்த மழையைக் கொண்டு சாகுபடி செய்தவர்களும், போதிய மழை இல்லாததால் நல்ல மகசூல் பெற இயலவில்லை.

வடகிழக்குப் பருவ மழை அக்டோபர், நவம்பர்த் திங்களில் நன்கு பெய்ததால், நீர்நிலைகளிலெல்லாம் தண்ணீர் நிறைந்தன. உழவர் பெருமக்கள் வெகு ஆர்வத்துடன் சாகுபடி வேலைகளை மேற்கொண்டனர். ஆனால் டிசம்பர்த் திங்களில் ஏற்பட்ட புயலும், பெரும் மழையும், தமிழ்நாட்டின் பெரும்பகுதியை வெள்ளக் காடாக்கிப் பலரது உயிரையும், ஆயிரக்கணக்கான கால்நடைகளின் உயிரையும் அழித்துவிட்டதுடன், பயிர்களை அழித்தும், விளை நிலங்களில் மணலைக் குவித்தும் பாழ்படுத்திவிட்டன. இதனால் உழவர்பெருமக்களின் உழைப்புப் பாழாகிவிட்டது.

தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததனால் மட்டும், இந்த ஆண்டின் மொத்த உணவுதானிய உற்பத்தியில் ஏறத்தாழ 2·54 இலட்சம் டன் அளவுக்குக் குறைவு ஏற்படலாம் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் 34,295 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த உணவுதானியப் பயிர்கள் முழுஅளவில் பாழடைந்துள்ளதாலும், 1,87,300 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த உணவு தானியப் பயிர்கள் குறிப்பிடத் தகுந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதாலும், மேலும் உணவு தானிய உற்பத்தியில் குறைவு ஏற்படக்கூடும் என்பது உறுதியாகிறது.

இவ்வாறு வறட்சியினாலும், வெள்ளத்தினாலும் ஏற்படக்கூடிய உணவு தானிய உற்பத்திக் குறைவை ஈடுகட்டவே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை கடும் விரைவு பின்பருவத் திட்டத்தைத் தீட்டித் தமிழ்நாடு அரசின் அனுமதியுடன் செயல்படுத்தத் துவங்கியுள்ளது.

## நவரைத் திட்டம் என்றால் என்ன ?

நவரைப் பருவம் என்பது குறிப்பாகச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் வழக்கத்தில் உள்ளது. இப்பருவம் இந்த மாவட்டங்களில் டிசம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் துவங்கி, மே திங்கள் வரை நீடிக்கும். மற்ற மாவட்டங்களை விட இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள ஏரிகளில் வட கிழக்குப் பருவ மழையினால் தண்ணீர் தேங்குவதாலேயே இம் மாவட்டங்களில் நெடுங்காலமாக நவரைப் பருவத்தில் நெல்சாகுபடி செய்யப்பட்டு வந்துள்ளது.

செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 1970-71-ஆம்

ஆண்டில், நவரைப் பருவத்தில் 5.58 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. அதில் 2.82 இலட்சம் ஏக்கரில் ஐ. ஆர். 8, மற்றும் அதிலிருந்து உருவான ரகங்களும், 1.89 இலட்சம் ஏக்கரில் கோ. 29 முதலிய இதர உயர்விளைச்சல் நெல் ரகங்களும், 0.87 இலட்சம் ஏக்கரில் சாதாரண நெல்வகைகளும் அடங்கியிருந்தன.

ஐ. ஆர். 8 ரகமும், கோ. 29 ரகமும் உயர்விளைச்சல் ரகங்களே என்றாலும், இவ்விரண்டு ரகங்களுக்கும் உள்ள மகசூல் வேறுபாடு குறிப்பிடத் தகுந்த அளவில் உள்ளது. கடந்த ஆண்டுகளில் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 நெல் ரகங்கள் ஏக்கருக்குச் சராசரியாக 2 மெட்ரிக் டன் மகசூல் கொடுத்துள்ளது. ஆனால், அதே நேரத்தில் கோ. 29 நெல் ரகம் சராசரியாக ஏக்கருக்கு 1.2 முதல் 1.4 மெட்ரிக் டன் மகசூலே கொடுத்துள்ளது. எனவே, இந்த ஆண்டு நவரைப் பட்டத்தில் கோ. 29 ரகத்திற்குப் பதிலாக ஐ. ஆர். 8, ஐ. ஆர் 20 ஆகிய நெல் ரகங்களைக் கடும் விரைவு பின்பருவத்தின் கீழ் பயிரிடுமாறு உழவர்பெருமக்களுக்கு வேளாண்மைத் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நவரைத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்டங்களில் உறுதியான நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களில் பின் கண்டுள்ளவாறு உயர் விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப்படும்.

| மாவட்டம். | உயர்விளைச்சல் ரகங்கள் சாகுபடி செய்யப்படவிருக்கும் பரப்பு. (இலட்சம் ஏக்கர்). |
|---|---|
| செங்கற்பட்டு .. | 1.97 |
| வட ஆர்க்காடு .. | 1.83 |
| தென் ஆர்க்காடு .. | 1.02 |
| மொத்தம் | 4.82 |

நவரைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20', 'காஞ்சி', 'காவேரி', 'ரத்னா' ஆகிய ரகங்கள் பின் கண்டுள்ள பரப்பளவில் பயிரிடப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம்

| ரகம் | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர். 8 .. | 91,000 |
| ஐ. ஆர் 20 .. | 96,000 |
| ஜெயா .. .. | 10,000 |
| மொத்தம் | 1,97,000 |



நந்திவரத்தில் நடைபெற்ற வேளாண்மைக் கருத்துக் காட்சியை வேளாண்மை அமைச்சரும் உணவு அமைச்சரும் பார்வையிடுகின்றார்கள்

வட ஆர்க்காடு மாவட்டம்.

| ரகம். | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர் 8 .. .. | 1,11,000 |
| ஐ. ஆர் 20 .. | 72,000 |
| ஜெயா .. .. | 10,000 |
| மொத்தம் .. | 1,93,000 |

தென் ஆர்க்காடு மாவட்டம்

| ரகம் | பரப்பு. (ஏக்கர்) |
|---|---|
| ஐ. ஆர். 8 .. | 37,000 |
| ஐ. ஆர். 20 .. | 43,000 |
| ஜெயா .. .. | 3,000 |
| காஞ்சி .. .. | 5,000 |
| காவேரி .. | 5,000 |
| ரத்னா .. .. | 9,000 |
| மொத்தம் .. | 1,02,000 |

திட்ட விளம்பரம்

மேற்கூறிய பரப்பளவில் நவரைப் பருவத்தில் உயர் விளைச்சல் நெல் ரகங்களைச் சாகுபடி செய்யச் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள 97 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும், 10 கிராமங்களில் — நந்திவரத்தில் நடந்ததைப் போல்— விழா நடத்தப்பட்டுள்ளது. அவ்விழாவில் இத் திட்டம் பற்றி விளக்கி, உழவர் பெருமக்கள் அனைவரும் இத்திட்டத்தில் பங்கு கொள்வதற்கான ஆர்வத்தைத் தூண்டிவிடப்பட்டுள்ளது. மேலும் அவ்விழாவில் சொற்பொழிவு, வேளாண்மைப் பொருட் காட்சி, செயல்முறை விளக்கம், வேளாண்மைப் படக் காட்சி, சினிமா சிலைடு போன்றவற்றின் மூலம் உழவர் பெருமக்களுக்கு இத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தப்பட்டதுடன், நவீன சாகுபடி முறைகள் பற்றிய தெளிவான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய விழாவினை ஏற்படுத்த ஒவ்வொரு விழாவிற்கும் 150 ரூபாய் வீதம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் 1,500 வீதம் தமிழ்நாடு அரசு நிதி ஒதுக்கியுள்ளது. இவ்விழாவிற்கு, ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20 முதலிய ரகங்களைப் பயிரிடக்கூடிய எல்லா உழவர் பெருமக்களும் அழைக்கப்பட்டனர்.

டிசம்பர் 15-ஆம் நாளுக்குப் பிறகு இம்மூன்று மாவட்டங்களிலும் உள்ள எல்லாச் சாலை

களிலும், முக்கியமான இடங்களிலும் ஐ.ஆர். 8, ஐ. ஆர் 20 ஆகிய ரகங்களைப் பயிரிடத் தூண்டக் கூடிய விளம்பர அட்டைகள் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு 10 விளம்பர அட்டைகள் வீதம் தொங்கவிடப்பட்டிருந்தன. சனவரித் திங்கள் இரண்டாம் வாரத்தில் அடியுரம் இடவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும் விளம்பர அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அதுபோலவே பிப்ரவரி முதல் வாரத்தில் மேல் உரம் இடுவது பற்றிய விளம்பர அட்டைகள் மூன்று மாவட்டத்திலும் தொங்கவிடப்படும்.

இத்திட்டம் பற்றியும், சாகுபடி முறைகள் பற்றியும், வானொலி, பத்திரிகைகள், துண்டு வெளியீடுகள், சிறுபுத்தகங்கள் மூலமாக அவ்வப்பொழுது உழவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

தேவைப் பொருட்கள்

நவரைத் திட்டத்தில் பங்கு பெறும் எல்லா உழவர்களுக்கும் தேவையான விதைகளையும், பூச்சி பூஞ்சாள மருந்துகளையும் வேளாண்மைத் துறை வழங்கி வருகிறது. 4.82 இலட்சம் ஏக்கருக்கும் தேவையான இரசாயன உரங்களைத் தேவையான பொழுது; தேவையான அளவில் கூட்டுறவுச் சங்கங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக வழங்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்துள்ளது. அடி உரமிட 17: 17: 17 அல்லது 16: 16: 16 அல்லது 15: 15: 15: அல்லது 16 : 20 : 0 (பொட்டாஷ் உரத்துடன்) போன்ற காம்ப்ளக்ஸ் உரங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலுரமிட யூரியா வழங்கப்படும்.

வேளாண்மைத் துறையிலுள்ள எல்லா தூவான்களும் தெளிப்பான்களும் பழுது பார்க்கப்பட்டு, பயிர்ப் பாதுகாப்புப் பணிகளுக்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளன. அண்மையில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள ஒரு விளக்கிக் காட்டும் கண்காணிக்கு(மேஸ்திரி) தூவான்களையும், தெளிப்பான்களையும், பழுது பார்த்துச் செப்பனிடுவது பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. துவான்கள், தெளிப்பான்கள் பழுது பார்ப்பதற்கான கருவிகள் அடங்கிய பெட்டி வாங்கவும், உதிரிப் பாகங்கள் வாங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



[illegible] அமைச்சர் தென்னங்கன்று நடுகிறார்



உணவு அமைச்சர் தென்னங்கன்று நடுகிறார்

கடன் உதவி

நவரைத் திட்டத்தின் கீழ் நெல் சாகுபடி செய்யவிருக்கும் உழவர்களுக்கு 1,150 இலட்சம் ரூபாய் குறுகிய காலக் கடன் உதவி தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இக்கடன் உதவியைக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களும், வணிக வங்கிகளும் வழங்கிட முன்வந்துள்ளன.

இத் திட்டத்தின் கீழ் உழவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக இந்திய அரசு 70 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இத் தொகையை உழவர்கள் விதை, இரசாயன உரம், பூச்சிப் பூஞ்சாள மருந்து ஆகியவைகளை வாங்குவதற்காக ஏக்கருக்கு ரூ. 250 வீதம், ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் வழங்கப்பட்டுவருகிறது.

இறைவைச் சிறுதானியச் சாகுபடித் திட்டம்

கடும் விரைவு பின்பருவத் திட்டத்தின் இரண்டாவது அங்கமாகக் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 103 ஊராட்சி ஒன்றியங்களில் 'சி. எஸ். எச். 1', 'சி. எஸ். எச். 3', 'சொர்ணு', 'கோ. 18', 'கே. 4', 'கோ. 12', 'கோ. 4' ஆகிய சோள ரகங்களையும், 'எச். பி. 1' 'எச். பி. 3', 'எச். பி. 4' ஆகிய கம்பு ரகங்களையும், 'கோ. 7', 'கோ. 8', 'சாரதா' 'கே 2' ஆகிய கேழ்வரகு ரகங்களையும் சனவரி 15 முதல் மார்ச்சு முடிய உள்ள காலத்தில் இறைவையாகப் பயிரிடத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை தீவிரமாகச் செயலாற்றி வருகிறது. மேற்கூறிய 6 மாவட்டங்களிலும் பின்கண்டுள்ள பரப்பளவில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம். | பரப்பு. (ஏக்கர்). |
|---|---|
| கோயம்புத்தூர் .. | 1,50,000 |
| சேலம் .. .. | 60,000 |
| மதுரை .. .. | 67,500 |
| திருச்சி .. .. | 65,000 |
| திருநெல்வேலி .. | 52,000 |
| தருமபுரி .. .. | 19,000 |
| | 4,13,500 |

இப்பரப்பளவில் இறைவைச் சோளம், கம்பு, கேழ்வரகு ஆகியவை கீழ்க்கண்ட அளவில் பயிரிடப்படும்.

| | |
|---|---|
| இறைவைச் சோளம். | 2,14,250 |
| இறைவைக் கம்பு. | 91,750 |
| இறைவைக் கேழ்வரகு | 1,07,500 |
| மொத்தம் | 4,13,500 |

இறைவைச் சிறுதானியங்களை மேற்கண்ட பரப்பில் பயிரிடுவதற்கு நெல்லிற்குக் குறிப்பிட்டது போலவே விளம்பரத் திட்டமும், விதை, உரம், மருந்துகள், கடன்தொகை முதலிய தேவைப் பொருட்கள் வழங்கும் திட்டமும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்திய அரசு ஒதுக்கியுள்ள 30 இலட்சம் ரூபாயை ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம், ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக உழவர் பெருமக்களுக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

### பருப்பு உற்பத்தியைப் பெருக்கும் திட்டம்

கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின் மூன்றாவது அங்கமாக, தஞ்சை மாவட்டத்திலும், சிதம்பரம் வட்டத்திலும் நெல் வயல்களில் உளுந்து, பச்சைப் பயறு ஆகிய பருப்பு வகைப் பயிர்களைப் பின்கண்ட பரப்பளவில் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

| | (இலட்சம் ஏக்கர்) |
|---|---|
| தஞ்சை மாவட்டம் | 5.5 |
| சிதம்பரம் வட்டம் | 0.6 |
| மொத்தம் | 6.1 |

பருப்பு உற்பத்தியைப் பெருக்குவதற்காக மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்தில் ஈடுபடவிருக்கும் உழவர் பெருமக்களுக்கும் தமிழ்நாடு அரசு பல உதவிகளைச் செய்யவிருக்கிறது.

இவ்வாறு பல்வேறு வகையிலும் கடும் விரைவு பின் பருவத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்குத் தமிழ்நாடு அரசு உதவி வருவதால், இத்திட்டத்தின் மூலம் வழக்கமாகக் கிடைப்பதற்கும் மேலாக உணவு தானியம் பெருமளவில் உற்பத்தியாகும் என்று உறுதியாக நம்பலாம். இத்திட்டத்தின் மூலம் உழவர்களின் வருவாய் உயர்ந்து, வாழ்வு வளம் பெறும் என்பதிலும் ஐயமில்லை.

— ஆர். எம்.




ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-2.

கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா
டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம்
பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்

# கோ-ஆப்டெக்ஸ்

குறளகம், தி. நகர், லஸ், மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி.



CriterionCO2753TM A

# நல்லது கேட்கின் நலமுறச் சொல்வோம்!

இந்தியாவில் பசுமைப் புரட்சியில் தமிழகத்திற்கு முதலிடம்!

எல்லா
மாநிலங்களுக்கும்
வழிகாட்டியாக அமைந்துள்ள
**மாநிலத் திட்டக் குழுவின் பணிகள்**

*எல்லாச்*
சிற்றூர்களுக்கும்
**சாலை**
இணைப்புகள்!

இவைகளால் உருவாகும் நன்மையினும் பெரிது நாம் அமைத்திடும் அளவான குடும்பமே!

திட்டமிட்ட குடும்பமே நாட்டின் நலம் வளர்க்கும்!

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!

**இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!**

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.

# நல் வாழ்வு பொங்கிட..




நல்வாழ்வு
பொங்கிட...

# பதிப்புரை

மக்களிடையே தொத்துநோய்கள் ஏற்படா வண்ணம் தடுப்பதும், நோய்களைத் தீர்த்துத் துன்பங்களைக் குறைப்பதும், அரசாங்கத்தின் அடிப்படையான கடமைகள். அரசு என்பது தோன்றிய நாளிலிருந்தே இருந்து வரும் கடமைகள் இவை.

இந்த நாளில் நோயில்லாத நிலைமட்டும் நிறை வாழ்வு தந்துவிடுவதில்லை. மக்களின் வலிமையும் ஆற்றலும் வளரவேண்டும். நல்வாழ்வுக்குரிய வசதிகள் பெருகவேண்டும். மக்கள் தொகை பெருகுவதற்கேற்ப வளர்ந்து வரும் பிரச்சினைகளையும் அல்லல்களையும் விஞ்ஞானம், ஆராய்ச்சி இவைகள் துணைகொண்டு நீக்க வேண்டும். பட்டி தொட்டிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கும் சிறந்த மருத்துவ வசதி, குடிநீர், அளவான குடும்ப முறை, ஊட்ட உணவு இவை அனைத்தும் நிரம்பப் பெற்றால்தான் நல்வாழ்வு பொங்கிடும் நிலையைக் காண முடியும். இந்த நிலையைக் காணவே, தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவில் நல்வாழ்வு பற்றிய செயல் அணி பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்டத்தைத் தயாரித்து அளித்துள்ளது.

நல்வாழ்வுத் திட்டங்கள் அனைத்துக்கும் பக்கத் துணையாக மருத்துவக் கல்வி மேம்பாடு, ஆராய்ச்சிப் பணிகள் ஆகியவை குறித்தும் குழு தனது பரிந்துரைகளைத் தெரிவித்துள்ளது. நகரங்களில் சுற்றுப்புறத் தூய்மை கெடாமல் பாதுகாத்தல், உணவுக் கலப்படத் தடுப்பு ஆகியவைகளுக்கும் ஏற்ற செயல் முறைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தொலை நோக்குத் திட்டத்தில் சித்த

மருத்துவக் கல்வி, இந்திய மருத்துவமுறை வசதிகள் ஏற்ற இடத்தைப் பெற்றுள்ளன. பல்வேறு வகைக் கல்வி நிறுவனங்களிலும், ஊட்ட உணவு பற்றிய போதனை பாடத் திட்டத்தில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்க ஒன்று.

நல்வாழ்வு, ஊட்ட உணவு, குடும்ப நலம், சுற்றுப்புறத் துப்புரவு பற்றிய செயல் அணியின் பன்னிரண்டு ஆண்டுத் தொலை நோக்குத் திட்ட அறிக்கையைத் தொகுத்து "நல்வாழ்வு பொங்கிட. . ." என்னும் தலைப்பில் இவ்வெளியீடு தயாரிக்கப் பெற்றுள்ளது. தமிழரசு 16–1–1973 இதழுடன் இலவச இணைப்பாக வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

சென்னை-9, செய்தி—மக்கள் தொடர்புத்துறை,
16—1—73. தமிழ்நாடு அரசு.

# நல்வாழ்வு பொங்கிட . . .

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவில் நல்வாழ்வு, ஊட்ட உணவு, குடும்ப நலம், சுற்றுப்புறத் துப்புரவு பற்றிய செயல் அணி 1971 அக்டோபர் 21-ல் அமைக்கப்பட்டது. இச் செயல் அணியின் தலைவர் டாக்டர் மால்கம் ஆதி சேஷய்யா 1972-லிருந்து 1984 வரை உள்ள காலத்துக்கான 12 ஆண்டுத் தொலை நோக்குத் திட்ட அறிக்கையை 1972 ஆகஸ்ட் 28-ஆம் நாளன்று திட்டக்குழுவின் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் அளித்தார். கிளை மருத்துவ நிலையங்களைச் சிறு மருத்துவ நிலையங்களாக மாற்று வதன் மூலமும் அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, பணியை மேம்படுத்துவது மூலமும் கிராம மக்கள் அனைவருக் கும் நல்வாழ்வு கிட்டச் செய்யவேண்டும் என்று செயல் அணி தனது தொலை நோக்குத் திட்ட அறிக்கையில் எடுத்துக் கூறியிருக்கிறது.

இந்திய மருத்துவ முறையில் சித்த, யுனானி, ஆயுர்வேத பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மருத்துவர்களுக்கும் மற்றும் ஓமியோபதி மருத்துவர்களுக்கும் இன்னும் பயனுள்ள முறையில் உதவிகள் அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருங்கால நல்வாழ்வுக் காப்பீட்டுக்கான அரசாங்கத் திட்டத் துக்கு முன்னோடியாக நல்வாழ்வு வரி (செஸ்) விதிப்பது பற்றியும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவக் கல்வியில் மூன்றாண்டுச் சான்றிதழ் படிப்பு முறை குறித்து, தேசீய அபிவிருத்திக் கவுன்சில் தெரிவித்த யோசனையைச் செயல் அணி பரிசீலித்து, இந்தக் குறுகிய காலப் படிப்புக்குத் தமிழகத்தில் தேவை இருக்காது என்றும் ஐந்தாவது திட்ட நடுவில் கிராமப் பகுதிகள் அனைத்திலும் சிறு மருத்துவ மனைகளை நிருவகிக்கப் போதிய மருத்துவர்கள் கிடைத்து விடுவார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

தொத்து நோய் ஒழிப்பு, புற்றுநோய்த் தடுப்பு, தொழு நோயாளிகளுக்கு மறுவாழ்வு ஆகிய வகைகளில் முனைப்பான செயல் முறைகள் தேவை. நல்வாழ்வுக்கான திட்டங்கள் அனைத்துக்கும் பக்கபலமாக, சென்னையில் உயர்தர மருத்துவ

ஆராய்ச்சி நிலேயம், மற்ருெரு சித்த மருத்துவக் கல்லூரி, ஒரு ஓமியோபதி கல்லூரி ஆகியவைகளேத் தொடங்க வேண்டும் என்ற திட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## குடும்ப நலப்பணி

குடும்ப நலத் திட்டங்களேப் பொறுத்த வரை, சிகிச்சை முறைகளேப் போலவே தெளிவும் விளக்கமும் அளிக்கும் பணி களும் மிக முக்கியமானவை என்று செயல் அணி வலி யுறுத்தியிருக்கின்றது. மாநிலத்தில் பிறப்பு விகிதம் 1972-ல் ஆயிரத்துக்கு 32 என்றிருப்பதை 1979-ல் ஆயிரத்துக்கு 25 ஆகக் குறைக்கவும் 1984-ல் 22 என்ற அளவுக்குக் குறைக்க வும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. குடும்ப நலப் பணிகளில் மலேத் தோட்ட நிருவாகிகள் உள்பட தனியார் துறையினர் பங்கு பெறுமாறு செய்யவேண்டும் என்று பரிந்துரைக்கப் பட்டுள்ளது. குடும்ப நல வழிகளே மேற்கொள்வோருக்கு ஊக்கமளிக்க, பல செயல் முறைகளும் தெரிவிக்கப்பட் டுள்ளன.

ஊட்ட உணவு வகையில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவர்கள் பள்ளிப் பருவத்துக்கு முற்பட்ட குழந் தைகள், சூலுற்ற தாய்மார்கள், கைக்குழந்தை உள்ள தாய் மார்கள் ஆகியோரே ஆவர். குழந்தைகள் காப்பகங்கள் எண்ணிக்கை 12,500 என்ற அளவுக்கு உயர்த்தப்படும். பேறு கால மருத்துவ மனேகள் போன்றவைகளிலும் இப் பணிக்கு இடமளிக்கப்படும் என்று தொலே நோக்குத் திட்ட அறிக்கை கூறுகின்றது. பள்ளி, கல்லூரி, பள்ளிக்குப் புறம் பான கல்விக் கூடங்கள் அனேத்திலும் ஊட்ட உணவு பற்றிய கல்வி இடம் பெறும். நல்வாழ்வு, குடும்ப நலம், ஊட்ட உணவு ஆகிய மூன்று வகைப் பணிகளின் நிருவாகமும் ஒருங் கிணேக்கப்பட வேண்டும் என்பதும் முக்கியமான ஒரு புதிய பரிந்துரையாகும்.

சுற்றுச் சூழ் நிலேத் துப்புரவுப் பணியில், குடிநீர் வசதி இல்லாத 4,916 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கும் திட்டங்கள் முதல் இடம் பெறவேண்டும். போதிய நீர் வசதி இல்லாமல், நோய்க்கு இடமளிக்கும் நிலேயில் உள்ள 2,230 கிராமங்களில் நல்ல குடிநீருக்கு வகை செய்ய வேண்டும். கிராமப் புறத் துப்புரவிலும் தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். எல்லா நகரங்களுக்கும் குழாய் நீர் வழங்கும் திட்டம், திட்டக் காலத்தில் நிறை வெய்தும். நகர்ப்புற வடிகால், புதை சாக்கடை வசதிப் பணிகளும் பெருமளவில் மேற்கொள்ளப்படும். நகர்ப்புறங் களில் காற்று, நீர் இவற்றின் தூய்மையைப் பாதுகாக்கவும், அங்காடிகள், உணவகங்கள், முதலியவைகளில் பல்வேறு வகையான கலப்படங்களேத் தடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நல்வாழ்வு, ஊட்டச் சத்து, குடும்ப நலம், சுற்றுப்புறத் துப்புரவு பற்றிய செயல் அணிக்கு டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைவர். இச் செயல் அணியின் மற்ற உறுப்பினர்கள் வருமாறு :

டாக்டர் வி. சண்முகசுந்தரம்,
திரு ஜே. ஏ. அம்பாசங்கர்,
திரு எஸ். கந்தப்பன்,
டாக்டர் (திருமதி) இராஜம்மாள், பி. தேவதாஸ்,
டாக்டர் ஏ. வேணுகோபால்,
டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன்,
டாக்டர் என். ஆர். ரத்னக்கண்ணன்,
டாக்டர் எஸ். ஏ. சுபான்,
பிரிகேடியர் எஸ். கேசவலு,
டாக்டர் கே. எஸ். சஞ்சீவி,
திரு கே. வெங்கடேசன்,
டாக்டர் கே. பி. சாரதி (செயலாளர்).

செயல் அணி, எட்டு முறை கூடியது. கீழ்க்கண்ட அலுவல் குழுக்களின் சிறப்பான பணியின் உதவியால் தொலை நோக்குத் திட்டத்தைத் தயாரித்து முடித்தது :

நலப் பணிகள் (டாக்டர் வேணுகோபால், டாக்டர் பாலகிருஷ்ணன், தலைவர்கள்) ;

இந்திய மருத்துவம் ஹோமியோபதி மருத்துவம், (டாக்டர் சுபான், தலைவர்) ;

மருத்துவக் கல்வி (டாக்டர் ரத்னக்கண்ணன், டாக்டர் வேணுகோபால், தலைவர்கள்) ;

குடும்ப நலம் (திரு அம்பா சங்கர், தலைவர்) ;

ஊட்ட உணவு (டாக்டர் திருமதி இராஜம்மாள் தேவதாஸ், தலைவர்) ;

சேவா நிறுவனங்கள் (Voluntary Organisations) (டாக்டர் சஞ்சீவி, தலைவர்) ;

சுற்றுப்புறத் துப்புரவு (திரு கந்தப்பன், தலைவர்) ;

செயல் அணியின் செயலாளர் டாக்டர் கே. பி. சாரதி எல்லா அலுவல் குழுக்களுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டு உழைத்து அறிக்கையைத் தயாரித்து முடிப்பதில் உதவினர்.

## மக்கள் நல்வாழ்வு

தமிழக மக்கள் நல்வாழ்வுக்கு, 1972–ஆம் ஆண்டிலிருந்து 1984–ஆம் ஆண்டு வரைக்குமான கொள்கை உலக நல்வாழ்வு நிறுவனம் (World Health Organisation) இந்தியக் குடியரசின்அரசியலமைப்பு ஆகியவைகளில்அடங்கியுள்ள மக்கள் நல்வாழ்வுக் கொள்கைகளுக்கு ஏற்ற முறையில் அமையும். உலக நல்வாழ்வு நிறுவன விதிகளில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

''நல்வாழ்வுஎன்பது உடலும், மனமும், சூழலும் நலமாக இருக்கும் நிலையே ஆகும். நோயின்மை, உடல் ஊனமின்மை மட்டும் நிறைவான நல்வாழ்வு ஆகிவிடாது. நல்வாழ்வு நிலையைப் பேணுவதிலும் மேம்படுத்துவதிலும் அரசின் சாதனைகள் மக்கள் நல்வாழ்வு நிலையை மேம்படுத்துவது, நோய்களைக் கட்டுப்படுத்துவது ஆகிய பணிகளில் பல்வேறு நாடுகளிலும் சமச்சீரற்ற நிலைமை இருப்பது மக்கள் குலத்துக்கே ஒரு பொது அபாயமாகும்''.

இந்திய அரசியலமைப்பின் நெறிமுறைக் கோட்பாடு பின்வருமாறு கூறுகிறது :

''ஆண், பெண் வேலையாளரின் உடல் நலமும், வலிமையும் பிள்ளைகளின் இளமைப் பருவமும் மிதமிஞ்சிப் பயன்படுத்தப்படலாகாது. பொருளாதார அவசியத்தால் மக்கள் தம்முடைய வயதுக்கோ அல்லது வலிமைக்கோ ஒவ்வாத



வேலைகளில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தப்படலாகாது. அரசு, தனது பொருளாதார சக்தி, வளர்ச்சி நிலை இவற்றின் அளவுக்கு உட்பட்டு முதுமை, நோய், ஊனமுற்ற நிலை ஆகிய நிலைகளில் மக்களுக்கு உதவி புரிய ஏற்பாடு செய்ய வேண்டும். நியாயமான, பண்பான வேலை வசதிகளும் கருவுற்றவர்களுக்கு உதவியும் கிடைப்பதற்கான ஏற்பாடு செய்யவேண்டும். ஊட்டச் சத்து உணவு, மக்கள் வாழ்க்கைத் தரம் இவற்றை மேம்படுத்துவதை அரசு தன் முக்கியக் கடமைகளில் ஒன்ருகக் கருத வேண்டும்''.

### அடிப்படையான உரிமை

நல்வாழ்வுக்கான வசதிகள், குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் உரிய அடிப்படை மனித உரிமை ஆகும். இவ்வகையில் செய்யப்படும் செலவு நாட்டின் பொருளாதாரக் கட்டுக்கோப்புக்கு ஒரு முதலீடு போன்றது. மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினை, மக்கள் நல்வாழ்வுக்கான திட்டமிடும் பணிக்கு ஒரு வரம்பு கட்டுவது போல ஆகிவிடுகின்றது. இன்னும் மேலான ஆரோக்கிய வசதி, அடிப்படை ஆராய்ச்சி ஆகியவைகளில் தீவிரமாக முன்னேற முடியாத நிலைமை, இந்த மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படுத்தி விடுகின்றது.

குழந்தைகள், சூலுற்ற தாய்மார்கள் ஆகியோர் மருத்துவ உதவி, ஊட்ட உணவு வசதிகளில் முதலிடம் பெறுவோர் ஆவர். இன்றைய இளைஞர்கள்தாம் நாளையப் பாட்டாளிகள். எனவே இவர்களுக்கு முதலிடம் தருவது முறையானதும் விவேகமானதும் ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்ட தேவைகளையும் நமக்குள்ள குறைந்த வசதிகளையும் கருத்தில் கொண்டு, சில அடிப்படைச் சுகாதார வசதிகள், ஊட்ட உணவு, சுற்றுப்புறத் தூய்மை ஆகியவைகளில், மக்களிடையே எவ்விதப் பாகுபாடும் வேறுபாடும் காட்டாமல் அனைவருக்கும் ஒரே சீரான வசதிகள் அளிப்பது நமது முதல் கடமை ஆகின்றது. இதற் கடுத்தபடியாக மருந்து உதவிப் பணியின் அளவும் தரமும் மேம்படுத்தப்படவேண்டும். இப்பணிக்கு-இந்தக் குறிக்கோளுக்கு சமூகத்திலிருந்தும் உதவிகள் கிடைக்கும்.

### செயல் திட்டங்கள்

தமிழ்நாட்டின் நல்வாழ்வுக் கொள்கையின் நிகர பலனாக, மக்களின் ஆரோக்கியம் மேம்படும்; குறிப்பாகக் கிராமங்கள் மட்டத்தில் ஒருங்கிணைந்த நல்வாழ்வுப் பணிகளின் பயன்கள் கிடைக்கப் பெருமல் இருக்கும் 60 சதவீத மக்கள் பயனடைவார்கள். இவ்வகையில் நிறைவேற்றப்பட வேண்டிய செயல் திட்டங்கள் பின்வருமாறு :

1. நல்வாழ்வுப் பணி, மருத்துவப் பணிஆகியவற்றை மேம்படுத்துதல்;

2. வசதி பெறாத வகையினருள் முதலிட வரிசைக் கிரமம் தந்து, ஊட்ட உணவு வசதியை மேம்படுத்தல் ;

3. குடும்பக் கட்டுப்பாட்டுக்கான இயக்கம்; இத்துடன்,

4. பெருநகரங்களிலும், நகரங்களிலும் போதிய குடி நீர்வசதி, திருப்திகரமான சுற்றுப்புறத் துப்புரவு, கிராமப் பகுதிகளில் உரிய, இயன்ற வசதிகள் உடனடியாகச் செய்தல்.

## நல்வாழ்வுப் பணிகள்

மகப்பேறு, குழந்தை நலம், குடும்ப நலம், நோய்த் தடுப்பு, நோய்ச் சிகிச்சை, ஊட்டஉணவுஉதவி ஆகியவை களுக்காகச் சிறிய அதிகச் செலவில்லாத தன்னிறைவுள்ள பல்பயன் மருத்துவ மனைகள், சிறு சுகாதார நிலையங்கள் ( Mini Health Centre ) என்ற பெயரில் தொடங்கப் பெறும். இவை ஒவ்வொன்றும் ஊராட்சிப் பகுதிக்குள் வாழும் பத்தாயிரம் பேர்களுக்குப் பயன்படக் கூடியதாக இருக்கும். இத்திட்டத்தின் கீழ் 1,000 புதிய சிறு சுகாதார



நிலையங்கள் தொடங்கவும் ஏற்கெனவே உள்ள 2,700 நிலை யங்களைச் சீரமைக்கவும் வழி செய்யப்படும். கிராமங்களில் உயர்நிலைப் பள்ளித் தேர்வு பெற்றவர்களிடையேயிருந்து 3,700 (மருந்தாளுநர்கள்) பயிற்சிக்கு எடுக்கப்பட்டுப்

பயிற்சி தரப்பட்டுக் கிராமங்களில் சிறு சுகாதார நிலையங்களில் அமர்த்தப்படுவார்கள். மருத்துவ அலுவலர்கள் மேற்பார்வையில் இவர்கள் செயல்படுவார்கள். சித்த மருத்துவப் பிரிவுகளும் சேர்க்கப்பெறும். வட்டார அளவில் தற்போதுள்ள வசதிகளை மேம்படுத்தியும் திருத்தியமைத்தும், வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற தகுதியுள்ள 374 பல்பயன் மருந்து நிலையங்கள் நிறுவப்படும். சிறு சுகாதார நிலையங்களுக்கும் 80,000-லிருந்து ஒரு இலட்சம் வரை மக்களுக்கும் இவை பயன்படும். 86 வட்டத் தலைமை மருத்துவ மனைகள் பல்பயன் மருத்துவ மனைகள் நிலைக்கு மேம்படுத்தப்படும். இவை ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவு இருக்கும்.

### மாவட்டப் பொது மருத்துவமனை

இந்த இரண்டு வகைகளுக்கும்மேல்மட்டத்தில், மாவட்டப் பொது மருத்துவமனை (District General Hospital) அமைகிறது. இது 400-லிருந்து 650 வரை படுக்கை வசதி கொண்டதாகவும் விளங்கும். இத்துடன் 20 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவு, 10 படுக்கைகள் கொண்ட ஹோமியோபதிப் பிரிவு இருக்கும். இவற்றுள் 2 மருத்துவ மனைகள், பட்டதாரி மாணவர்கள் போதனைக்குப் பயன் படுவனவாக இருக்கும். ஆண்டுக்கு மொத்தம் ஆயிரம் மாணவர்கள் இவற்றில் பயனடைவர். நாட்டு மருத்துவ முறையிலும் ஹோமியோபதி முறையிலும் 100 பேர்கள் பயிற்சி பெற வசதி இருக்கும். மருத்துவர் மக்கள் விகிதம் 1 : 3,000 என்ற நிலைக்கு உயர்த்தப்படும். மருத்துவமனைகளில் படுக்கைகளும் ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு படுக்கை என்ற அளவுக்கும் செவிலிகள், 5 படுக்கைகளுக்கு ஒரு செவிலி என்ற அளவிலும் வசதி மேம்படுத்தப்படும். உதவிச் செவிலியர், மருத்துவச்சி, இவர்கள், மக்கள் தொகையில் 1 : 5,000 என்ற அளவுக்கும், மருந்தாளுநர்கள் 1 : 10,000 என்ற அளவுக்கும் உயர்த்தப்பெறும்.

மாநில அளவிலும் மற்றும் மாவட்டப் பொது மருத்துவமனை, பல்பயன் மருத்துவமனை, பல்பயன் மருந்தகங்கள் நிலையிலும் ஆய்வுக் கூடங்கள் (Health Laboratories) நிறுவப்படும்.

### மருத்துவக் கல்வி

மருத்துவக் கல்வியைப் பல்வேறு நிலைகளிலும் மேம்படுத்திடப் புதிதாக இரண்டு மாவட்டக் கல்லூரிகள், சென்னையில் ஒரு மேல்பட்டப்படிப்பு நிலையம், ஒரு ஹோமியோபதிக் கல்லூரி, இந்திய மருத்துவக் கல்விக்கு ஏற்கெனவே உள்ள

கல்லூரியுடன் மற்ருெரு கல்லூரி ஆகியன தேவைப்படுகின்றன. மருத்துவ ஆராய்ச்சிப் பணிகள் அதிகரிக்கப்படும். இதற்காகப் போதிய வசதிகள், கருவிகள் ஏற்பாடு செய்யப்படும். சித்த மருத்துவத்தில் மேல்பட்டப்படிப்புக்கும் தொலைநோக்குத் திட்டக்காலத்தில் வகை செய்யப்படும்.




கிராமப் பகுதிகளில் மருத்துவர்கள் பற்ருக் குறை நிலையைப் போக்குவதற்காக மருத்துவத்தில் 3 ஆண்டு 'டிப்ளமா' படிப்புக் குறித்து 5-வது திட்ட அணுகுமுறையில் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டது எனினும், தமிழ்நாட்டு நிலவரத்துக்கு அது பொருத்தமானதாக இல்லை. மாநிலத்தின் மருத்துவப் பட்டதாரிகள் தற்சமயம் 10,000 ஆக இருப்பது 1981-ல் 16,000 ஆக உயரும். மூவாயிரம் மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற குறிக்கோளும் அப்போது எய்தப்பட்டுவிடும். கிராம மக்களுக்காக இன்னும் அதிக அளவில் மருத்துவர்கள் கிடைக்கச் செய்ய, அவர்கள் பரவலாகப் பணியாற்றும் நிலைமை ஏற்படுத்துவது என்பதே இங்குப் பிரச்சினையாக இருக்கும்.

### ஊட்டச் சத்துணவு

ஊட்டச் சத்துள்ள உணவுகள் வழங்கும் வகையில் குழந்தைகள் காப்பகம் மூலம், பள்ளிப் பருவத்துக்கு முற்பட்ட குழந்தைகள், சூலுற்ற தாய்மார்கள், கைக் குழந்தை உள்ள தாய்மார்கள் முதலாஞேர் பயனடைவர். குழந்தைகள் காப்பகங்களின் எண்ணிக்கை 12,500 என்ற அளவுக்கு உயர்த்தப்படும். 6 வயதுக்கு உட்பட்ட 26 இலட்சம் குழந்தைகளின் ஊட்ட உணவுத் தேவையில் குறைந்த பட்சம்

மூன்றில் ஒரு பகுதி இதன் மூலம் நிறைவு பெறும், பள்ளி களில் உணவு வழங்கும் திட்டம் தொடரும், மேலும் வலுப் படுத்தவும்படும். உயர்நிலைப் பள்ளிகளிருந்து பல்கலைக் கழ கம்வரை ஊட்டச் சத்துக் குறித்த கல்வி போதனை இருக்கும்.

## குடும்ப நலத்திட்டம்

பிறப்பு விகிதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு 32 எனத் தற்போது இருக்கும் நிலை, குடும்ப நலத்திட்டம் மூலம் 1979-ல் ஆயிரத்துக்கு 25 குழந்தைகள் என்ற நிலைக்குக் குறையும். 1984-ல் 22 என்ற அளவுக்கு இது குறைவு படும். இந்த நிலையை அடைவதற்காக 1,000-க்கு 175 என்ற அளவில் உள்ள தம்பதியரில் 58 தம்பதியர் 1979-க்



குள் அறுவைச் சிகிச்சை பெறுவர். 1984-க்குள் மேலும் 50 என்ற அளவில் அறுவைச் சிகிச்சை பெறுவர். 'லூப்' பயன் படுத்துவோர், 1972-ல் ஆயிரத்துக்கு 1·4 பேர் என்றிருப் பது 1979-ல் 3 பேராகவும் 1984-ல் 5 பேராகவும் உயரும். கருத்தடைச் சாதனங்கள் பயன்படுத்துவோர் 1972-ல் 1·7 லிருந்து 1979-ல் 15பேராகவும் 1984-ல் 23 ஆகவும் உயரும். ஆயிரம் மக்கள் தொகையில் 12 பேர்களுக்கு அறுவைச்

சிகிச்சை, 4 பேர்களுக்கு லூப், 4 பேர்களுக்கு இதர கருத்தடை முறைகள் என்ற ''கணக்கு விகிதம்'' செயல்படும் போது, தமிழகத்தில் பிறப்பு விகிதக் குறைப்புக் குறிக்கோள் அளவு 1979-ல் நிறைவெய்தும் என்று கருதப்படுகிறது. பள்ளியிலும் வெளியிலும் போதனை, மற்றும் வானொலி, திரைப்படம், சுவரொட்டிகள், இதர சாதனங்களைப் பயன்படுத்தி அறுவைச் சிகிச்சை சம்பந்தமான பயத்தைப் போக்கி, சிறு குடும்பமே சீரான வாழ்வுக்கு வழி என்பதை மக்களுக்கு நல்ல முறையில் உணர்த்த முடியும் என்று நம்பப்படுகிறது. மக்கள் தொகை பற்றிய கல்வி, பாடத் திட்டங்களில் இடம் பெறும்.

## மருந்துகள் உற்பத்தி

மருந்து வகைகளின் உற்பத்தி தற்போதைய ரூ. 12 கோடி அளவிலிருந்து ரூ. 24 கோடிக்கு உயர்த்தப்படும். தடுப்பு மருந்துகள் உற்பத்திக்காக, கிண்டி அரசர் நிறுவனத்தில் (King Institute) மேம்பாட்டுப் பணிகளும், நவீன உற்பத்தி முறைகளும் மேற்கொள்ளப்படும். உலகச் சுகாதார நிறுவனம் விதித்துள்ள விதி முறைகளுக்கு ஏற்ற வகையில் இதன் உற்பத்தித் தரங்கள் அமையும்.

மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலம், ஊட்ட உணவு நிர்வாகப் பணிகளை இணைத்துத் தனியாக நல்வாழ்வுத் துறை அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிச் செயலாளர், இயக்குநர், மூன்று பிரிவுகளுக்கும் மூன்று கூட்டு இயக்குநர்கள் உள்ள அமைப்பாக இது இருக்கவேண்டும் என்பதும் எண்ணமாகும்.

## குடிநீர் வழங்கல்

எல்லா நகரப் பகுதிகளிலுமாக 70 சதவிகிதத்துக்கு மேற்பட்ட பேர்களுக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 562 நகர்களில் (Towns) இவ்வகையில் நடைபெற்று வரும் வேலைகள் 1977-க்குள் நிறைவெய்தும். மாநிலத்தில் கிராமப் பகுதிகளில் எல்லா மக்களுக்கும் குடிநீர் வசதி 1975-க்குள் ஏற்படுத்தப்படும். எவ்விதமான நீர் வரவு மார்க்கமும் இல்லாத 4,916 கிராமங்களுக்கும், சிலவகை நோய்கள் உள்ள 2,330 கிராமங்களுக்கும், போதுமான குடிநீர் வசதி இல்லாத 11,814 கிராமங்களுக்கும் நீர் வழங்கும் பணிகள் ஐந்தாம் திட்ட முடிவில் நிறைவெய்தும். தொலை நோக்குத் திட்டக் காலத்தின் மீதமுள்ள ஆண்டுகளில், கிராமக் குடிநீர் வசதியை மேலும் தூய்மையுள்ளதாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

புதை சாக்கடை வசதி இல்லாத 722 நகரங்களில் ஒரு பகுதிக்கு ஐந்தாம் திட்டக் காலத்தில் புதை சாக்கடை வசதி செய்யப்படும். மற்ற நகரங்களுக்கு ஆறுவது திட்டக் காலத்தில் இவ்வசதி செய்து முடிக்கப்படும். கிராமப் பகுதிகளில் சுகாதாரக் கழிவிடங்கள் அமைக்கவும் தொலைநோக்குத் திட்




டக் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கழிவு நீரைப் பயன்படுத்தவும் வழி வகை செய்யப்படும். குடிநீர், பாசன நீர், தொழில் தேவைக்கான நீர்வகையில் நீர்வளப் பாதுகாப்பு, பயன்பாடு பணிகளை மேற்கொள்ள குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் நீர் நிர்வாக 'செல்' ஒன்று அமைக்கப்படும். நீர் அசுத்தப்படுத்தப்படும் நிலைமைகளைத் தடுக்க மற்றொரு அமைப்பும் ஏற்படுத்தப்படும்.

## ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்

தொத்து நோய்த் தடுப்பு, அரசாங்கத்தின் முக்கியக் கடமைகளில் ஒன்று. அரசாங்கம் என்பது தோன்றிய நாளிலிருந்தே இந்தப் பணி இருந்து வருகின்றது. இந்தியாவிலும்

தமிழகத்திலும் ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் மக்கள் நல்வாழ்வுக்குத் தொடர்பான புதிய பணிகள் மேற்கொள்ளப் பட்டன. அவை :

மக்கள் உடல்நல மேம்பாடு கருதி அரசு அளிக்கும் உதவிகள், ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ்ப் படிப்படியாக மக்கள் ஒவ்வொருவருக்கும் எட்டவேண்டும்.

கிராமப் பகுதிகளில் போதிய மருத்துவ வசதி இல்லாத குறையைப் போக்க அரசாங்கம் நேரடியாக அல்லது சட்ட திட்டம், உதவிகள் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

நகரங்களில் இருப்பது போலவே கிராமப் பகுதிகளிலும் சுகாதார மருத்துவ வசதிகள் அளிப்பதில் சமூகப்போக்குக்கு எதிராக நின்று சுகாதார வசதிகளைக்கிராமங்களில் ஏற்படுத்து வதில் ரஷ்ய நாட்டிற்கு அடுத்தபடியாக இந்தியாதான் முக்கிய இடம் வகிக்கின்றது. சுமார் 80 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் வரை உள்ள மக்கள் தொகுதிக்குப் பணியாற்ற ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது என்ற கருத்து முதன் முதலில் 1951-ல் தோன்றியது. இப்போது 374 நிலையங்கள் செயல்படும் நிலையில் நல்வாழ்வுப் பணிகளை மேம் படுத்தவும் விரிவாக்கவும் நடவடிக்கை அவசியமாகிறது.

## நலப்பணி நிருவாகம்

நல்வாழ்வுப் பணி நிர்வாகத்துக்கு வட்டாரம் (Block) அல்லது ஊராட்சி ஒன்றியம் அடித்தளமாகக் கருதப் பெறு கின்றது. இந்த மட்டத்தில் மொத்தம் 493 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் (Dispensaries) உள்ளன. இவற்றுள் 238 மருந்தகங்கள் கிராம மருந்தகங்களாகக் கருதப்பட்டு அரசின ரிடமிருந்து உதவி பெறுகின்றன. மற்றவை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. 493 ஊராட்சி ஒன்றியக் கிராம மருந்தகங்களில் 304 இந்திய மருத்துவ முறையைச் சேர்ந்தவை, 189 நவீன மருத்துவ மருந்தகங்கள். நகராட்சி மருந்தகங்களில் இந்திய மருத்துவ முறை மருந்தகங்கள் 57-ம், அரசினர் மருந்தகங்களில் இந்திய மருத்துவ மருந்தகங்கள் 15-ம் உள்ளன.

தமிழ் நாடு மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது வட்டாரங்கள் உள்ளன. இவற்றில் மக்கள் தொகை 80,000-லிருந்து ஒரு இலட்சம் வரை உள்ளது. சில ஒன்றியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. இரண்டு ஒன்றியங்களில் இவை ஒன்று கூட இல்லாத நிலையும் உள்ளது. இன்று 374 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள்

இருக்கின்றன. வட்டார மட்டத்தில் நல் வாழ்வுப் பணிக்கு முக்கிய அடித்தளமாக இருப்பது ஆரம்ப சுகாதார நிலையமே ஆகும். இதில் பொதுப்பிரிவு, குடும்ப நலப் பிரிவு, என இரண்டு பிரிவுகள் உள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களுடன் துணை-மையங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கிளைப் பிரிவுகள் சுமார் 10,000 மக்களுக்குப் பயனளிப்பவை.




ஒவ்வொரு மாவட்டத்திலும் 6-லிருந்து 8-வரை என்ற முறையில் மாநிலத்தில் மொத்தம் 86 வட்டத் தலைமை மருத்துவ மனைகள் உள்ளன. இந்த மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் நாள் ஒன்றுக்குச் சுமார் 300 பேர் சிகிச்சை பெறும் ‘புற நோயாளர்’ பிரிவும், தங்கிச் சிகிச்சை பெறும் வசதிக்கு 90 வரை படுக்கை வசதிகளும் உள்ளன. சில மருத்துவ மனைகளில் இந்தப் படுக்கை வசதி குறைவாக இருப்பதும் உண்டு.

மேல் மட்டத்தில் 13 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் இருக்கின்றன. நாள் ஒன்றுக்குச் சுமார் 1,000 பேர் வந்து சிகிச்சை பெறும் புற நோயாளி (‘அவுட் பேஷண்ட்’) பிரிவு 150-லிருந்து 500 வரை படுக்கை வசதி இவற்றில் உள்ளன. 10 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவும் உள்ளன. இந்த மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் குடும்ப நல நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட மருத்துவ அலுவலருக்கு, மருத்துவம் சம்பந்தப்பட்ட பணிகள் தவிர, ஆரம்ப சுகாதார நிலையங்கள் தவிர்த்த, மாவட்டத்தின் மற்ற மருத்துவ நிறுவனங்

களை நிருவகிக்கும் பொறுப்பும் உண்டு. இந்த இரு வகைப் பணிகள் பொறுப்பையும் ஏற்று நிருவகிப்பதில் பல சங்கடங்கள் இருந்து வருகின்றன.

### அறிஞர் அண்ணு இந்திய மருத்துவமனை

சென்னை மாநகரில் அறிஞர் அண்ணு அரசினர் இந்திய மருத்துவ மனை 100 படுக்கை வசதி கொண்டது. சித்தர், ஆயுர்வேதம், யூனுனி முறைகள் இதில் உள்ளன. மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் எல்லா நிலையங்களிலும்




சிகிச்சை வசதிகள் குறைவாகவே இருந்து வருகின்றன. இந்திய மருத்துவ முறையும் அலோபதி மருத்துவ முறையும் தற்போது முற்றிலும் தனித்தனியாக இயங்குகின்றன. இவற்றிடையே இணக்கமான செயல் முறை உருவாவது அவசியமாகும்.

### தொழிலாளர் நல்வாழ்வு இன்சூரன்ஸ்

தொழிலாளர்களுக்கான அரசாங்கக் காப்பீட்டுக்கு (இன்சூரன்சுக்கு) 1958-ஆம் ஆண்டின் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இன்சூரன்ஸ் திட்டம் தமிழகத்தில் 1955-ல் தொடங்கப்பட்டது. தொழிலாளர்களும் நிர்வாகிகளும் இத்திட்டத்துக்கு, வரையறுக்கப்பட்ட விகிதத்தில் பணம் அளிக்கிறுர்கள். மருத்துவச் செலவுகள் வகையில் தமிழ்நாடு அரசும் பணம் போடுகிறது. 20 பேர்களுக்கு மேற்

பட்ட நபர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டுள்ள தொழிற் சாலைகளுக்கு இத்திட்டம் பொருந்தும். மாதம் ரூபாய் 500 சம்பளத்துக்கு மேற்படாதவர்கள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகிறார்கள்.




மாநிலத்தில் தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்சூரன்ஸ் மருத்துவ மனைகள் மூன்று உள்ளன. மருந்தகங்கள் 100; படுக்கைகள் 1918. இத்திட்டத்தின் மூலம் இன்சூர் செய்யப்பட்ட தொழிலாளர்களும் அவர்கள் குடும்பத்தினருமாக 3,94,250 பேர் பயனடைகின்றனர்.

## மலேரியா ஒழிப்பு

மலேரியாக் கட்டுப்பாடு திட்டம் மாநிலத்தில் 1952-ல் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், நாளாவட்டத்தில் டி. டி. டி மருந்துப் பிரயோகத்தைத் தாங்கும் சக்தி கொசுக்களிடம் அதிகரித்துவிடவே, தீவிர முறையில் இப் பணிகளை மேற்கொள்ள, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் 1958-ல் தொடங்கப்பட்டது. மாநிலத்தில் 13 ரெவின்யூ மாவட்டங்களில், மாவட்ட நல்வாழ்வு அலுவலர் மேற்

பார்வையில் இப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆயிரம் மக்களுக்கு ஒருவர் வீதம் ஒவ்வொரு வட்டாரத்திலும் அடிப்படை நல்வாழ்வு ஊழியர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

1968-லிருந்து 1972-வரை, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் நான்கு தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புப் பிரிவுகள் செயல்பட்டன. ஒவ்வொரு பிரிவும் மூன்றரை இலட்சம் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் பணியாற்றின. இந்திய அரசாங்கம் இப்பணியைச் சீரமைக்க வகை செய்தது. அதன்படி விழுப்புரம், கடலூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், சென்னை நகரம் ஆகிய எட்டு இடங்களில் புதிய பணிப்பிரிவுகள் அமையும். ஏற்கெனவே உள்ள 4 பணிப் பிரிவுகளுடன் தலைமையிடப் பிரிவும் செயல்படும். தற்சமயம் தமிழ் நாட்டில் ஒரு கோடி 30 இலட்சம் மக்கள் யானைக் கால் சுர அபாயப் பகுதிகளில் வாழ்கிறார்கள். இந்த நோயை எதிர்த்துப் பாதுகாப்பளிப்பதே இத் திட்டத்தின் நோக்கம்.

### பெரியம்மைத் தடுப்பு

பெரியம்மைத் தடுப்புக்கான தேசியத்திட்டம் 1963-64-ல் மாநிலம் முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டது. 1966-67-ல் இது உறுதிப்பட்டு, தொடர் பணியாக இருந்துவருகிறது. பிறந்த குழந்தைகள் நூற்றுக்கு நூறு விகிதம் அம்மை குத்துவது இதில் முக்கியப் பணி. அண்டை மாநிலங்களில் பெரியம்மை அவ்வப்போது தோன்றுவது காரணமாக மறு அம்மை குத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

காலரா ஒழிப்புத் திட்டம், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு மாவட்டங்களில் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாவட்டங்கள் காலரா தோன்றக் கூடிய இடங்களாக உள்ளன. நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புப் பணி மாநிலத்தில் 1960-ல் மேற்கொள்ளப்பட்டது. விழுப்புரம், திருக்கோயிலூர், போளூர், பவானி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய ஆறு இடங்களில் பணிப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நோய் நீரின் மூலம் தோன்றிப் பரவும் நோய் ஆதலால், குடிநீர் முற்றிலும் தூய்மைப் படுத்தப்படும் நிலைமையைப் பொறுத்து இதற்கு நிலையான தீர்வு ஏற்படும்.

தொத்து நோய் பரவுவதைத் தடுக்க மாநிலத்தில் 6 மோட்டார் யூனிட்டுகள் செயல்பட்டு வருகின்றன.

காசநோய் ஒழிப்புக்காக மாநிலத்தில் பரவலான அளவில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஜி. தடுப்பு ஊசி இயக்கம் நல்ல பலன் அளித்தது. தொடர்ந்து அத்திட்டம் செயல்பட்டு



வருகிறது. மாவட்டத் தலைமை மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் காசநோய்ச் சிகிச்சை நிலையங்கள் உள்ளன. பயிற்சி நிறுவனங்களில் காசநோய்ச் சிகிச்சைப் பகுதிகள், அரசினர் நடத்தும் காசநோய்ச் சிகிச்சை சானடோரியம், தனியார் நடத்தும் நிறுவனங்கள் ஆகியனவும் குறிப்பிடத்தக்கவை. காசநோய்க்கு வீட்டில் இருந்தபடியே சிகிச்சை பெறுவது நல்ல முறை என்று இப்போது வலியுறுத்தப்படுகின்றது.

மாநிலத்தில் தொழுநோய் ஒழிப்புப் பணிகளில் குறிப்பிடத்தக்கவை பின் வருமாறு :

- திருக்கோவிலூர் தொழுநோய்ச் சிகிச்சை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தொழுநோய்ச் சிகிச்சைப் பிரிவுகள், தொழுநோய்ச் சிகிச்சை உதவி நிலையங்கள் எஸ். இ. டி. நிலையங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்குப் பிச்சைக்காரர் மறு வாழ்வுத் திட்டம் நல்ல முறையில் பயனளித்திருக்கிறது. நோய் ஒழிப்புடன் மறு வாழ்வும் இதில் இணைந்துள்ளது.

புற்று நோய்ச் சிகிச்சை வகையில் முக்கியமான அரசினர் மருத்துவ மனைகளில் கதிரியக்க சிகிச்சை, அறுவைச் சிகிச்சை முறை, செமோதெரபி முதலியன இருந்து வருகின்றன.



காஞ்சிபுரத்தில் அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிறுவனம், புற்றுநோய் ஒழிப்புக்காக அரசினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. புற்றுநோய் அறிகுறிகளைத் துவக்க நிலையிலேயே கண்டறிவதில் இதன் பணி முக்கியமானது.

## மருத்துவக் கல்வி ஆராய்ச்சி

தமிழகத்தில் உள்ள 8 மருத்துவக் கல்லூரிகளிலுமாக ஆண்டு தோறும் 1015 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். 1972-லிருந்து ஆண்டுக்குப் பட்டம் பெறுவோர் ஆயிரம் என்ற நிலை வந்துவிடும். போதனை ஆராய்ச்சிப்பணிகளை மேம்படுத்திக் கீழ்க்கண்ட 8 துறைகள் உயர்வு (அப்கிரேடு), செய்யப்பட்டுள்ளன.

1. உடற்கூறு இயல் நிலையம், சென்னை மருத்துவக் கல்லூரி,

2. உயிரியல் நிலையம், சென்னை மருத்துவக் கல்லூரி,

3. கிருமியியல் நிலையம், சென்னை மருத்துவக் கல்லூரி,

4. கர்ப்பாசய இயல் நிலையம், சென்னை மகப்பேறு மருத்துவ மனை,

5. கதிரியக்க நிலையம், அரசினர் பொது மருத்துவமனை, சென்னை,

6. குழந்தை நல மருத்துவ மனை, சென்னை,

7. மேகநோய் மருத்துவப் பிரிவு, அரசினர் பொது மருத்துவமனை, சென்னை,

8. காது, மூக்கு, தொண்டை நோய்கள் சிகிச்சை நிலையம், அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.

பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவ முறைக் கல்லூரியில் பி. ஐ. எம். பட்டப்படிப்புக்காக ஆண்டுக்கு 30 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். சித்த மருத்துவச் சிகிச்சை வகையில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும் உள்ளது.

தற்போதைய மருத்துவக் கல்வி முறையில் உள்ள குறை பாடுகள் பின் வருமாறு :

1. பட்டப்புகுமுக வகுப்பை அடையுமுன்பாக மாணவர் களின் பள்ளிக் கல்வித்தரம் மேம்படுத்தப்பட வேண்டும்.

2. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் போதிய அளவில் இல்லாமலும், ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் மிக அதிகமாகவும் இருக்கும் நிலை.

3. ஆங்கிலத்தில் போதிய அறிவு இல்லாத நிலையைப் போக்க, தனிப்பயிற்சி வகுப்புகள் அவசியம்.

4. திறமையானவர்களை ஈர்க்க இயலாத நிலையில் ஆசிரியர் சம்பள விகிதம் குறைவாக இருப்பது.

## குடும்ப நலப்பணிகள்

தமிழ்நாட்டில் 1971-72-ஆம் ஆண்டில் குடும்பக் கட்டுப் பாடு பணிக்காக ரூபாய் 570 இலட்சம் செலவிடப்பட்டது. மக்கள் நல்வாழ்வுப் பணிக்கான மொத்தச் செலவில் இது 25 சதவிகிதம் ஆகும். மாநில மக்கள் தொகையில் சரிபாதிப் பேர் 15-50 வயதுத் தொகுதியினர். தாய்மை அடையக்

கூடிய நிலையில் உள்ள பெண்கள் (15-45) வயது, மொத்த மக்கள் தொகையில் 25 சதவிகிதம் ஆவர். குடும்பக் கட்டுப்பாட்டுக்காக, அடிக்கடி குழந்தைகள் பிறப்பதைத் தவிர்க்க டையாபிரம், நுரை மாத்திரைகள், லூப், கருத் தடை மாத்திரை, அறுவைச் சிகிச்சை முறை முதலியன கையாளப்படுகின்றன. இதுவரை 12 இலட்சம்பேர் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர்.



மாநில மக்களில் ஆயிரம் பேர் கொண்ட தொகுதியை எடுத்துக் கொண்டால் அதில் போதிய இளமையுள்ள தம் பதியர் குறைந்த பட்சம் 135 உள்ளனர். இதில் 21 தம்பதி யர்க்குக் குழந்தைகள் இல்லை. 25 தம்பதியர்க்கு ஒரு குழந்தையும், 27 தம்பதியர்க்கு 2 குழந்தைகளும், 62 தம்பதியர்க்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தை களும் இருக்கின்றன. இதில் கடைசியாகக் குறிப்பிட்ட பிரிவினருக்குத் தான் அறுவைச் சிகிச்சை முறை முக்கியமாக வலியுறுத்தப்படுகிறது. கருச்சிதைப்பு முறையும் இப்போது அனுமதிக்கப்பட்ட ஒன்று. ஆகையால் பிறப்பைத் தவிர்ப் பதில் அதுவும் பயன்படும்.

### உணவுச் செலவு 79 காசு

மக்களின் உணவு ஊட்டச் சத்துநிலை குறித்துத் தேசிய மாதிரி சர்வே ஒன்று மேற்கொள்ளப்பட்டது. தமிழகத்தில் 55 சதவிகித குடும்பங்கள் உணவுக்காக நபர் ஒன்றுக்கு 79 காசுக்கும் குறைவாகவே செலவிடும் நிலை இருப்பதாக அதில் தெரிய வந்தது. மக்களுக்கு வேண்டிய கலோரி அளவை, மிக மலிவான உணவு வகைகளை மேற்கொண்டாலும்கூட, இந்தச் செலவு அளவிலிருந்து பெற இயலாது.

மற்றும் **40,000** பள்ளிப் பிள்ளைகளை மருத்துவ முறையில் பரிசோதித்ததில், அவர்களில் **36** சதவிகிதம் பேர் ஊட்ட உணவுக் குறைபாட்டுக்கு உள்ளானவர்கள் என்று தெரிய வந்தது. சூலுற்ற தாய்மார்கள், கைக்குழந்தை உள்ள தாய்மார்கள் பெருமளவில் இரத்தச் சோகைக்கு உள்ளானவர்கள் என்று தெரிய வந்துள்ளது.

### குடிநீர் வழங்கல்

சென்னை மாநகரில் முறையாகக் குடிநீர் வழங்கும் பணி **1870-ல்** தொடங்கியது. புழலேரியிலிருந்து கீழ்ப்பாக்கத்



துக்கு நீர் கொணர்ந்து வழங்கும் பணிகள் விரிவினை பெற்றது. பல ஆண்டுகளாகச் சென்னை மாநகரத்துக்கு நாள் ஒன்றுக்கு நீர் வழங்கும் அளவு 4.5 கோடி காலன் ஆகும். கொள்ளிட நீரை வீராணத்திலிருந்து தென் சென்னைக்குக் கொண்டுவந்து வழங்குவதற்கான திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழகத்தின் நகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணியைப் பொறுத்தவரை 740 நகரங்களைச் சேர்ந்த 89 இலட்சம் மக்களுக்கு, பல்வேறு அளவுகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

மாநிலத்தில் உள்ள நீர் வளங்களில் 90 சதவிகிதம் ஏற்கெனவே தீவிரமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. போதிய இடைவெளி இருக்கிறதா என்பதைக் கவனிக்காமல் அதிகமான கிணறுகள் தோண்டுவதாலோ, கிணறுகளை மேலும் ஆழப்படுத்துவதாலோ அதிக நீர் கிடைத்துவிடும் என்று சொல்வதற்கில்லை.

கிராமங்களில் குடிநீர் வசதியை மேம்படுத்த ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ் பல செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. தண்ணீர் பற்றுக் குறையாக இருக்கும் பகுதிகளில் சுமார் ஒரு கோடி 20 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் 90 சதவிகிதத்தினருக்குப் பாதுகாப்பான ஒரு குடிநீர்க் கிணறுகூட இல்லை. இந்த வசதியை முழுமையாகச் செய்வதென்றால், 1963-ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கின்படி ரூபாய் 1,000 கோடி தேவைப்படும். நான்காம் திட்டக் காலத்தில் நாடு முழுவதற்கும் இவ்வகையில் ஒதுக்கீடு 150 கோடி ரூபாய். அதில் தமிழகத்துக்கு ஒதுக்கப்பட்டது ரூபாய் 9 கோடி. மூன்றாம் திட்டக் காலத்தில் மாநிலத்தில் இவ்வகையில் ஆன செலவு ரூபாய் 5.88 கோடி ஆகும். 1965 வரையில் 23,413 குடி நீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. 2411 குடி நீர்க் கிணறுகள் புதுப்பிக்கப்பட்டன. 1970 மார்ச்சில் தமிழகத்தில் மேல்மட்ட தண்ணீர் தொட்டிகள் எண்ணிக்கை 3447. கைப்பம்புகள் 22,238. சேந்து கிணறுகள் 60,049. மாநிலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இந்த வசதிகளில் ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட வசதிகளோ இருக்கின்றன. ஆயினும் இவற்றை மேம்படுத்த வேண்டியுள்ளது.

தமிழகத்தில் கிராமங்கள், குக்கிராமங்கள் மொத்த எண்ணிக்கை—58,595.

நீர் பெறுவதற்குச் சேந்து கிணறு வசதிஉள்ள ஊர்கள் —43,913.

இந்த 43,913 ஊர்களில் குடிநீருக்கு மொத்தம் பயன் படும் கிணறுகள்—66,385.

குடிநீருக்கு ஏரிகளைப் பயன்படுத்திக்கொள்ளும் கிராமங்கள் எண்ணிக்கை—4,089.



குழாய்க் கிணறு அல்லது வடிமுனைக் கிணறு மூலம் குடிநீர் பெறும் கிராமங்கள்—4,200.

குழாய் மூலம் நீர் வழங்கும் வசதி உள்ள கிராமங்கள் 1,877.

நகரங்களில் வடிகால், புதை சாக்கடை வசதியைப் பொறுத்த வரை, நகரப் பகுதிகளில் வாழும் மக்களில் சுமார் 24 சத வீதம் பேர் (37·5 இலட்சம்) தான் புதை சாக்கடை வடிகால் வசதி அடைந்திருக்கின்றனர். மாநிலத்தில் இரு மாநகரங்களிலும், 75 நகராட்சிகளிலும், 9 நகரியங்களிலும், 55 பேரூர்களிலும் நீர் வழங்கு திட்டங்கள் செயல்பட்டு

வருகின்றன. ஆனால், நீரோட்டமுள்ள புதை சாக்கடை வடிகால் வசதி, 2 மாநகரங்கள், 5 நகராட்சிகள், 4 நகரியங்கள், ஆகியவற்றில் மட்டுமே உள்ளன. இவற்றிலும் மக்களில் சிற்சில பகுதியினர் மட்டுமே பயனடைகின்றனர். சுற்றுப்புறத் துப்புரவு நிலையை மேம்படுத்த, புதைசாக்கடை வசதிகள் விரிவடைவது அவசியம். நகர்ப்புறங்களுக்கு நீர் வழங்கு, வடிகால் வசதித் திட்டங்களுக்கு நிதி வசதியைப் பொறுத்த வரை தமிழ்நாடு அரசு உத்திரவாதம் அளிக்கிறது. அவ்வப்போது கடன் எழுப்பிடத் தமிழ்நாடு நீர் வாரியத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. நீர் வழங்குத் திட்டச் செலவுகளை ஊராட்சி மன்றங்களே ஏற்க வேண்டும். கடன்களை அவை 20—25 ஆண்டுகளில் திருபபித் தர வேண்டும்.

## நகர்ப்புற வடிகால் புதை சாக்கடை வசதி தற்போதுள்ள நிலை

| புதை சாக்கடை, வடிகால் வசதி. | மாநகரங்கள். | நகரங்கள். | நகரியம். | பேரூர். | குறிப்பு. | மக்கள் தொகை இலட்சத்தில். | மொத்த மக்களில் பயனடைவோர் சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தற்போதுள்ள நிலை | 2 | 5 | 4 | .. | இவை அனைத்திலும் விரிவினையும் மேம்பாடும் தேவை. | 37·5 | 24 |
| 2. செயலாக்கப்பட்டு வரும் திட்டங்கள்— | | | | | | | |
| (அ) நிறைவேற்றப்பட்டு வரும் புதிய திட்டங்கள். | .. | 7 | .. | .. | ஷை | 8·5 | .. |
| (ஆ) ஆய்வில் உள்ள புதிய திட்டங்கள் . | .. | 16 | 1 | 6 | ஷை | .. | .. |
| (இ) நிறைவேற்றப்பட்டு வருபவற்றுள் மேம்பாட்டுப் பணிகள். | 2 | 1 | .. | .. | ஷை | .. | .. |
| (ஈ) ஆய்வில் உள்ளவற்றில் மேம்பாட்டுப் பணிகள். | .. | 2 | 1 | .. | ஷை | .. | .. |

## நகர்ப்புற குடிநீர் வழங்கும் பணி: தற்போதுள்ள நிலை

| குடிநீர் வழங்கல். | மாநகரங்கள். | நகரங்கள். | நகரியம். | பேரூர். | குறிப்பு. | மக்கள் தொகை இலட்சத்தில். | மொத்த மக்களில் பயனடைவோர் சதவிகிதம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. தற்போதுள்ள நிலை .. | 2 | 75 | 9 | 55 | இவை அனைத்திலும் விரிவினையும் மேம்பாடும் தேவை. | 89 | 53 |
| 2. செயலாக்கப்பட்டு வரும் திட்டங்கள்— | | | | | | | |
| (அ) நிறைவேற்றப்பட்டு வரும் புதிய திட்டங்கள். | .. | 10 | .. | 27 | ஷை | 8·8 | .. |
| (ஆ) ஆய்வில் உள்ள புதிய திட்டங்கள். | .. | 4 | 2 | 99 | ஷை | .. | .. |
| (இ) நிறைவேற்றப்பட்டு வருபவற்றுள் மேம்பாட்டுப் பணிகள். | 2 | 32 | 2 | 3 | ஷை | .. | .. |
| (ஈ) ஆய்வில் உள்ளவற்றில் மேம்பாட்டுப் பணிகள். | .. | 18 | 3 | 2 | ஷை | .. | .. |

## புதுப் பெயர்

மாநிலத்தில் நல்வாழ்வுப் பணியினைச் சேர்ந்த பல்வேறு அமைப்புகள் கீழ்க்கண்டவாறு புதுப் பெயர் பெறும்:—

| இப்போதுள்ள பெயர். | புதிய பெயர். |
|---|---|
| மாவட்டத் தலைமை மருத்துவமனை. | மாவட்டப் பொது மருத்துவ மனை. |
| வட்டத் தலைமை மருத்துவ மனை. | பல்/பயன் மருத்துவ மனை. |
| ஆரம்ப சுகாதார நிலையம் .. | பல் பயன் மருந்தகம் |
| மகப் பேறு, குழந்தை நலக் கிளை நிலையம். | சிறு நல்வாழ்வு நிலையம். (Mini Health Centre) |

உத்தேசிக்கப்பட்ட மாறுதல்களின்படி, பல் பயன் நிலைய மருத்துவர், நல்வாழ்வுப் பணியில் ஒரு மாத காலம் பயிற்சி பெறுவார். வட்ட மருத்துவ மனையில் அமர்த்தப் பெறும்போது மற்றொரு மாதம் மறு பயிற்சி பெறுவார். மாவட்ட மருத்துவ அலுவலராக அல்லது சிவில் சர்ஜனைகப் பதவி உயர்வு பெறும்போது முடிவாக மூன்று மாத காலப் பயிற்சி அளிக்கப் பெறுவார். இந்தப் பயிற்சிகள், நல்வாழ்வுப் பணிகள் ஒருங்கிணைப்பில் முக்கியமானதாக விளங்கும்.

மாவட்டப் பொது மருத்துவ மனைகள் ஒவ்வொன்றும் சாதாரணமாக 400-லிருந்து 650 வரை படுக்கை வசதிகள் கொண்டதாக இருக்கும். உதகை, தர்மபுரி, கன்னியாகுமரி ஆகியவைகளில் மட்டும் 300 படுக்கை வசதிகள் இருக்கும். இவற்றுள் 30 படுக்கைகள் காச நோய்ப் பிரிவிலும், 20 படுக்கைகள் தொத்து நோய்ப் பிரிவிலும் அமையும். ஐவ்வொரு மருத்துவ மனையிலும் 20 படுக்கைகள் உள்ள சித்தமருத்துவப் பிரிவும், 10 படுக்கைகள் உள்ள ஹோமியோபதிப் பிரிவும் இருக்கும். மாவட்ட நிலையில் தன்னிறைவான ஒருங்கிணைந்த பணிக்காக, மருத்துவ மனைகளில் எல்லாத் துறைகளையும் சேர்ந்த வல்லுநர்கள் இருப்பர்.

மாவட்டப் பொது மருத்துவ மனையில் போதிய ஆய்வுக் கூட வசதி, எக்ஸ்-ரே, பல்சிகிச்சைப் பிரிவு, காச நோய்ப் பிரிவு, குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரிவு, இரத்தம் செலுத்தும் பணி, ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பிரிவு, சலவை நிலையம், குளிர்பதனக் கிடங்கு, புறநோயாளர் பிரிவு, உதவி உந்து வண்டி, நூலகம், மருத்துவ அலுவலர்களுக்கு இல்லிடங்கள் முதலிய வசதிகள் இருக்கும்.

பல்-பயன் மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் 90 படுக்கைகள் வசதி இருக்கும். அதில் 10 காச நோய்ப் பிரிவாக அமையும். குடும்ப நல வகையில் சில படுக்கைகள் இருக்கும். பத்து படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவப் பிரிவும் இடம் பெறும். உதவி வண்டி, மருத்துவ வண்டிகள் இருக்கும்.

பல் பயன் நிலையங்கள் 80,000-லிருந்து ஒரு இலட்சம் வரை உள்ள மக்கள் தொகுதிக்குப் பணியாற்றும். மொத்தம் 30 படுக்கை வசதிகள் இருக்கும்.

சிறு நல்வாழ்வு நிலையம் ( Mini Health Centre ) பத்தாயிரம் மக்கள் தொகுதிக்குப் பணியாற்றும், தடுப்புப் பணி, சிகிச்சைப் பணி, ஆகியவைகளில் சிறிய தன்னடக்க மான பல் நோக்குப் பிரிவாக அது செயல்படும். சிக்கலான நோய்க் கூறுபாடுகள் பல் பயன் நிலையங்களுக்கு அனுப்பப் படும். தற்போதுள்ள துணை மையங்கள் அரசினர் மருந் தகங்கள், நகராட்சி, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் ஆகிய வைகளைக் கொண்டு சிறு நல்வாழ்வு நிலையங்கள் தொடங்கப் படும்.

### நல்வாழ்வு ஊழியர்

மலேரியா ஒழிப்புக்குத் தொடர்பான ஆரம்ப சுகாதார நிலையப் பணிகளின் அடிப்படையை வலுப்படுத்த வேண்டும் என்று இந்திய அரசாங்கம் பரிந்துரைத்திருக்கிறது. முழு மத்திய உதவி அளிப்பது பற்றியும் அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. ஆயிரம் மக்கள் கொண்ட ஒரு தொகுதிக்கு ஒரு அடிப்படை நல்வாழ்வு ஊழியர், அத்தகைய நான்கு ஊழியர் களின் வேலையை மேற்பார்வையிட ஒரு நல்வாழ்வு ஆய் வாளர் என்ற வகையில் இவர்கள் அமர்த்தப் பெற வேண்டும். சிறு நல்வாழ்வு நிலையங்களில் இவர்கள் பணி பின்வருமாறு :

மலேரியா ஒழிப்பில் கண்காணிப்பு : தொத்து நோய்க் குறிகள், நோயாளிகள் குறித்துத் தகவல் தருதல் : அம்மை குத்தல், நல்வாழ்வு குறித்து விளக்கங்கள் தரல் ; குடும்பக் கட்டுப்பாடு குறித்து எடுத்துச் சொல்லுதல்.

மாநிலத்தில் 3,199 அடிப்படை மக்கள் நல்வாழ்வு ஊழியர் பதவிகளுக்கும் (Basic Health Workers) 488 நல்வாழ்வு ஆய்வாளர் பதவிகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இதே வகையில் நகரப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகுதிக்கு ஒரு நல்வாழ்வு ஊழியர் வீதம் அமர்த்தப்பட்ட வேண்டும் என்று செயல் அணியின் அறிக்கை கூறுகின்றது. இத்திட்டத்துக்கு நடைமுறைச்

செலவு 1973—74-ல் ரூ. 157 இலட்சமும், ஐந்தாவது திட்டக் காலத்தில் ரூ. 820 இலட்சமும் ஆறுவது திட்டக் காலத்தில் ரூ. 1,572 இலட்சமும் ஆகும்.

தொத்து நோய்க் கட்டுப்பாட்டுக்கான மூன்று பணிப் பிரிவுகளுக்கும் 7 உந்துவண்டிப் பிரிவுகளும் தொடர்ந்து செயல்பட்டு வரும்.

தொழுநோய்க் கட்டுப்பாட்டுக்காக மாநிலம் முழுவதிலும் 12 ஆண்டுகளுக்குள் ஏற்பாடுகள் செய்து முடிக்க வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்ட முதல் மூன்று ஆண்டுகளில் கிராமப் பகுதிகள் இப்பணி மேற்கொள்ளப்படும். சென்னை, சுற்றுப்புறம், செங்கற்பட்டு, வடஆர்க்காடு, மாவட்டப் பகுதிகளில் ஆகியவைகளில் 5-வது திட்ட இறுதி இரண்டு ஆண்டுகள் தொழுநோய் ஒழிப்புப் பணி மேற்கொள்ளப் படும். மற்ற நகர்ப்புறங்களில் 6-வது திட்டக் காலத்தில் இப்பணி தொடரும்.

குழந்தைகளுக்கு மூவகை நோய்த் தடுப்புக்கு ஊசி போடும் பணிகள் தொலை நோக்குத் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படும். 1973—74-ல் இவ் வகையில் நடைமுறைச் செலவு ரூ. 1·28 இலட்சம்; 5-வது திட்டக் காலத்தில் செலவு ரூ. 7·09 இலட்சம்; 6-வது திட்டக் காலத்தில் செலவு ரூ. 7·09 இலட்சம் ஆகும்.

## புற்றுநோய் மருத்துவமனை

புற்றுநோய் ஒழிப்பில் முதல் கட்ட (1972—73) நடவடிக்கையாக காஞ்சிபுரம் அரசினர் தலைமை மருத்துவமனை மையத்தில், புற்றுநோய்ச் சிகிச்சைக்காக 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டப்படும். அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் நிறுவனத்துடன் இது இணைக்கப் பெறும். இந்த மருத்துவமனைதமிழ்நாடு வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையமாக நாளடைவில் மேம்படுத்தப்படும். இதற்காகப் பக்தவச்சலம் தொழில் நுணுக்கப்பள்ளி அருகே 20 ஏக்கர் நிலம் வாங்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. கட்டடச்செலவுக்கு ரூ. 21·35 இலட்சமும், இக்கால கட்டத்தில் அலுவலர் வகையில் ரூ. 5 இலட்சமும் கதிரியக்கக் கருவிகள் வாங்க மூன்று இலட்ச டாலரும் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது கட்டத்தில் (1974—76) அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய்ச் சிகிச்சை நிறுவனமும் மருத்துவமனையும் 200 படுக்கை வசதி உள்ள வட்டாரப் புற்றுநோய்ச் சிகிச்சை நிறுவனமாக மேம்படுத்தப்படும்.

இதற்கு முதலீட்டுச் செலவு ரூபாய் 12 இலட்சமும் அந்நியச் செலவாணி 1·5 இலட்சம் டாலரும் நடைமுதல் செலவு ரூ. 4 இலட்சமும் ஆகும். மூன்ருவது வளர்ச்சிக் கட்டத்தில் (1977–79) இந்த நிலையம் 300 படுக்கை வசதிகள் உள்ளதாகவும் ஆராய்ச்சி வசதிகள் நிறைந்ததாகவும் ஆகும். நான்காவது கட்டத்தில் (1980–81) மாநிலத்தில் புற்றுநோய் ஒழிப்புச் செயல் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படும். இவ்வகையில் ரூ. 20 இலட்சம் மூலதனச் செலவு ஆகும். ஐந்தாவது கட்டத்தில் (1982–83) அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய்ச் சிகிச்சை நிறுவனம் உயர்தர ஆராய்ச்சி வசதிகளும், 500 படுக்கை வசதிகளும் உள்ளதாக அமையும். ரூ. 30 இலட்சம் முதலீட்டுச் செலவும் ரூ. 10 இலட்சம் நடைமுறைச் செலவும் ஆகும்.

### காசநோய் ஒழிப்பு

ஐந்தாவது, ஆருவது திட்டக் காலங்களில் காசநோய் ஒழிப்புக்காக வட்ட நிலையங்களில் ('ச்செஸ்ட் கிளினிக்குகள்') மார்பு சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். மேற்கொண்டு 8 பி.சி.ஜி. பிரிவுகளும் அமைக்கப்படும். மக்கள் நல்வாழ்வுப்பணி ஆய்வாளர்களிடையேயிருந்து 1973–75 காலத்தில் காசநோய்க் கண்காணிப்பு ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பயிற்சி அளிக்கப்பட்ட பின்பு இவர்கள் வட்ட மருத்துவமனைகளில் அமர்த்தப்படுவார்கள். தொலைநோக்குத் திட்டக்கால முடிவுக்குள் ஒவ்வொரு மாவட்டத்திலும் காசநோய்ச் சிகிச்சை நிலையம் அமைந்துவிடும். இத்திட்டத்துக்குச் செலவு வருமாறு :—

(ரூபாய்கள் இலட்சத்தில்.)

| | | மூலதனச் செலவு. | நடைமுறைச் செலவு. |
|---|---|---|---|
| 1972–73 | .. .. | 4·79 | 2·40 |
| 1973–74 | .. .. | 5·86 | 1·14 |
| 5-வது திட்டக் காலம் | .. | 32·74 | 11·70 |
| 6–வது திட்டக் காலம் | .. | 64·50 | 26·40 |

மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரை புகுமுகமருத்துவ, புகுமுகப் பட்டப் படிப்பு, திருத்தப்பட்ட பாடத் திட்டத்தில் மாநிலத்தில் கலை விஞ்ஞானக் கல்லூரிகளில் தொடங்கப்படும் என்று தொலைநோக்குத் திட்ட அறிக்கை கூறுகிறது. உடற்கூறு இயல், உயிரியல், பையோ-கெமிஸ்ட்ரி ஆகியவைகளில் 18 மாத காலம் பிரிகிளினிகல் படிப்பு நடைபெறும். தேர்வு செமெஸ்டர் முறையில் இருக்கும். பிரிகிளினிகல் படிப்புக் கட்டத்தையடுத்து, பாராகிளினிகல் படிப்பு 18 மாதகால

மாக இருக்கும். நான்காவது ஆண்டில் கிளினிகல் படிப்பு மாணவர்கள் மாவட்டப் பொதுமருத்துவமனையிலும், பாலி கிளினிக் மருத்துவமனையிலும் 4 வார காலம் அமர்த்தப்படு வார்கள். இந்தப் பயிற்சித் திட்டங்களில், மாவட்ட மருத் துவ மனைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கு பெறுவார்கள்.




திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகியவைகளில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனைகள், போதனை வசதி உள்ள மருத்துவமனைகளாக ஆக்கப்பட்டு, 100 எம்.பி., பி.எஸ். மாணவர்களுக்குப் பயிற்சி தரத்தக்க ஏற்பாடுகள் செய்யப்பெறும். ஐந்தாவது 6-வது திட்டக் காலங்களில் இம் மாற்றம் நடைபெறும். இதற்குச் செலவு பின்வருமாறு:—

(ரூபாய்கள் இலட்சத்தில்.)

| | முதலீட்டுச் செலவு. | நடைமுறைச் செலவு. |
|---|---|---|
| 5-வது திட்டக் காலம் .. | 45·00 | 10·00 |
| 6-வது திட்டக் காலம் .. | 65·00 | 10·00 |

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, ஆகியவை முழுமையான போதனை வசதி உள்ள மருத்துவமனைகளாகும் வண்ணம் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்துக்குச் செலவு விவரம்.

(ரூபாய்கள் இலட்சத்தில்.)

| | முதலீட்டுச் செலவு. | நடைமுறைச் செலவு. |
|---|---|---|
| *1972—73* .. .. | 20·00 | 5·00 |
| *1973—74* .. .. | 20·00 | 5·00 |
| 5-வது திட்டக் காலம் .. | 70·00 | 20·00 |
| 6-வது திட்டக் காலம் .. | 150·00 | 45·00 |

சென்னை, மதுரைப் பல்கலைக் கழகங்கள், பல்வேறு மருத்துவத் துறைகளில் மேற் பட்டப்படிப்பு வல்லுநர்கள் ஆவதற்கு வசதிகள் செய்துள்ளன. சென்னைப் பல்கலைக் கழக ஆதரவில்அடையாற்றில் நிறுவப்படும் அடிப்படை மருத் துவ விஞ்ஞான நிறுவனம் (Basic Medical Sciences Institute) முழுநிறைவான, மருத்துவ மேற் பட்டப் படிப்பு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டும் என்று உத்தேசிக் கப்பட்டுள்ளது. மற்ற மேற்பட்டப் படிப்பு நிறுவனங்களில் ஏற்கெனவே உள்ள துறை இயல்கள் அல்லாத புதிய துறை இயல்களை அடையாறு நிறுவனம் மேற்கொள்ளும். இந்த மேற்பட்டப்படிப்பு நிறுவனத்தில் ஒரு பகுதியாகச் சிறிய அளவில் ''அண்டர் கிராஜுவேட்'' மருத்துவக் கல்லூரி ஒன்றும் அமைக்கப்படும். பட்ட மேற் படிப்பு மாணவர்கள் போதனைப் பணி ஆற்றவும் இது வாய்ப்பளிக்கும். இந்த நிறுவனப் பகுதியில் கிடைக்கக்கூடிய 150 ஏக்கர் பரப்பில் 500 படுக்கை வசதி உள்ள அரசினர் பொது மருத்துவமனை ஒன்றுகட்டவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தென் சென்னை மற்றும் சுற்றுப் பகுதிகளின் மருத்துவ நலத் தேவைகளை நிறைவு செய்யவும் இது பயன்படும்.

உணவுப் பொருட்களில் கலப்படத் தீமைகளைத் தடுக்க உணவுப் பொருள் கண்காணிப்புச் செயற்குழு (Food Control Cell) ஒன்றை அமைக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. உணவு ஆய்வாளர்களை நியமிப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தஞ்சாவூரில் ஒன்றும், மதுரையில் ஒன்றுமாக இரண்டு வட்டார ஊட்டச் சத்துணவு ஆய்வுக் கூடங்கள் தொடங்கப் படும். மாதிரிப் பொருட்களின் பரிசோதனைத் தரத்தை மேம்படுத்த இவை உதவும்.

உணவுப் பொருட்கள், இறைச்சி, பால், இவைகளைக் கையாளுவோர் தொத்து நோய்க் கூறுகள் எவையுமின்றி நல்ல உடல்நலத்துடன் இருக்கின்றார்களாஎன்று சோதிக்கப்பெற்று உரிமம் அளிக்கப்படுவார்கள். பால் விற்போர் அனைவருக்கும் உரிமம் (லைசென்ஸ்) முறை கொண்டு வரப்படும். நகராட்சிகள் அறிவிக்கின்ற இடங்களில் மட்டுமே அவர்கள் பால் விற் பார்கள்.

தனிப்பட்ட நபர் வருமானத்தில் 0.5 சதவிகிதம், நல வாழ்வு வரி விதிக்கலாம் என்றும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி நிறுவனங்கள் இதை வசூலித்து, சேவா நிறுவனங் களால் நடத்தப்படும் சிறு நல்வாழ்வு நிலையங்களின் நிதிக்குப் பயன்படுத்தலாம். மாநில அளவில் இப்படி விதிக்கப்படும் வரி மூலம் ஆண்டுக்கு ரூ. 4.8 கோடி வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.



## அளவான குடும்பங்களுக்கு வரிச் சலுகைகள் : புது வசதிகள் !

மக்கள் நல்வாழ்வுத்துறை பற்றிய 12 ஆண்டுத் தொலை நோக்குத் திட்ட அறிக்கையில், குடும்ப நலத் திட்டத்துக்கு ஊக்கமளிக்க சில புதிய ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏற்கெனவே உள்ள சலுகைகளோடு புதிய சலுகைகள் பற்றி அறிக்கை குறிப்பிடுவது வருமாறு :

வீட்டு மனை இடங்கள் ஒதுக்குதல் ; உயர் மட்டக் கல்வி, பல்வேறு காரியங்களுக்குக் கடன் வசதி ஆகியவைகளில் அளவான குடும்ப வழியை மேற்கொள்பவர்களுக்கு முன்னிடம் தருதல் ;

குடும்ப நலத் திட்ட அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் இம்முறையை மேற்கொண்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மருத்துவ நல்வாழ்வு வசதிக்காக, இலவசச் சிகிச்சைக்கான அட்டை வழங்குதல் ;

அளவான குடும்ப வழியைத் தாங்களாக மேற்கொண்டவர்கள், வசதிக் குறைவுப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருப்பின் முதியோர் உதவித் தொகை (பென்ஷன்) அளிப்பதில் சலுகை ;

குடும்ப நலத் திட்டத்துக்காக அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தகுதி வாய்ந்த தந்தையர், நல்வாழ்வு நல நிறுவனங்களில் அல்லது ஆரோக்கிய நகரங்களில் 6 நாள் வைக்கப்பட்டுப் பேணப்படுதல் ;

அறுவைச் சிகிச்சைக்கு அழைத்து வருவோர்க்கு ரூ. 10 வழங்கும் முறை அரசு ஊழியர்களுக்குத் தொடர்ந்து நீடித்தல் ;

அரசுப் பணியில் உறுதிப்படுத்தல் ; பதவி உயர்வு ; மேல் பயிற்சிக்குத் தெரிந்தெடுத்தல் ஆகியவைகளில் குடும்ப நலத் திட்டப் பணிகளில் சாதனையை ஒரு பகுதியாகக் கருதுதல் ; அரிய முறையில் பணியாற்றியவர்களுக்கு முன்னதாகச் சம்பள உயர்வு, சிறப்புச் சான்றிதழ், பரிசுகள் முதலியன வழங்கல் ;

பலரும் ஒன்றுபட்டுச் சிறந்த பணியாற்றிய வகையில் ஆரம்பச் சுகாதார நிலையம் போன்ற நிறுவனங்களுக்குப் பரிசு வழங்கல் ;

அறுவைச் சிகிச்சையில் குறிப்பிட்ட சதவிகித சாதனை காட்டிய கிராமங்களுக்கு, ரொக்கப் பணம் அளிப்பது மூலம் சமுதாயம் முழுவதற்கும் ஊக்கமூட்டுதல் ;

அளவான சிறு குடும்பம் உள்ளவர்களுக்கும், திருமணமாகாத வயது வந்த நபர்களுக்கும் வரிச் சலுகைகள் ;

இத் திட்டத்துக்கு நடைமுறைச் செலவு 1972-73-ல் ரூ. 50 இலட்சம் ; 1973-74-ல் ரூ. 50 இலட்சம் ; ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 60 இலட்சம் ; ஆறாவது திட்டக் காலத்தில் ரூ. 73 இலட்சம் ஆகும்.

தமிழரசு

16—1—1973 இதழின்

# இலவச இணைப்பு

தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை.




தமிழரசு
இலவச
இணைப்பு